பொன். சிவானந்தன்

# கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன். சிவானந்தன்

# கவிதைகள்

வெளியீடு :

கலை இலக்கிய அவை

மண்டூர்

விலை: 70/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BIBLIOGRAPHCAL DATA


| | | |
|---|---|---|
| TITLE OF THE BOOK | : | PON. SIVANANTHAN KAVITHAIGAL |
| AUTHOR | : | PON. SIVANANTHAN |
| LANGUAGE | : | TAMIL |
| EDITION | : | FIRST |
| COPY RIGHT HOLDER | : | AUTHOR |
| NUMBER OF COPIES PRINTED | : | 1000 |
| PRINTER | : | ILAMPIRAI OFFSET - MARUTHAMUNAI |
| COVER PRINTING | : | UNI ARTS - COLOMBO |
| COMPUTER TYPE SETTING | : | MICROSOFT ASIAN -MARUTHAMUNAI |
| PUBLISHER | : | KALAI ILAKKIYA AWAI - MANDOOR |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

உதரத் தொளிக்குள் உதிரம் வழங்கி,
குதறும் உலக இருளில் விளத்தச்
சுடருந் தமிழோடு பாலும் புகட்டிப்
படரவிட்ட அன்பன்னை **தங்கம்மா,** கூத்தியலும்
பண்பாடும், வாழ்நெறியும் சிந்தைக்குள் நிரப்பிய
மண் மணக்க வாழ்ந்த என் தந்தை
**பொன்னையா**
பெருமனங்கட் கிந்நூல் பெரிதல்ல, அஞ்சலி
தருகின்றேன் சமர்ப்பித்துத் தாழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தமிழ்மாமணி, தாஜ்-உல் அதீப் - கலாபூஷணம்,*

**அல்-ஹாஜ். எஸ். முத்து மீரான் - அவர்கள் வழங்கிய**

# அணிந்துரை

மானிட வாழ்வின் அவலங்களை, ஆசாபாசங்களை இதய சுத்தியோடு தரிசித்து, யதார்த்தமாகப் படைக்கப்படும் கவிதைகளே உலகில் காலத்தைவென்று நிலையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அப்படியான கவிதைகளைப் படைத்தளிக்கும் கவிஞர்களும் இறவாப் புகழோடு வாழ்கின்றனர்.

உலகில் மானிடத்தை நேசித்து, மக்களின் உயர்வுக்காகவும், அவர்களின் உள் உந்தல்களை உணர்ச்சி பூர்வமாகத் தொட்டுக் காட்டிப் பரிகாரந் தேடுவதற்காகவும் கவிதை படைக்கும் கவிஞனே கவிஞனாக உலகில் உணர்வுகளோடு வாழ்கின்றான்.

கவிதை என்பது ஒரு கவிஞனின் ஆத்மாவின் ராகங்கள். கொந்தளிக்கும் உணர்வுகளுக்கு அணிசேர்த்து அழகூட்டி அவன் எழுதுங் கவிதைகள் எங்களையெல்லாம் துடித்தெழச் செய்து துயரங்களை மறக்கச் செய்கின்றன. இதுவே சிறந்த கவிஞன் ஒருவனின் முத்திரையாகும்.

இயற்கையில் தங்குதடையின்றி, சலனமற்று நெளிந்தோடும் காட்டாற்றைப் போல் ஓடுவதே கவித்துவமாகும். ஆன்மாவின் முற்றத்தில் அகல் விளக்காகப் பிரகாசிக்கும் ஒரு நல்ல கவிதை, வீரனின் வாளாகப் போரிடலாம். மானிட நேசத்தைப் பறை சாற்றி நிற்கலாம், காதலின் தூய்மையைக் கோடுகிழித்துக் காட்டலாம். சிறுமைகளைக் கண்டு தீப்பிழம்பாகலாம். இப்பண்புகளை உள்ளடக்கி எழும் கவிதைகளே கவிதைகளாகும். வெறும் சொற் குவியல்களும், அர்த்தமற்ற படிமங்களும், விளங்கா வித்தைகளும் சேர்ந்து கவிதையென்ற பெயரோடு வந்தாலும், அவைகள் சிறந்த கவிதைகளாகி உலவ முடியாது. ஆனால் இந்நூலில் இடம் பெற்றுள்ள சந்தக் கவிஞர் பொன் சிவானந்தனின் கவிதைகளில் கவிதையின் பண்புகள் துலாம்பரமாகப் பளிச்சிடுவதைப் பார்க்கிறோம். மானிட வாழ்வில் மலிந்துள்ள சிறுமைகளைக் கண்டு சீறும் இக்கவிஞனின் "மூடுபனி விலகுகையில்" என்னும் கவிதை இவ்வுண்மையைப் படம் போட்டுக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கிலங்கை வாழ் கிராமத்துத் தமிழ் மக்களின் துயரம் நிறைந்த வாழ்வினைத் துல்லியமாக, மெல்லிய உணர்வுகளோடு படம்பிடித்துக் காட்டும் இக்கவிதை அவர்களின் வாழ்வியலோடு ஊறிப்போன பழக்க வழக்கங்களையும், பண்பாட்டுக் கோலங்களையும் யதார்த்தமாக ஓதுகின்றது.

கவிஞன் தான் பிறந்து வளர்ந்து விளையாடிய மண்ணையும், அம்மண்ணோடு விளையாடும் மண்வளச் சொற்களையும் ஜீவனோடு எடுத்தாண்டுள்ள பாங்கு, இதயங்களைக் குளிரச் செய்கின்றது. கவிஞன் கிராமத்தின் இயற்கையோடு சங்கமமாகி, அதன் எழிலில் கலக்கும் விந்தை புதுமையாக அமைந்துள்ளது. இது, இவன் கவித்துவத்திற்கு மணிமுடி எனலாம்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, கவிஞர் நீலாவணன், கவிஞர் புரட்சிக் கமால், மண்டூர்க் கவிஞர் சோமசுந்தரம்பிள்ளை, கவிஞர் அண்ணல், கவிஞர் திமிலைத் துமிலன், கவிஞர் இராஜபாரதி போன்றவர்களின் மரபு நிறைக் கவிதைகளோடு ஒப்பிட்டுச் சிலாகித்துப் பேசக் கூடிய தரமும், தகுதியும் நிறைந்த கவிஞர் பொன் சிவானந்தனின் கவிதைகள் அந்த நரம்புகளை வருடி, மானிட நேயத்தை அணைத்துச் செல்வதைக் காண்கின்றோம்.

"மூடுபனி விலகுகையில் ......." என்னும் கவிதையில் கவிஞனின் இதயத்தைத் தொட்ட அப்பாவி "சித்திரவேல்" எல்லோருடைய உள்ளங்களையும் தொட்டுக் கசியச் செய்து விடுகிறான். அவனோடு நாங்களும் சேர்ந்து போய் அவன் வாழும் பொருக்குக் குடிசையில் வாழும் உணர்வுகளை ஏற்படுத்தி அவன் இயற்கையோடு ஒன்றித்த கிராமத்து வாழ்வையும், அதைச் சுதந்திரமாக அனுபவிக்க முடியாத துயரத்தையும், அடிமைச் சுமையையும் கீழ்வரும் கவிதை அடிகள் மூலம் உயிரோடு காட்டி வெற்றி பெறுகிறான், இக்கவிஞன்.

"நாய்போலக் கை செருகி நல்லாப் படுக்கா நீ" கவிஞனின் கவித்துவமும், அதன் ஆளுமையும் மேற்கூறப்பட்ட அடிகளினால் செழித்து நிற்கின்றன.

"நாளை விடியும் மூடு பனியும் விலகப் பாளை வெடித்துப் பழுக்கும் குரும்பட்டி காண நடக்கின்றான்" என்ற கவிதை அடிகள் கவிஞனின் உள்ளார்ந்த முற்போக்கு உணர்வுகளையும், விலங்கை உடைத்து வெளியேறும் சுதந்திர வேட்கையையும், உயர்ந்த இலட்சியங்களுக்காகப் போராடும் பண்புகளையும் பறைசாற்றி நிற்கின்றன. அடிமைக்கூட்டில் கிடந்து குமுறும் தமிழ் பேசும் மக்களின் ஓயாத் துயரங்கள் நீங்கி, அவர்களின் வாழ்வு வளம் பெற இறைஞ்சும் கவிஞனின் இதயத்தை கீழ்வரும் "புத்தாண்டே வாழ்வு தாராய்" என்னும் கவிதை சிறப்பாகக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"காதலெனும் மென்காற்றில் இயையோர் சாயக்*
*காவெல்லாம் தேன்பழத்தின் குலைகள் தூங்க*
*வாதமெல்லாம் ஆதவன் முன் பனியாய் மாற*
*வாசனையும், பூசனையும் மண்ணில் ஊறச்*
*சாதனைகள் தூயனவாய்ப் பரிமளிக்கச்*
*சஞ்சலமும் காழ்ப்புணர்வும் சரிந்தேமாயப்*
*பாதகங்கள், பசி, களவு கொலைகள் தேயப்*
*பணிகின்றோம் புத்தாண்டே வாழ்வுதாராய!"*

கவிஞரின் "நிமிர்வு" என்னும் கவிதை, போக்கிரி அரசியல் வாதிகளையும், அவர்களின் பித்தலாட்டங்களையும், பார்த்துக் காறி உமிழ்கிறது. கிராமத்து மக்களோடு மக்களாக வாழ்ந்து அம்மக்களின் இயற்கை வாழ்வில் இனிய சுகங்கண்ட இக்கவிஞன்தான் அனுபவித்து இன்பங் கொண்டாடிய கிராமியச் சூழலில் காணும் "தத்துக் குறட்டை", "விரால்", "பொட்டியான்", போன்ற மீன்களையும், அவைகளைக் கிராமத்து மக்கள் வடித்துப் பிடிக்கப் பயன்படுத்தும் "அத்தாங்கு" என்னும் சிறுமீன்பிடி உபகரணத்தையும், உருவகங்களாகக் கொண்டு, அழகான உயர்தத்துவ மொன்றை இக்கவிதை மூலம் உறுக்கிக் காட்டியுள்ளான். இது கவிஞனின் ஆளுமையையும், அவன் அரசியலை நுணுகும் நோக்கையும் துல்லியமாகக் காட்டுகிறது.

இம்மரபுக் கவிஞன் அதன் நெறி தவறாது இயற்கையின் வண்ணத்தையும், வனப்பையும், மிடுக்கையும் "கடற்கரைக் காட்சி" என்னும் பாடலில் எடுப்பாகக் காட்டுகின்றான். இங்கே நயமும் நளினமும் எழில் காட்டுகின்றன.

*"கமுகுமரக் கன்னியவள் பாளையாகக்*
*காட்சிதரும் கணவாயின் ஓட்டுப்பாடு*
*கமகமத்து மணக்கின்ற தாழைக்காடு*
*கரையினிலே தோணாவை அண்டிமண்டும்*
*தமக்கெனவோர் விறைப் போடே தளைத்து நிற்கும்*
*"தலை பத்தோன்மீசைஷீஷீ என்ற வரண்ட புற்கள்*
*சமப்படுத்த அடம்பிடித்தே அடம்பும் ஆங்கே*
*சமச்சீராய் இலை விரித்துக் காட்டி நீளும"*

கடற்கரைச் சூழலை யதார்த்தமாகக் காட்டிய இக்கவிஞன் கீழ்வரும் தன் "அழகின் சிதைவு" என்ற கவிதையில் காதலைப் பாடும் பாங்கும், அவன் இளமையை ரசிக்கும் முறுக்கும் நறுக்காக அமைந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொன்னியந்த வளவூர் நிறைந்துள்ள
புதுவசந்தத்தின் தோற்றத்தை வென்றவள்
கன்னம் மாதுளை வார்த்த கனியென்றால்
கனிவுப் பேச்சிதழ் முண்முருக் கீன்ற பூ
அன்னமின்னா அளித்த பழவுடல்
ஆசை பாய்ச்சும் வெருட்சி விழி, நகை
பொன்னின் தங்க நகையெதும் பூண்டிலள்
புதுமைத் தென்றலை வாடகை பெற்றவள்"

கிராமியச் சூழலில் மலிந்துள்ள பழங்களையும், பூக்களையும் உவமையாக்கி, காதலைச் சுவைத்த கவிஞன் "பரீட்சைக் களம்" "தலை தப்பியது தம்பிரான்" ஆகிய கவிதைகளில், தற்காலம் அரசாங்கப் பரீட்சைகளில் நடைபெறும் குதிரையோட்டம், குழறுபடி, குத்துவெட்டுகளை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டிக் கேலி செய்கிறான். தூய்மையான ஒரு ஆசிரியனின் உள்ளத்தையும், அவன் துணிவையும், இக்கவிதைகளில் காணலாம்.

வரலாற்றுப் புகழ் பூத்த மண்டூர்க்கிராமத்தின் சூழலில் ஓடி விளையாடித் திரிந்து, அதன் இயற்கை எழிலுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இக்கவிஞன், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் பிறந்தகத்தை இருப்பிடமாகக் கொண்டு வாழும் பாக்கியம் பெற்றதனால் இவன் கவிதைகளில் கிராமிய மண்வளமும், மணமும் கலந்து இனிக்கிறது. கவிஞன் நீலாவணனுக்குப் பின் இவனே கிராமத்து மக்களின் மண்வளச் சொற்களைக் கையாண்டு அம்மக்களின் வாழ்வியலைப் பற்றி ஆழமாகத் தரிசித்து வெற்றி பெற்றுள்ளான் எனலாம்.

நாடளாவிய ரீதியில் நடைபெற்ற பல கவிதைப் போட்டிகளில் முதற்பரிசில்கள் பெற்றுள்ள இக்கவிஞன் வாழுகின்ற வரலாற்றின் காலகட்டம், தமிழ் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள், அவற்றை உருவாக்கிய அரசியல் சமூக சக்திகள், யாவும் துல்லியமாகவும், அழுத்தமாகவும் தன் படைப்புக்களில் கொணர முன்வரவேண்டும், என்று நட்புடன் கேட்டு, கவிஞர் பொன். சிவானந்தனுக்கு என் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"பேர்ள்"
நிந்தவூர்.

**எஸ். முத்துமீரான்**
(சட்டத்தரணி, ஜே.பி.யூ.எம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசலில் நிறுத்தி, சில வார்த்தைகள் பேசி...

தமிழிலக்கியத்தில் தொடர்ச்சியான கவிஞர் பணிகள் ஆற்றப்பட்டுள்ளன. கவிஞர்களை மொழி தோற்றுவிக்க, கவிதைகளைக் காலந் தோற்றுவித்தது. காலமென்பது நிகழ்வை வெளிக் கொணர்வதாயினும், உயிர் வாழு முரிமையைவிட்டுக் கவிஞன் எதைச் செய்வது? உலகப் போர்களை முடித்துக்கொண்டு சுதந்திரத்தின் போலி உரிமைகளைப் போர்த்துக்கொண்டு, இயக்கங்களற்று, நுகர்வுக் கலாசாரத்தின் சந்தையாகிப் போன இந்தப் பூகோளப் பரப்பு, பூகம்பங்களை கீழே வைத்துக்கொண்டு மேற்பரப்பில் பூமலர்த்துகிறது. கெட்டிப்பட்டு இறுகிப்போன இன்றைய சமூகச் சூழலில், நான் என்னை அடையாளப்படுத்துவது அபூர்வமானதுதான்.

"நன்றும் தீதும் பிறர்தரவாரா" என்ற தொடர் என்னைத் தளைந்துள்ளதால் நான், மாரீச, துரியோதன, இராவண, துச்சாதனத்தனங்களை ஏற்பதில் உடன்பாடில்லாதவன். 'இடிஅமின்' நடைமுறையை நடத்தையில் காட்டா விட்டாலும், எண்ணத்தில் அப்படியான உணர்ச்சிகளை பொத்தி, அடுக்கி வைத்திருப்போர் மத்தியில், காலத்தை உரசிக்காட்டும் யதார்த்தச் சிந்தனைகளைச் சித்திரங்களாகக்கக்க நிமிரும் எழுது கோலை விரல்கள் வழுக்க விடுகின்றன.

இங்கே வெளிக்கொணரப்பட்டுள்ள சமூக விரோதச் செயல்களால் நம் வாழ்வும், நாமும், கொச்சைப்படுத்தப் படுகிறதென்பது மட்டும் உண்மை. இந்தக் கறையான் தனம் எம்மத்தியிலிருந்து அகற்றப்படுவது முடியாதெனினும், 'இப்படித்தான் வாழ்ந்தோம்' எனக் கூறும் ஆவணமாக இத்தொகுதி இனங்காட்டலாம். வெறுமை நோக்கிய தனிமனித மேம்பாட்டுக்கான பொருளாதார முன்னேற்ற மையத்தில் நின்று, தன்னை முன்னேற்ற நஞ்சு குடிக்கவும் தயாரான, நேரம் போதாத இயக்கத்தில் 'இன்பம்' காண்கிற சமூகத்தை அறுத்துவீழ்த்தி, உறவாடலுள்ள கூட்டமாக வாழ்விக்க முடியாதென்பதும் நிச்சயமான தென்பதால், உள்ளே என் உந்துதல்கள் சில விடைகளையுந் தேடியுள்ளன.

இப்படியொரு தொகுதி வெளியிடுதல் பற்றி நான் மென்மையாக நினைத்திருந்த போதும், அதைக்கடினப்படுத்தி, விரைவாக்கி செயலுருக்கொடுக்கத் தூண்டிப், பணச்செலவின் பெரும்பகுதியை முதலுமிட்ட என் இரத்த உறவுகளின் "மண்டூர் கலை இலக்கிய அவையின்" இள நெஞ்சங்களுக்கு என் நன்றியறிதலையும், கவிதா சத்தியின் ஆசிகளையும் முன்வைக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணியறைந்து, சட்டகமிட்டுக் கொழுவி வைக்கக்கூடிய அணிந்துரை வழங்கிய நண்பர், சட்டத்தரணி, தமிழ் மாமணி எஸ். முத்துமீரான் அவர்களுக்கும், பின் அட்டையில் அறிமுகஞ்செய்த சோதரர் இரா-கிருஷ்ணப்பிள்ளை அவர்களுக்கும், இந்த முயற்சியின் மீது அக்கறைகொண்டு தங்கள் உதவிகள் மூலம் பணச்சுமையை எனக்குக் குறைத்த காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய நிருவாகம், காரைதீவு விபுலாநந்த ஞாபகார்த்தப் பணிமன்ற ஆட்சிக்குழு ஆகியவற்றிற்கும், இதன் பிரதிகளை எழுதித்தந்த மகள் பகீரதிக்கும், இது நேர்த்தியாகவும், அழகாகவும் வெளிவர அச்சிட்டுதவிய **மருதமுனை இளம்பிறை அச்சகத்தாருக்கும், கணனி வடிவமைப்புச் செய்த மருதமுனை மைக்றோ சொப்ற் ஏசியன் நிறுவனத்தினருக்கும்,** மற்றும், இதயங்களால் இது கண்டின்புறும் அன்பர்களுக்கும் என் மனங்கனிந்த நன்றிகள்.

*"பொன்னகம்"*
*காரைதீவு -04*
*99-04-10*

**- பொன். சிவானந்தன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பே சிவம் அதுவே நலம்"

*சித்தாந்த வித்தகர், அருட்கவியரசு, விஸ்வப்பிரம*
*ஸ்ரீ.வை.ஈ.எஸ். காந்தன் குருக்கள்* **(கண்மணிதாஸன், ஏரூரான்)**
*அவர்கள் உளம் கனிந்து வழங்கிய*

# வாழ்த்துரை

மட்டுநகர் அன்னையின் மணிவயிறு வாய்த்த மங்காத புகழ்பதித்த கவிஞர்கள் வரிசையிலே பொன் சிவானந்தன் அவர்களின் பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது. அவர் பிறந்த தில்லைமண்டூர் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, கல்விக்கடல் ப. சந்திரசேகரம், கவிஞர் மு. சோமசுந்தரம்பிள்ளை, பண்டிதர் வீ.சீ. கந்தையா போன்ற அறிவுசால் பெருமக்களைத் தந்த தமிழ் நிலம் தில்லைமண்டூர். திருமுருகன் தமிழ்க்கடவுள் அல்லவா? "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்" எனும் அருணகிரியாரின் திருவாக்கு நம் சிந்தைக்கு விருந்தாகட்டும். "மண்டூர் கந்தனடி மண்ணும் கவிபாடும்." அந்த மண்தந்த மைந்தன் இந்நூலில் ஆசிரியர் பொன் சிவானந்தன். அன்னாரால் காலத்துக்குக்காலம் எழுதப்பட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட கவிதைகளை உள்ளடக்கி வெளிவரும் இக்கவிதை நூல் அன்னாரை ஈன்று புறம்தந்த தாயின் தனிப்பரிசாக, மண்டூர் கலை இலக்கிய அவையினரால் வெளியிடப்படுகின்றது. அன்னாரின் கவிதைகள் காலத்தால் அழியாத கவிதைப் பொக்கிசங்கள். "தமிழோடு வாழ்பவன் சாவதில்லை" என்பதற் கொப்ப இக்கவிஞரின் தமிழ்க்கவிதையின்பம் சாகாவரம் பெற்றது. இலக்கிய நெஞ்சங்களில் இனிக்கின்ற அமுதரசம். இவரை மணமகனாக ஏற்றுக்கொண்ட மண் முத்தமிழ் வித்தகன் விபுலாநந்தனை ஈன்றெடுத்த புனித பூமியாம் காரைதீவு. மண்டூர்க் கந்தன் அடியில் ஊற்றெடுத்த இந்தக் கவிதைப்பேராறு, காரேறுமூதூர் கண்ணகைத்தாயின் காலடியிலே ஓடிக்கலக்கிறது. நல்ல விதைகளான கவிதைகளை நன் நெஞ்சங்களில் விதைப்பதற்கு நூலாகி நிற்கிறது. இக்கவிதைத் தொகுதியில் உள்ள கனிந்த கனியில், கவிதைகளை உள்ளத்தேவிதைத்து, உணர்வடைந்து பொன்சிவானந்தன் கண்ட கவிதைத்தாயின் நல்லாசி தமிழருக்குக்கிடைத்து. பிறமொழியிலும் காலங்கடந்தாகினும் வெளிக்கொணரப்பட்டு எல்லோர்க்கும் விருந்தாகி, இயல்நடையில் மருந்தாகி, இக்கவிதையை அருந்துபவர்க்கு அழியாத ஜீவாமிர்தமாகச் சிந்தித்துத் திகட்டும் என்று வாழ்த்தி,

"நன்கவிதைத் தேன்துளியை நமக்களித்து
நன்நலங்கள் நற்றமிழின் சொல்லறங்கள்
இந்நிலத்தில் இனிக்கட்டும் இக்கவிதை ஊற்றால்"
பொன்சிவானந்தன் புகழ் ஓங்கிப் பொலிக!

*ஸ்ரீ காளிபுரம்*
*பெரிய போரைதீவு 30-05-1999*

*இவ்வண்ணம்*
**விஸ்வப்பிரம்ம ஸ்ரீ காந்தன்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

மண்டூர் கலை இலக்கிய அவை தமது நூல் வெளியீட்டு வரிசையில் இரண்டாவது வெளியீடாக பொன்சிவானந்தன் கவிதைகளை உங்கள் கரங்களில் தவழ விடுவதில் பெருமகிழ்வடைகின்றது.

ஈழத்துத் தமிழ்க்கவிதை இலக்கியத்திற்கு பங்களிப்பு நல்கிய மூத்த கவிஞர்கள் வரிசையில் தனித்துவமானவராக விளங்கும் கவிஞர் பொன் சிவானந்தன் அவர்களின் கவிதைகள் 1970களில் இருந்தே பத்திரிகைகள் சஞ்சிகைகள் பல வற்றிலும் வெளி வந்தபோதிலும் கவிதைத் தொகுதியாக வெளிவருவது இதுவே முதல் தட்வையாகும்.

எமது வேண்டுதலை ஏற்று தமது கவிதைகளை தொகுத்து வழங்கிய தோடல்லாமல் பல வழிகளிலும் எம்மோடிணைந்து இலக்கியப் பணி யாற்றிவரும் கவிஞருக்கும், என்றென்றும் எமது பணியை வரவேற்று பாராட்டி ஊக்குவித்து வரும் மண்டூர் மக்களுக்கும் கலை இலக்கிய அவை இதயம் நிறைந்த நன்றிகளை தெரிவித்து மகிழ்கின்றது.

கலை இலக்கிய அவை
மண்டூர்
10-04-1999.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டூர் முருகன்

கண்ணப்பன் பரம்பரைக்குக்
காட்சியளித்த சிவனார்
வண்ணமகன் பாலமுருகன்- மண்டூர்
நண்ணியொருவே லொளியாய்
நாடித்தில்லை மீதமர்ந்தான்
கண்டவர் கண்ணப்பர் குலமே - கொண்டோர்
கோயில் சமைத்தார் குழைகளே

வீதி யெல்லாம் வண்ணமயில்
தோகை விரித்தே பெருக்கிச்
சோதியருள் பாயவிஞ்சுதே - கந்தன்
வீதிவலம் வந்தருள
வாகனஞ்சில உண்டிங்கே
வேதியாரின் பூசையில்லையே- வேந்தன்
சின்னக் கதிர்காமமிதுவே.

ஆவணியின் பூரணையில்
ஆடுவானோர் தீர்த்தமிவன்
சேவடிகள் போற்றவருவார் - வாய்கள்
பாவடிகள் பாடிவர
மூ வெழு திரு விழாவாம்
காவடிகள் கோடிவருமே - நோய்கள்
தீவட்டியிலே கருகுமே

மீனிசைக்கும் வாவியிலே
'வேய்' எனும் ஆறோடிவந்து
தேனுந் தினைமாவுமெனவே - சேரும்
வானமுதத் தீர்த்தத்தாலே
வல்லபிணி தீர்த்தருளும்
ஞானவடிவாம் முருகனைப் - பாரும்
நீடித்தருள் தந்துரட்சிப்பான்.

- இலங்கை வானொலி பக்தரஞ்சனி - 1981-01-30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைப் பிச்சைகள்

எண்ட குறிச்சி விதானயிற்றப் போயொருநாள்
எண்டமனேய், இப்பநெக்குக் கால்கை வழக்கமில்ல,
வட்ட, களவட்டி, சேன இதிலயெல்லாம்
தொட்டுத் திறாவித் திரிஞ்சி இரபுறக்கித்
தின்ன இனி ஏலா; நானும் தனி மனிசி
பொன்னன் ஒருவன் இருந்தான் மகனாக
'எங்கயோ' போனான், திரும்பல்ல என்ன செய்வன்?
உன்ர கவுண்மேந்து தாறானாம் பிச்சையெண்டு
'வண்டண்ட சின்னான்' வரக்காட்டி உன்னிட்டச்
செல்லட்டா மெண்டான் அதுதான், 'மனேய்' வந்த
எல்லாம் உனக்கிட்டச் சொல்லிற்றன் வேறென்ன
வேணும் மனேய் "எண்டன்" கூப்பன் கொணந்தயா
காணும் அது தேவை" எண்டான். கவனமா
"ஓம்மனே இன்னா மடிக்குள்ளான் வெச்சிரிக்கான்"
கும்மெண்டும் பேசாம வேண்டி எடுத்திற்றான்
ஒள்ளுப்ப நேரம் அதப்பாத்திருந்துற்றுக்
கள்ளனப் போல கடக்கண்ணால் என்னப்
பாத்து ஒரு கதயச் சென்னான் சிரிப்புத்தான்!
"நேத்தும் ஒரு மனிசி வந்தாவு "பிச்சைக்கு"
அந்த மனிஷிக்கு இப்படித்தான் சொன்ன நான்
இந்த விஷயத்தச் செய்து முடிச்சிற்றால்
உனக்குகிடைக்கிற சம்பளத்தை முன்ன முன்ன
எனக்கு தரவேணும் அப்படிச் செய்வதெண்டால்
பிச்சைப் பணமெடுக்க நான் போம் நிரப்புவன்"
சொச்சமென்ன கேக்காகா? சோக்கான உத்தியோகம்
நான் பிச்ச கேக்க எனக்கிட்டப் பிச்சையெண்டு
"வீங்கி"ப் பேய் கேட்டா எவன்மனே மெய்மெய்யாப்
பிச்சையெடுக்கான்? பேருக்கு நாங்க தான்
மச்சத்துக்குள்ள தயிரு.

1979 ஆடி 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயிலின் வாக்கு மூலம்

நாங்கள் யதார்த்தங்கள் நாளெல்லாம் மெட்டுகளில்
தேங்கும் இதயங்கள். ....... தூங்காத பாச் செய்வோர்.
பாட்டோ, குரலோ படியாச் சில ரெம்மைச்
சேட்டையாய்ச் சீண்டி வரைபடம் கீறுவர்.
பூட்டுக் கதவில்லா வீடுபோல் தீட்டான
கோட்பாட்டில் நின்று கொலுத் தேடும் அர்ஜுனர்கள்
வில் முறிக்க ஏலா இராமர், விடி நிலவை
" நல்லா விடிந்ததென" ஏமாறும் பேதை
இவர்களுக் கேங்கி அனுதாபச் சீட்டில்
உவர் நீர் உகுத் தெழுத எங்களுக்கு வேளையில்லை
காற்றைச் சுகமாய் சவாசிக்கக் கூட இங்கே
தோற்றுச் சுதந்திரம் சூனியமாயப் போனதேன்?
பூமியிலே நித்தியமாய் வாழும் இலக்கிய
வாரியிலே எங்கள் பெயர் வாலாய மாயிற்று.
வள்ளுவத்தில் துள்ளும் இரு அறங்கள் ஒன்றிணைத்துப்
புள்வடிவில் வாழ்ந்து புதுக்குகிற சோதிடர் நாம்.
கம்பிக்கூட்டுக்களிருந்தும் காற்றை வெளிவிசிறும்
மின்விசிறி நாங்கள் விசையாய்ப் பொதுப்பணிதான்.
வீடோ, குடிசையோ, மாளிகையோ சொந்தமாய்த்
தேடோம். குளிர்தளிரெம் தாய்வீடு, பந்தமில்லை
இன்பக் குரலால் இனிப்புஞ் சுவையுமுள்ள
மென்பாட்டும் கத்தல்களும் மேலெடுத்து மீட்டுகிறோம்.
என்றும் வசந்தத் துமிகளே எம்முதுசொம்
அன்போடு எங்கள் பரம்பரையை வாழ்விக்க
தந்திரியாம் காகத் தினமறியாப் புத்தியை
அந்திபடும் வேளை மந்திரித்து வென்றெடுப்போம்.
வஞ்சனையுந் தேடல்களும், வாழப் பொய் கூறுவதும்
இஞ்சித்துமில்லை நாம் கீதை வழி நடப்போர்.
பற்றில்லா வாழ்வின் படிப்பினையைப் போதித்து
நிற்கிறோம்..., எங்களுக்கும் பிள்ளைகுட்டி யுண்டுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவர்களுடன் அர்த்தமற்ற பற்றுகளை
ஊனுருக ஏற்றி உறவாடி மாய்வதில்லை.
எங்கள் மனத்தேரில் ஆசைக் கொடிமாயை
தங்கிப் படர அனுமதியோம். இல்வாழ்வில்
சந்தோஷ வாகனத்தின் சாரதிகள் நாம் நளின
சந்திரர்கள். பிந்தி முந்திப் பேயாய் அலைவதில்லை
வாழ்வின் நிலையாமை கண்ட விடி வெள்ளி நாம்.
கீழான சாக்கடைச் சீதனங்கள் "நோண்டி" நிறை
பாழாக்கிப், பட்டம் பதவிதர நாம் வாங்கோம்.
தோளில் சுமையோ துயரோ அழுத்தாது
காதல் அடையாளம் கயமைப் படாதிருக்க
வேத ஒலிபாய்ச்சும் வித்தகப் பேச்சாளர்.
குஞ்சாய் வளருகையில் காக்கைகள் தீற்றிய
கஞ்சல் கழிவுகளைக் "காணாமல்" தின்றதுண்டு
புத்தி தெளிவில்லாப் பேதலிப்பே ஜீரணமாம்.
சத்தியமாய் மீளச் சமிபாட்டில் சேர்த்ததில்லை.
பாட்டும் பழங்களுமோ பாராட்டுந் தற்துணிவு.
நாட்டின் பழமொழி எம்மைப் பொறுத்தமட்டில்
தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டல்ல-
கூட்டுப் பழக்கம் குரல் வரு மட்டுமே!
காக்கைக் குலமெம்மைக் கொத்தித் துரத்தினும்
தாக்குப் பிடித்துத் தணிகிறோம் ஆணவம்
காவியக் கலசமாய் ஓவியப் புனிதமாய்
மேவிநின் றுயர்ந்த மேதைகள் நாங்களே!
எங்கள் பெயரில் எழும்பிய நகல், நிறம்
மங்கினால் ஓர்வர் மதிப்புள்ள போலியை,
மானிடம் கூனலாய் மாய்வதைக் காண, எம்
மாந்தளிர்ப் பெட்டகம் கருகிச் சுருளுது
சோர்ந்த மனித மனங்களுக்காக எம்.
உள்ளங்கள் பள்ளங்க ளாகாத பாய்ச்சலை
அள்ளி யிறைத்தோம் அணிக!

*1980-04-03*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிகள்

ஐயரும், ஔவையும், அய்யராய், அவ்வையாய்
ஆகி ஒலிப்பது இலக்கணப் போலியாம்.
அய்யா தமிழ் மொழி விளக்கினார். போலியைப்
"போல" என்கிற பதத்தால் விளங்கினேன்.
மெய்யாய் மானிடப் போலிகள் மிகப்பல
மலிந்த பூமியில் "மொழியில் முப்போலியே"
உய்விலாச் செயல்களை உண்மையாய் விளம்பித்
தன்னையே போலியாய்த் தாழ்த்தும் நாளிது.

நினைவுகள் கொணரும் நிர்மலச் சிந்தனை
நீக்கி, அதற்கொரு பொய்யுடை அணிவித்து
அனைவரும் நம்புதற்கான "மை" அப்பி
ஆர்வமாய்க் காட்டுவார் அதுவும் போலியே!
மனத்தணல் ஒளிரும் மகிழ்ச்சி ஜோதியை
மறைக்கும் சாம்பராம் பொய்யும் போலியே!
கனத்த எதிர்மறை ஏமாற்றுக் காய்களால்
இணக்கம் நுகர்ந்தின் புறுதலும் போலியே!

"சக்களத்தி" எனச் சாடும் சொற்களின்
சாரமே போலியாய் வேடமிட்டாடித்
தக்க சொல்லாட்சியால் குறைகளைப் பூசி
நிறைகளாய் காட்டும் அறிவும் போலியே,
"மக்களும்" மடையனும் யாரால் பிறந்தான்
குறையெனக் குறுக்கும் போலிகள் செயல்களால்
தக்கவன் தகானாய் கீழ்நிலைப்படுத்தத்
தந்தவை இலக்கணப் போலியின் தடமோ?

போலிகள் நம்மிடை மிக மிக மலிவுதான்
தேடலில், ஆட்சியில், இதன் செயல் அமர்க்களம்.
வேலிகள் தூர்ந்த தோட்டமாய்ச் சனங்கள்.
வேதனை எருமைகள் நார்களாய்க் கிழிக்குது.
கூலி வாங்காத காவல் நாய் போல
குரக்கனாய் "திரிகை"யில் அரைபட்டு "மாய்
மாலங்களாலே" வெருட்டி நசிப்பதும்
மனஞ் சுவைக்காத மறுதலைப் போலியே!

1980-02-09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கொரு வகுப்பேற்றம்

*மார்கழி தொடங்கிற்றென்றால் வருமொரு பரீட்சை, "ஏற"*
*கூர்மையாய் விழிகள் மேய, கேள்விகள் உருட்டும் நெஞ்சை.*
*ஆர்வங்கள் உதைப் பெடுக்க அத்தனை வினாக் கொத்துக்கும்*
*சோர்வின்றி விடைகள் தேடிச் "சுறங்கை"யாய் அடுக்கி வைப்போம்.*

*மனமேசை பரவியுள்ள "மடை"யென எழுந்த எண்ணக்*
*கனமெலாம் காகிதத்தில் கக்குவோம் பேனாவாயால்*
*இனியென்ன "எங்கள் ஐயா" எடுத்தந்தத் தேடல் பார்த்தால்*
*ஜனித்திடும் "செந்நிறத்துப் பழமெலாம்" திருத்தித்தோடே.*

*"தை" வந்தால் பொங்கலோடு கையிலே "பொலித்தீன்" பையில்*
*"பையவே" ஏறும் நாங்கள் ஏறிய வகுப்புக்கான*
*மெய்யுறை புத்தகங்கள், மிடுக்கோடு எடுத்துப் போவோம்*
*தொய்விலா உணர்வினூட்டம் தொடருமெம் நிழல்களாக.*

*மார்கழி கழிவதேபோல் நாங்களும் கழிவுதானா?*
*பார்வைக்குப் பாடசாலை. வேண்டிய வசதியில்லை.*
*வேர்த்திடுமுள்ளத் தோடே, விளக் கெனுங் கல்வியாலே*
*போர்க்கிறோம் எம் மனத்தைப் புழுக்கமே தொடருதிங்கே!*

*மார்கழி கழிந்தால் மீள மார்கழி வராதா எம்மைப்*
*பாருங்கள் எங்கள் பையில் கிழிசல்கள், அழுக்கு, "பொத்தல்"*
*யாருக்குந் தீமையெண்ணாப் பிஞ்சுகள். எதிர்காலத்தைச்*
*சீர்செய்ய உதவுங் கல்விச் "சித்திர வர்ணம்" செய்வோர்.....,*

*"உளவியல் கற்றோர்" எங்கள் உளமறிந்துதவி செய்தால்*
*அளவிலா மகிழ்வோடெங்கள் அறிவினைப் புதுக்கி வாழ்வோம்*
*"சுளகிலே எம்மைப் போட்டுப் புடைப்பது" போலச் செய்து*
*சிலரிடம் பரிவு காட்டிச் சிதைக்கு மாசானுமுண்டு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றப் பாடசாலை, கூடிய"தரமோ" ஐந்தே.
துடிக்கிறோம் படிப்பதற்குத் தொலை சென்று நுட்பம் கற்க
"மடியிலே கனமுமில்லை", மற்றவர்போல் "ரியூஷன்"
படிப்பதன் அருமை தேராப் பெற்றோருக் கிதுவிளங்கா!

"உடலுக்குப் பசி"யோ டெங்கள் "உளத்துக்கும் பசி"தான் நாளை
விடிகின்ற வேளை எம்மாற் சிந்திக்க இயலா "மாற்றம்"
படையென எதிரே "கண்டு பிடிப்புக்கள்" திகைக்க வைக்கும்.
"அடக்கித்தான் ஆளுகின்றார்" எம்மை நாம் இழக்கின்றோமா?

அய்யாமார் இரண்டுபேர்தான். அவர்களும் வேற்றூர் தூரம்.
செய்கைகள் மூலம் கற்றல் செய்தெமை உயர்த்த வேண்டித்
தையிலே சபதமேற்றுத்தவிப் பொடு செல்லவுள்ளோம்
உய்வுகள் எமக்குந்தேவை. "உம்பிள்ளை போல்தான் நாமும்"

"சின்னவர்" வாழ்வை எண்ணாப் "பெரியவர்" மலிந்த மண்ணில்
உன்னித்தான் கிளம்புகின்றோம் உள்ளத்தால். உயர்வேயில்லை.
"முன்னைய வாழ்வின் சாயல்" தொடர்கதையாக நீட்டி
"என்னமாய்ச்" சிறுவராண்டை ஏற்றிக் கொண்டாடினார்கள்.

06-01-1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் குருடர் ?

அண்ட வெளிப்பார்வையால்
அகிலம் அச்சில் ஒழுக்கில் உருளுது.
கிரகங்களின் பார்வைகள்
மனித வாழ்வில் ஆட்சி செய்வதாய்
சாத்திரம் விளம்புது.
பொறிகளைந்து விழிகளாலானவை.
ஸ்பரிசம், மணம், சுவை, ஓசை, பார்வை
நரம்புத்தந்திகளால் மூளைக் குணர்த்த.....,
தமக்குச் சொந்தமில்லாத
உணர்வுகளை ஏந்தி
எங்கோ இயங்கும் சிந்திப்புத் தலைவனுக்கு
வழங்கும் பொறிக்கண்கள் உடலின் கண்கள்.
வாங்கிய மனத்தின் கண்களால் எடுப்பவை
செயலாய், நடத்தையாய்.............

கலியாணச் சடங்கன்று
ஊனக் கண்களைத் துணியாற் கட்டியவள்
காந்தாரி.........,
மகன்துரியன், பதினெட்டாம் போருக்கு
போகவுள்ளானென அறிந்ததும்,
பிறந்த மேனியனாய் அவனை வரச் சொல்லி,
கண்களை அவிழ்த்த பொழுது ..........,
அவன்தன் அரையில் வாழையிலை மடலைக்
கட்டியிருந்ததால் அப்பகுதிக்குள்
பார்வையின் வலுப்பாயாமல் விட்டதும்
இறப்புக்குக் காரணமாயிற்றென்பது
இதிகாசத் தத்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவித்திரி சத்தியவானை மீட்டதும்,
ஊர்மிளை இலக்குவனைப் பிரியாமல்
பதினான்காண்டு வாழ்ந்ததும்,
அரிச்சந்திரன் சத்திய விரதனானதும்,
மனக் கண்களின் ஒத்துழைப்பே.

பாம்பைப் கயிறாகவும்,
கயிற்றைப் பாம்பாகவும்,
ஒரு சந்திரனைப் பலநீர் நிலைகளில்
பலதாய் காண்பதும் ஊனக் கண்கள்.
ஞானக் கண்பார்வை விசாலித்தது.
ஒன்றை உள்ளெடுத்ததும்......,
விசாரித்தறிவதும் அதுதான்.

"கண்களால் கண்டதும் காதால் கேட்பதும்
பொய்"..... விசாரிப்பதும், பார்ப்பதும் யார்?
"மனதுத்துக் கண் மாசிலனாதல் வேண்டும்"
சகுனிக்கும், துச்சாதனனுக்கும்.
கஜமுகாசுரனுக்கும் கண்களிருந்தன.....
இராவணனுக்கு, இருபது கண்கள்
பத்து மூளைகள்...., இருந்தும் நிகழ்ந்தவை.....,?

மனிதனுக்கு நெற்றிக்கண்ணுண்டாமே.....?
கண்கள் + ஐம்புலன் + நெற்றிக்கண் + மனக்கண்.
ஒன்பது கண்களில் ஒரு உருவின் நடமாட்டம்.
படைத்தவனென்ன குறைத்தா வழங்கினான்?
விழியுள்ளவனே குருடனாயிருக்கையில்.....,
விழிப்புலனற்றவன் எப்படிக்குருடன்?

கண்களே இல்லாத போர்க்கருவிகள்
மனிதக் கண்களைக் குருடாக்கி
அர்த்தமற்ற தன்மான உணர்வுகளைச்
சூடேற்றி, மனிதவதைகளை,
ஒழுக்கமறுப்பை, அவமானங்களை
வடிவமைப்பது..... விழியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார மலினத்துக்கு
மானிட நேயம் ஈடாகி
பொடியாய்ச் சேதாரமாய்ப் போக...
"மனச் சாட்சிதான் கடவுள்" என்றால்,
கடவுளே இல்லை என்ற உறுதியில்,
மன்னிக்கப்பட முடியாத வடுக்களைப்
பொத்திவைத்தபடி..... உருவில் மட்டும் மனிதன்.

அநியாயத்தை நியாயப்படுத்த
வரலாற்றைக் கொச்சைப் படுத்தி உருமாற்ற,
அருளுள்ளதை அந்நியமாக்க,
இருப்பியலைச் சூனியமாக்க
இல்லாததை இருப்பதாய்க்காட்ட
கல்வியும், அறிவியலும் துணையாய்...!

மனக்கண் விழிப்பற்றவர்கள்
மற்ற உயிரினம் ஏளனம் பண்ண
வெட்கப்படாமல்....
வீதிக்கு வரும் மனிதக் கேவலம்.
வாழுது....., வாழுமா?

- 1998 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை நடத்திய கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை)

# மூடுபனி விலகுகையில்

காட்டுக் "கதியால்" இணைத்து "நிலைகட்டை"
"தோட்டு வரிச்சாய்"ச் "சிறுநவ்வை" நார் தொடுத்துக்
கட்டிக் "களித்திரணை" தீற்றி மறைத்திருந்த
"திட்டுக் குடிசை"ப் "பொருக்குச்" சுவரருகே
மூடுபனிக் குளிரில் "மூடை" உருவத்தில்
"காடை" நிறச்சாறனுக்குள் கால்கள் முடக்கியிரு
கைகள் "கவட்டுக்குள்" வைத்து முழங்கால்கள்
பையவே நெஞ்சை அணைக்கக் "குறட்டை"யுடன்
நித்திரைக் கூட்டுக்குள் நீள்கனவு காணுகின்ற
"சித்திரவேல்" இன்பத்தின் எல்லையினைத் தொட்டுள்ளான்
"பூமிக்கிழவி" புவனத்தை மூடுதற்குச்
சேமித்த "மூடுபனி" "செக்கல்" முதல் போர்த்துள்ளாள்
சொந்தக் கடற்குளிப்பில் சூடு இறக்கிய பின்
அந்தக் குளிரோட்டும் ஆவலுடன் செம்பருதி
வெண்பட்டுப் போர்த்து நிமிர்ந்து பனியோட்ட
எண்ணிடினும் "பெண்" போர்வை மேலெழும்ப மாட்டேனென்
றுன்னிடினும் நீண்ணேரம் தாக்கல் பிடித்திடுமா?
என்றாலும் இன்னும் "கூதல் நடுங்கியது"
சித்திரவேல் தன்பாட்டில் நீண்டகனாக் காணுகிறான்
"பத்தியமாய்க் கொள்ளுகிற" நித்திரையின் எல்லையது.
"டேய்.... எழும்பு..... வேலாஉ...... பொழுது "மதியண்டா"
நாய் போலக் கைசெருகி நல்லாப்படுக்கா நீ ........"
என்றுவாய், கூற இடறியது காலொன்று,
தன் கனவு பாதியிலே "தவிலுடஞ்ச" மாதிரியாய்ப்
போக எழுந்தான் இடுங்கிய கண்களுடன்.
நாகம் போற் பார்த்தான் "நயவஞ்சக் காசுடையோன்"
ஊரிற் குறுக்குவழி கொண்டே "பெருங்காசி"
ஆரிலோவெல்லாம் "அடிக்கும்" முதலாளி
நின்றான் எதிரே நிலை தளர்ந்து கண்டவுடன்
பெட்டிப்பாம்பாக ஒடுங்கியே பேதலித்துக்
கட்டுப்பட் "டென்னையா" என்றான் கரகரப்பாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நேத்துப்பகல் வந்து நீயாஞ்சு வெட்டிவெச்ச
செவ்வல் இளனி குடிச்சிற்றுக் கோம்பையெல்லாம்,
"அங்கான்" கிடக்கு அதக்கெதியாப் போயெடுத்துத்
தங்கண்ட "பாண்" வளவில் கொண்டே எறிஞ்சிவிடு."
கேட்ட சொற்கள் "திண்ம" உருவிற் செவி புகுந்து
வாட்டமில்லாக் "கொட்டாவி" மூலம் வெளியேற்றிச்
சாறனைத் தோள் வரையும் போர்த்துப் பிடித்தபடி
காறிவெளியே உமிழ்ந்து நடக்கின்றான்.
மூடுபனி விலகி மென்புகையாய் விண்வெளிக்கச்
"சூடு" மனத்திருந்து சுள்ளென்று சூரியனாய்,
மெல்லப் புகையவிழ்க்கும் மென்னிதய வாசலிலே
சொல்ல முடியாச் "சுமை" யென்னும் "வண்டறுக்க"ச்
சோம்பல் விரட்டிச்சுகங்காணும் ஓருருவாய்
"பாம்புகள்", "கொல்லிகள்", "அட்டைகள்", "சேங்குகளை"
எட்டி உதைக்கவென எந்நாளும் கண்டறியாத்
திட்டம் மனக்கண்ணில் "தீப்பாய"ப் போகின்றான்.
பூமி விழித்தெழுந்தாள், பொன்னி கர்த்த பூக்களெலாம்
சாமிக்குச் சாத்தவெனத் தம்மைத் தயார்படுத்தச்
"சாவு"க்குக் கொய்வாரும் வந்துதான் போகின்றார்.
"காவு"க்குள் நீந்தவரும் வண்டுகளின் பாடலுடன்
நாளை விடியும் மூடுபனியும் விலகப்
பாளை வெடித்துப் பழுக்கும் "குரும்பட்டி"
காண நடக்கின்றான் கட்டாயம் "பூ" விரியும்
ஆணை அவனிடத்தில் உண்டு.

*பயிற்றப்பட்ட ஆசிரியரான பொன் சிவானந்தன் கவிதைகள் இலங்கையின் முக்கிய சஞ்சிகைகள், வார மஞ்சரிகள் முதலியவற்றில் வெளிவந்துள்ளன. பல கவியரங்கங்களில் பாடியும், தலைமை வகித்தும் பாராட்டுப் பெற்றுள்ளார். பல தொகுப்புக்கள் வெளியிடக் கூடியளவு கவிதைகள் எழுதியும், பிரசுர வசதி இல்லாமையால் அவை குடத்திலிட்ட விளக்காக இருக்கின்றன. கலை, இலக்கியம் சமூக சேவை முதலியவற்றில் ஈடுபாடு கொண்டு உழைக்கும் பொன் சிவாநந்தன் சிறுமைகண்டு பொங்கும் சீரிய கவிஞர்.*

- மணி -

வீரகேசரி 06-09-1981



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டே வாழ்வு தாராய்!

நாளிதழ்கள் முந்நூற்று அறுபத்தைந்து
நளினமாய் புஷ்பிக்க ஆண்டும் ஒன்று
வீழுமிங்கு, வயதினிலும் ஒன்று கூடி
விம்மல்களும் பொருமல்களும "சிலரை" மாய்க்கும்.
வாழிடங்கள் சில தேயும் , சிலதே ஓங்கும்.
வருவாயும் நற்பலனும் மாற்றங்காணும்,
ஏழ்மை பூண்டிதயத்தால் இனிப்போர் வாழ்வும்
இசையோடே மகிழ்ந்தாடி இன்பங்காணும்.

பாட்டாகச் சத்தங்கேட் டதிரும் நெஞ்சப்
பதைப்பிற்குட் "துண்டுகளும் கண்டம் பாயும்"
"வெட்டாந்த வானம்" போற் கவலை மாய
விசையான சிந்தனைகள் மனதிற் பூக்கக்
கெட்டாரும் நல்லோராய்க், "கீதைப் பாடம்"
கிட்டி வரக் கீழ்மையுணர்(வு) அறுந்து சாக
முட்டறுக்கும் ஆண்டாக முன்னின்றே நீ
"முழுவியளம்" காண்பிக்க வருக என்போம்.

ஒன்றோடு ஒன்பதெட்டு ஆறு சேர்ந்தால்
இருபத்தி நாலு அதன் மொத்தம் ஆறு.
நன்றே இவ்வெண், கணிப்பில் சுக்ரராசி
நலஞ்சூழும் உலகமெங்கும் பகமை நீங்கும்.
உன்பாதச்சுவடு தனிற் கலைகள் ஓங்க
உண்மை, புகழ், உயர்வுகளால் மனங்கள் தேங்க
பொன், முத்துக் குவியல்களை மனைகள் தாங்கப்
புதுமை பொலி செல்வங்கள் கொணர்க ஆண்டே!

காதலெனும் மென்காற்றில் இளையோர் சாயக்
காவெல்லாம் தேன்பழத்தின் குலைகள் தூங்க
வாதமெல்லாம் ஆதவன் முன் பனியாய் மாற,
வாசனையும் பூசனையும் மண்ணில் ஊறச்,
சாதனைகள் தூயனவாய் பரிமளிக்கச்
சஞ்சலமும் காழ்ப்புணர்வும் சரிந்தே மாயப்
பாதகங்கள், பசி, களவு, கொலைகள் தேயப்
பணிகின்றோம் புத்தாண்டே வாழ்வுதாராய்!

01-05-1986 சிந்தாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது பரிசுக் கவிதை

# நிமிர்வு

*களம் கலை இலக்கிய வட்டம் நடாத்திய*
**சட்டத்தரணி ந. சின்னையா நினைவு கவிதைப் போட்டி**

மானிடக் கூனல் மனமாம் மடுவுக்குள்
நானென்றோர் "தத்துக்குறட்டை," விரால் போல
துள்ளுதல் கண்டு துவளாத "அத்தாங்கால்"
மெள்ள வடித்தேன் "தளத்திலே" குஞ்சுபல
கோலுண்டு, வாலாட்டி, எம்பித்துடித்தன.
ஓலங்கள் ஏராளம் ஒற்றுமைக்கு 'மாராயம்'
"நானோர் அரசியல் வாதி எனக்கு நீர்"
மானத்தை விட்டு மடைவைத்து பூசை பண்ணு,"
" காசு கனக்கப் புழங்குது என்கையில்,
தாசியாய்ப் பத்தினியைத் தந்திடென் கட்டிலுக்கே"
" சண்டியனாய்ச் சந்தியிலே சள்ளுபல அள்ளுவதால்,
கண்டவர்கள் எந்தனுக்குக் கப்பம் வழங்குங்கள்"
கோணல் மனக்குறட்டைக் குஞ்சுகளின் வாய்களிலே
நாணற்பூப் போல "நுரை தள்ளி" வார்த்தை வர
பொட்டியான் குஞ்சொன்று பேசிற்று அங்கிருந்து,
"சட்டியிலே சாம்பாராய்க் காய்ச்சி இறக்கு மட்டும்
காய்ந்த கருவாடு நாமெல்லாம் ஆதலினால்,
சாய்கின்ற "பட்டம்" "பவிசு"க் கதையெல்லாம்
வீண்தம்பி, யாருக்கும் நீ பெரிதா? உன் மட்டில்
மாண்பாய் நிமிர்வு கொண்டு வாழு

*களம் (1985-ஜனவரி)*

* மண்டுரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பயிற்றப்பட்ட தமிழாசிரியராக பணி புரிந்து வருகிறார். கவிதைத் துறையில் அதிக ஈடுபாடுள்ள சிவானந்தனின் ஆக்கங்கள் ஈழத்தின் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. சட்டத்தரணி ந. சின்னையா நினைவு கவிதைப்போட்டியில் முதற் பரிசுபெற்ற இக் கவிஞர், மட்/கலாச்சார பேரவை நடாத்திய போட்டியிலும் முதற்பரிசு பெற்றுள்ளார். எழிமை கண்டு பொங்கும் உரத்த சிந்தனை என் சொத்து என்று கூறும் இவர் எழுத்தையும் கல்வியையுமே பெரிதென மதிப்பதாக கூறுகின்றார்.

-ஆசிரியர் களம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகின் சிதைவு

"பொன்னி" யந்த வளவூர் நிறைத்துள
புதுவசந்தத்தின் தோற்றத்தை வென்றவள்
கன்னம் மாதுளை வார்த்த கனியென்றால்
கனிவுப் பேச்சிதழ் முண்முருக் கீன்ற பூ
அன்னமின்னா அழித்த பழவுடல்
ஆசை பாய்ச்சும் வெருட்சி விழி, நகை
"பொன்னின், தங்க நகை யெதும் பூண்டிலள்
புதுமைத் தென்றலை வாடகை பெற்றவள்.

'நாணயங்கள்' நிரம்பிய நன்மகள்
நா நயத்தமிழ் பாவலர்க் கூட்டுவாள்
வீணர் செய்கைகள், சிந்தனை காணக்கண்
வெட்டும் வாளென வீங்கிச் சிவந்தழல்
பாணம் வீசும். பண்பாட்டின் ஒழுக்கவள்
பசுமை கண்டிந்தப் பாரெலாங் கூடியே
பூண மங்கல நாணொன்று பூட்டியே
பூவைக்கோர் மண நாள் விழாச் செய்தனர்.

கங்குல் வந்தது காதலன் பொன்னியின்
கையைப் பற்றிக் குடிசையுட் சென்றதும்
தங்க மாணிக்க மார்பிடை "அஞ்சனத்
தீந்தை"யாலொரு சித்திரம் தீட்டினாள்
ஆங்கோராயிரம் முத்தங்கள் நீண்டபின்
அயர்ந்த தூக்கம் தனித்தனி யாக்க, வே
றெங்கோ 'வேலையாய்'ப் போன விடிநிலா
எட்டிவந்து இமையை விரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கும் புத்துணர்வால், துயில் நீங்கிய
பொன்னன் தன் இளம் பொன்னியை நோக்கினான்.
மங்கலாய் அக்குடிசையுள் மின்னிய
மணிவிளக்கொளி " வாளிப்பைத் தீட்டிற்று
தங்கக் காசு பரவிய வாறந்தத்
தரையெலாம் நிலா வார்த்த "ஒளிப் பொட்டு"
மங்கை மீதும் 'நெளிந்த' வரிகளில்
மகிழ்ந்து 'கூரைத்தாய் ' பாய வழிவிட்டாள்,

ஆரம், காப்பு, அரையொட்டியானங்கள்
அழகுத் தண்டையும் தோடுந் திலகமும்
' பாரமேறுமளவு' பெய்தாளந்தப்
பாவை வெண்ணிலா சிந்தை இரங்கியே,
"கார மேறிய சிந்தையனா" யந்தக்
காட்சி கண்டவன் தன்னுடலள்ளியே,
வீரமாயவள் மெல்லுடல் மூடினான்.
விரசங்கண்டவ் வடிவு சிதைந்தது.

1974 ஆடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்கரைக் காட்சி

விரிந்து வந்து அலைக்கரங்கள் சுருண்டடித்து
மீளாமல் மாய்வதனால் விளைவுண்டிங்கு
அரித்தெறிந்த மணற்பரப்பு நீண்ட பட்டு
அனைத்து நிறச் சிப்பியெலாம் அதற்குப் பொட்டு
ஒருக்கணித்த படுக்கையிலே தனிமையாட்சி
ஓர் கவிஞன் உள்ளமெனப் பரந்தகாட்சி
வரிவரியாய் வளித்தீண்டல் வரைவின் ஆட்சி
வான் பரப்பின் கவிவுமொரு பொய்யின் சாட்சி,

கமுகுமரக் கன்னியவள் பாளையாகக்
காட்சி தரும் கணவாயின் ஒட்டுப்பாடு
கமகமத்து மணக்கின்ற தாழைக்காடு
கரையினிலே தோணாவை அண்டி மண்டும்
தமக்கெனவோர் விறைப்போடே தழைத்து நிற்கும்
"தலைப்பத்தோன் மீசை" என்ற வரண்ட புற்கள்
சமப்படுத்த அடம்பிடித்தே அடம்பும் ஆங்கே
சமச்சீராய் இலை பிரித்துக் காட்டி நீளும்.

வெண்ணுரையை வரிவரியாய் வாரிதள்ள
வெறும் மணலில் விரிப்புண்டே "விரு விருக்கும்"
எண்ணடங்கா நண்டுகளின் கிறுக்கலெல்லாம்
எந் நாளும் அழிவதுதான் விதியே போலும்
"மண்ணெடுத்தல் தடுக்கப்பட்டுளதே" என்றாலும்
மாட்டு வண்டி, உழவு மெசின் மூலம் ஏற்றிக்
கொண்டு சென்ற காரணத்தால் வந்த பள்ளம்
கொண்ட தண்ணீர் பட்டின் மேற் கிழிசல் காட்டும்.

உதிரமெலாம் உப்பாக்கி உவர் நீருக்கு
உரமிட்டு, ஓயாது வலையிழுத்துச்
"சதிரமெலாம்" இளைத்துள்ளார் மீன்பிடிப்போர்
"சலிக்காத உழைப்பாலே கடல் நீர் உப்போ? "
அதிரடிக்கும் கரையோரம் அழகாய் நீண்டு
அடுக்கடுக்காய்ப் பெரும்பாம்பாய் வலையின் "கால்கள்"
உதிரவிட்ட மீன்களெலாம் உப்புஞ் சேர்ந்து
உலர்வதுமோர் உழைப்பினது மணத்தை வீசும்

*23.06.1985 சிந்தாமணி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் வெட்டின் மிச்சம்

"மூட்" டொன்று கண்டு முழுமைக் கவிதையொன்று
"வேட்டுவைக்க" வென்று விரைவாக - வீட்டுக்குள்
சென்றே கடதாசி பேனா எடுத்தமர்ந்து
நன்றான சொல் தேர்ந்தேன் நான்.

உள்ளே வெளிச்சத்தைக் கண்ட "இளையமகன்"
துள்ளிக் குதித்துச் சுவை கொண்டே - "உள்ளி" மண
வாயுடனே வந்தான் வடிவாக மேசையிலே
பாய்ந்தேறிப் புத்தகங்கள் "பிய்க்க"

வந்து நிமிர்ந்து வடிவான பேனாவை
எந்தன் கரமேந்தக் கண்டதுமே - "அந்தா
எனக் கதைத் தாருங்கள்" என்றே அழுது
"மினக்கெடுத்தி" வீழ்ந்தான் நிலம்.

மெல்ல எடுத்தணைத்து மேதை உளவியலால்
எல்லையொன்று கண்டு திரும்பி வந்தே - சொல்லெடுக்க
"வெள்ளச்சி" வேர்க்குருவால் வெம்பி அழுகின்றாள்
கொள்ளுங்கோ" தூளடுப்பில் சோறு............

என்றாள் "மனைவிளக்கு" என்ன செய்ய? வேண்டியதை
நன்றாகத் தூங்க வைத்த பின்னரே என்னெண்ணம்
யாக்க விரைந்தேன் ஒளியோ கழுத்தறுப்பு.
ஏக்கமே மின்வெட்டின் மிச்சம்.

*21.06.1981 சிந்தாமணி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மூட்டம்

எத்திக்கும் சித்திக்கச் சித்திரையாள் வந்திணைந்தாள்
அவள் கூடத் "தங்கையென" வைகாசி என நின்றாள்.
முத்திரையாய் பூவுடலம் வேர்க்குருவால் கொப்பளிக்க,
முகத்திரையால் நெய்யொழுகி மூச்சு, வெப்பக் காற்றாக
பத்தியமாய் நித்திரை கொண்டெத்தனை நாள்? அக்கினி நாள்;
பற்றியுடல் தெப்பமெனப் பரிதவிக்க உள் நடுங்கும்.
எத்தனையோ கள்ளி முள்ளாய் ஏற்றி, ரத்தம் உள் உறிஞ்ச
இசை கூட்டும் நுளம்புகளின் இரட்சிப்பால் நிம்மதிகள்

"வால் வெள்ளிக் கோளாறோ" வான் வெளியின் துலக்கங்கள்
வழக்கிற்கு மாறாக "வெண்தீந்தைக்" கலக்கங்கள்
சூல் மேகம் இடையிடையே தூறல் பரிமாறுவதால்
சுவையான சிந்தனைகள் சுட்ட பழம் போல் நெகிழ
தாலாட்டத் தென்றலின்றித் தகிக்கின்ற ஊமைவெயில்,
தளராத மனத்தோரின் "இடைப்போக விதைப்போகை"
பாலாடை போலாடை புழுதியினால் பிசுபிசுக்கப்
"பருவமுதல் விடுமுறையும் பறந்து, பள்ளி தொடங்கிற்று.

கூர் பாய்ந்து வேரோட்டி விழு தெறிந்த ஆல் போன்ற
குளம் முறிந்து உயிருடமை ஊர்தின்ற துன்பியலும்,
தார்ப்பாதை யுருகலுக்குள் தளிர்க் குழந்தை பட்டதுபோல்,
தகித்துளங்கள் கசிய விட்ட "தழல் நீரின்" சொட்டுகளும்,
மோரான சேற்றினிலே " முளை குடிக்கும் தாராக்கள்"
முழு இரவும் தமதாக்கி "மணிகிலுக்கும்" விண்பரப்பில்
தேர் போலச் சோடனைகள் சூடி நிற்கும் இயற்கைபல
தேவதைகள் உலாவாகத் தெம்புதரும் மூட்டமிதே.

12.04.87. சிந்தாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் ஒரு அழுங்கு

பொறியெனுந் தறிகள் புனைந்த நூலாடை
பொருந்தியே தைத்துணர்வான
"வெறி"யினைக் கரைத்து மிதவையிட்டலசி
வெளுத் தெடுத் தெம்முளே, உண்மை
அறிவினை மயக்கி உலர்த்தியே எம்முன்
அரக்கருந் தேவரும் அணியக்
குறிகளைப் பதித்துக் குழப்படி விளைக்கும்
குவிவிலா மனமொரு குரங்கே.............

குரங்கெனக் கூறிக் குதிப்பினைக் காட்டிக்
கொடுத்தனர். "ஐவழி" வரவால்
உரம்பல பெற்றெம் உயிரினை வதைக்கும்
உருவிலா மனவெளிக் குவிவால்
தருமனும், இராம, இரவாண, கும்ப
கருணனும், வசிட்டனும், காமன்
கருகிடும் லீலைச் செயல்களும் விதைக்கும்
"களைப்பிலா உளம்" ஒரு அழுங்கே!

இசைவதிவ் வுலகில் "எண்ணிலா மனித
மனங்களும் ஒன்றெனக் கண்டால்"
வசைவுகள் மாயும், மானிடம் வெல்லும்
வழிபல விரிந்தெமை வாழ்த்தும்,
திசையெலாம் ஒன்றே, தேவையும் ஒன்றே
தெய்வமும் ஒன்றென எண்ணில்
"அசைவுளே ஒன்றின் ஆக்கமோ அழிவோ"
அதையுணர்ந்தெழு மன உணர்வே!

07-12-1986 சிந்தாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மச்சான் எனக்கு வேறு வழியில்லை

" ஊர் நிறைந்த மச்சாள்மார்" "இன்னும் வேறெ
எத்தனையோ புதுமாமன்மாரின் பெண்கள்"
பூரணமாய் முறை சொன்னார் "மச்சான்" என்று
பொருத்தமுள்ள நீயுமொரு "கொழுத்த மச்சான்"
பூரித்த உன்னழகுப் "பெட்டகத்தில்
பொன்னெடுக்க" எண்ணமுற்றே நானலைந்து
காத்திருந்த நாள்பல காண்! உனது வாசற்
கதவு என்றும் திறந்திருக்கக் கண்டேனில்லை.

வஞ்சகமே செய்யாமல் இயற்கைத்தாயும்
வழங்கி வைத்த சீதனங்கள் பலவும் உண்டு
எஞ்சலின்றி நிமிர்பாரம் வாங்கி நீயும்
ஏந்தி நின்ற கோலமென்றன் மனத்தை ஈர்த்து
வஞ்சிக்க, வஞ்சியுனைப் "பஞ்சுஎன்"றே
அணையாக்கத் துடித்த அந்த வேளை தன்னில்
கிஞ்சித்தும் ஏற்காது "கிளிப்பொந்தாம்" உன்
குடிசைக்குள் ஒழித்தாய் நீ மறந்தாய் ஏனோ?

எனது மன முடிச்சுக்குள் நீயடங்கா
நிலையெண்ணி எனதுள்ளம் சோர்ந்து வாடிக்
கனமாக நோகுகையில் "வேறொருத்தி"
கரம் நீட்ட அவள் கரத்தைப் பற்றிக்கொண்டேன்,
"முனைப்பான காதலை நான் காட்டுதற்கே
மூலைக்குள் மறைந்தேன்." என்றுரைத்து மேலும்
இனங்காட்டி இன்றென்னை நீ அழைத்தால்
என்னவழி எனக்குண்டு? இயம்பாய் நீயே!

10-03-1985 சிந்தாமணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு நலமுற வருக!

காலக்குமரின் கழுத்தினிலே அட்டிகையைப்
போலவே ஈராறு திங்களெனும் நித்திலத்துக்
கோவைப் பதக்கத்தினிலே பொலிந்து மின்னும்
மேதக்க ரத்தினமே! தைப்பாவாய்! மேதினியில்

உன்னொளிக் கீறு படர உழவோரின்
பொன் குவைகள் பூரித்து விம்மும், புதுச்சுவைகள்
ஞாலத்திற் சூழும், நலமோங்கும், பாற்குடங்கள்
காலைக் கதிரவனைக் கால் தொட்டுத் தெண்டனிடும்
மாந்தர் மனங்கள் மகிழ் வெய்தும், மாவிலைகள்
ஏந்திய தோரணங்கள் எங்கும் அசைந்தாடி
ஏழை குடிலும் எழுப்பமுறும், ஏற்றமுற்றே
மண்ணைழந்த பொற்குழவி "விண்பறந்த"
ஆடைகளால்,

"வண்ணாத்திப் பூச்சியென விண்ணிற் பறக்கிறது
நெஞ்சக்காவில் மலர்ந்த நிலையான சிந்தனைகள்
அஞ்சாது, இரவியொளிப் பாய்ச்சலுடன் ஆடுவதால்,
இல்லாதான், மேலோன், எனும்பாகு பாடின்றி
வல்லமைகள் ஊரில் வழங்கண்டே வாசனையின்
நல்லொளியாம் உன் பிறப்பால் நாடே நலமுற்றே,
எல்லாரும், எல்லாமும் பெற்றே உயர்வடைவர்
என்கின்ற நாளாய் விடியும் உன் நாளான
பொன்னாள், எனவே புதிய "உயர்வுகளை"த்
தீட்ட வருக! திசை மாறா எண்ணங்கள்
நீட்டவா என்றோம் நினை.

13-01-1985- சிந்தாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய புது மகளே எழுச்சியூற வா!

இளைய வருடப் புதுமகளே, இளமை வசந்தப் பூச்சரமே,
பழைய மகளாம் பங்குனியைப் பழிக்கப் பிறந்த பாவடிவே,
தெளிவு, அமைதி, சீலமெலாம் தெளிக்க வளர்ந்த சேயிழையே
எளிமைக் கோல இசைவுகளை இனிக்கப் பொழியும் பூ மழையே!

நெளிவுப்பாதை நேர் செய்தே நிலவைப் பொழிய வாராய், எப்
பழியும் பாவச் சேர்வைகளும் பழிக்கும் பாதை நீக்கி நல்ல
உழவும் விளையும் பார்முழுதும் ஊட்டம் பெற்றே சீராக
அழகின் விளிம்பில் அயர்வோட்டி அளைந்தேயுண்ணத் தருவாய் நீ!

எங்கும் அமைதிப் பணிவிடைகள், எழுச்சிப்புலனின் கனவுகளாய்,
பொங்கிப் புதுமைப் பூப்பறிக்கப் பரிணாமத்தின் நல்லுணர்வை
இங்கே விதைத்துத் தருமத்தை எங்கும் நிறுத்தி நினைவுகளில்,
தங்க, தாழ்ப்பாள் போட்டென்றும், தாயாய் நின்று உலவுகவே!

கும்பராசிப் பிறப்பதனால் குலவும் கல்வி, உயர்ச்சியுண்டாம்,
செம்பின் விளங்கும் உன்முகத்தால் சீருஞ் சிறப்பும் ஓங்கிடுமே;
எம்முள் விரிசல் இல்லாத இணக்கம் அளிக்க வருகவே!
வெம்பும் துன்பச் சுமை நீங்க வெற்றி தரவே வருகவே!

13.04.1985 சிந்தாமணி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம் இவளிடம் கடன் பட்டதா ?

"மண்ணுக்கு மழை வழங்கி வாழ வைக்கும்"
மனப்பான்மை கொண்டவான்" இவளின் கூந்தற்
தண்மையிலே மயங்கி, அதிற் கடனாய்ப் பெற்றே
தருகிறதோ? "குளிர் நிலவைக் குடிசையீறாய்ப்
பண் சொரிய" இவள் முகத்தின் அழகிற் கொஞ்சம்
பகிர்ந்தெடுத்தே விண் படரத் திணித்ததோ? நற்
கண்ணழகு தொட்டெடுத்த சாறா அங்கே
காட்சிதரும் பூப்பந்தற் தெளிப்பின் தூறல்?

பொன்னிறத்து மேனி தந்த பஞ்சின் மென்மைப்
பொதி செய்தே வெண்மேக உலா நடத்தக்
கன்னியவள் சிரிப்பையள்ளி மின்னலாகக்
காட்டுகிறாள் கடன் பட்ட வான நல்லாள்
மென்னிதயம் துளைக்க அம்பு பாய்ச்ச என்றே
விளங்குகிற புருவங்கள் வானின் வில்லோ?
என்னவிதப் பட்டாலும் ஆழங்காணா
இதயம் அமாவாசையென வந்ததாமோ?

நாணத்தாற் சிவந்தமுக நிறத்தையள்ளி
நாம்மயங்க அந்திவான் பூசிக்கொண்டே
காணக்கண் கோடிபல கேட்கும் விந்தை,
காரிகையின் முந்தானை படர்மேகங்கள்
வீணுக்காய் நீலப்பட்டுடுத்தாளென்றே
விசும்(பு) அதனைப் போர்த்துளதோ வைரம்மின்ன?
பூண் பதித்த பொன்முலைகள், மலைகள் போலப்
பூரிக்கத் தீட்டியதோ மாலைச் செவ்வான்?

காதலொன்றே நிரம்பியுள்ள மனத்தின் திண்மை
கார்கால மாயிற்றோ? சிந்தனைக்குள்
பாதகமாய் ஏதும் எழ, உயிர்ப்பாய் மின்னல்
பளீரென்று அடிக்கிறதோ? குமுறுஞ்சிந்தை
வேதனையின் வெளிப்பாடா முழக்கம்? விண்ணின்
விளைவுகளோ இவள் தானா? இடையும் மின்னல்?
மாதவளின் பாதையிலே வானங்கொண்ட
மகிழ்வூட்டுங் கலைநயங்கள் விலைதா னெங்கே?

17-03-1985 சிந்தாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணல் போல் வாழ்வு

ஆற்றோரம் நாணல் அடவி காலூன்றி நிற்கும்
ஊற்றை உறிஞ்சி உயிருட்டம் பெற்றுயரும்
வேற்றுமைகாண வெளிச்சத்தில் மாப்பிசையும்
நோற்கும் தவம் நாளும், நோவறியா வாழ்வுக்காய்!
வான்வெளியின் வெண்மேகம் வாய் கொப்பளிக்க எண்ணித்
தேன் சுவறப் பூமித்தாய் தித்திப்பில் பால்சுரக்கும்
கார்மேக நீர்ப்பொதியைக் கண்டவுடன் காற்றுத்தன்
தேரேறி மின் பாய்ச்சித் திண்மை மனங்கலங்க

ஆர்ப்பரித்து விண் பிளக்க ஆடை அவிழ்த்தோடும்
வேரில்லா விண்ணில் வெடியால் பொறி பறக்கும்
காற்றின் உராய்வால் கனலெழுந்து காடெரிக்கும்
ஆற்றோர நாணல் அரவமெதுவுமின்றி

மெல்லச் சிரந்தாழ்த்தி வேதனையே கொள்ளாமல்
புல்லோடு புல்லாய் புவிமடியே தஞ்சமெனத்
தன்னை நிதானித்துத் தாழ்மையுடன் பார்க்கிறது
அன்னியமே காட்டாத அன்புருவின் சாயலிலே,

"பூவே" வெளுத்த நிறம் பூண்டதனால் ஆன்மீகத்
தேவமுனி போலத் தரிசனங்கள் காட்டியது
மேகம் விடைகொடுத்து "விண்ணீர்" இடையீடில்
போகம் விளைவிக்க பூமிப்பெண் பூரித்தாள்
மேட்டில் விழுந்து முகம் கழுதுவி வந்த வெள்ளம்
காட்டை, மரத்தை, கருங்கல்லை முட்டியதால்,
வேரறுந்து, சோர்ந்து உருண்டு தகர்பட்டு
நாரறுந்த மாலையென நாற்றிகைக்கும் எற்றுண்ண

ஆற்றோடு வந்த வெள்ளம் ஆசையெனப் பாய்கிறது
ஆற்றோர நாணல் அதனுள் அமிழ்ந்து அதன்
தன்மை இழக்காமல் தண்ணீரின் ஆட்டலுக்கு
மென்னையாய் ஈடாகி மீண்டும் நிமிர்கிறது.

மானிடரில் கேவலமாய் மானமின்றி நாணலைப்போல்
ஈனமுடன் வாழ்வோரும் உண்டெனினும் இந்நாளில்
ஆற்றோர நாணலென வாழ்வோரே வாழ்வார்மற்
றேற்றமிலார் "மானத்தர்" மட்டே!

05.11.1989 சிந்தாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்ணூறே துணை

வெளிச்சத்தை, விடியல்களை, நல்லெண்ணத்தை,
விரசமிலா அடைவுகளை, விழிப்பை, நட்பை
அளிப்பதற்கு வருகுதென எதிர்பார்த்தோய்ந்த
ஆண்டு பல, காரிருளை அள்ளிக் கொட்டிப்
பழிப்புகளும் கலவரத்தின் தெளி நெருப்பும்
பசையற்ற சிந்தனையும் கொலையும் மாய்வும்,
சுழிப்புகளும் சூரர்களின் வெறியுங் கூத்தும்
சுகந்தமற்ற சூழல்களும் கொணரக் கண்டோம்.

துணையிழந்த மனைவி மக்கள், மகனிழந்த
தாய், உடன்பிறப்பிழந்த சகோதரங்கள்
அணை முறித்த வெள்ளத்தின் துயர் பெருக்கி
அனைத்தையுமே ஆட்கொண்ட நாட்கள் மாயத்
துணை நிற்க வருகின்ற "தொண்ணூறே" யுன்
"தொகை கூட்ட, ஒன்றாகும்" தொடக்க எண் நீ
மணல் வீடாய் "அறக்கொத்தி" உறிஞ்சியுள்ள
வயல் வெளியாய் ஆனமனந்தளைக்க வா நீ!

01.01.1990 சிந்தாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவெடுப்போம்

"தொண்ணூற்று ஆறுவகை இலக்கியங்கள்"
தோள் கொடுத்து மரபுவழி சுமந்து வந்தே
விண், பூமி, காடு, கடல், நாடு, ஆறு
விறைப்பான வீரம், முச்சுடர்கள், காதல்
பண்பாடு, இயற்கைதந்த முருகு, "பாதை"
அன்பு, அறம், நல்லொழுக்கம், வாழ்வின் சீலம்,
"பொண்ணழகின் இலக்கணங்கள்," சிற்றின்பத்தின்
புணர்ச்சிமுறை, விரித்துளதை விரும்பிக் கண்டோம்.

அன்றைக்குத் தேவையெனக் கொண்ட நாட்டம்
அழியாதிவ் வயதினிலே அரண்டெழும்ப
இன்றைக்கும் அவைபடித்தே இன்ப ஊற்றம்
ஈடில்லாக்காதல் மது பருகலாமோ!
முன்னெடுக்க எத்தனையோ கருவுண்டிங்கே
மூச்சடக்கி அவை சாகும் நிலை காணாமல்,
என்னப்பா இன்னுமின்னும் காதலோடு
பெண்ணழகைப் பாடுகிறோம் "சலித்த பாடம்"

காதலையும் அழகியையும் உரிந்து காட்டக்
கம்பனையும் மிஞ்சிவிட இயலுமா? பெண்
வேதனையின் வாட்டத்தை, வீரம், காதல்
விடுதலையை "அகம்" "புறங்கள்" அழுத்திச் சொல்ல,
சூதுகளும் வாதுகளும் சுட்ட நீதி
சுடச்சுடவே வில்லிபுத்தூர் ஆழ்வார் வைத்தார்.
மாசுகளும் எம்மோடே வாழ்வதாலே
மணக்குந்தான்! வீட்டுப்பூ வேறென் செய்யும்.

18.09.1990 சிந்தாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏது
# சமயம்?

தம் பலத்தை மிஞ்சிநின்று சக்தியொன்று தொழிற்படுதல்
உணர்ந்து அதனை இறைவனென வணங்க வந்த
நம் குலத்தில் இடையிடையே வெவ்வேறு பெயர் கொண்ட
பல சமய ஆக்கங்கள் பரந்து நிற்க
"நமக்குள்ளே அறு சமயப்பிரிவுகளும்" கடவுள்களும்
அவரவரின் நெறிவழியே வணங்கி வந்தார்.
கவலையில்லா வாழ்வளிக்கக் கடவுள் தந்த வழிபாடு
கருத்தழிந்து நடைமாறிப் பிசகிப் போச்சு.

கோயிலென்றால் சமூகத்தை நெறிப்படுத்திச் சலவை செய்து
வாழுகின்ற வழிகாட்டும் பாடசாலை.
தாயாக, தந்தையென, ஆசானாய், அறம் காட்டி
அருளாட்சி, அன்புநெறி அமைக்கும் மாடம்.
நாயாக, பேயாக, கீழ்த்தரமாய் நடத்தைகெட்ட
மனிதர்களின் கூட்டத்தில் கோயில் மாய்ந்து,
தோயாத உடையாகச், சுகம் காட்ட இயலாத
வைத்தியனாய் பெயர் தாங்கல் மட்டும் மெய்யே.

இதிகாச புராணங்கள் கூறுகிற காதைகளால்
இயல்பான மனவளத்தை வளர்த்தெடுத்து
"விதி மூலம் வாழ்வியலை இறை நடத்தும்" என்கின்ற
பதிவுகளை மக்களிடம் பசையாய்ப் பூசி
அதிகாரம், ஆணவங்கள் அத்தனையும் மற்றவரை
அனியாயப்படுத்து மென்ற உண்மை பேசி
மதிப்புகளும், மரியாதைப்பண்புகளும் வளர்ப்பதற்கு
ஆலயங்கள் முன்னின்ற காலம் எங்கே?

இலக்கியங்கள், மொழியாற்றல் இலக்கணத்தின் பொறிமுறைகள்
அத்தனையும் கோயில்களே வளர்த்ததுண்டாம்
பலமிவையே வாழ்வுக்குக் குற்றமில்லாப் பண்பாடு,
"பரிணாமம் பெருமைகளால்" மலிவாய்ப் போச்சு
அலைபாயும் மனங்களுக்கு விருந்தூட்டும் நாடகங்கள்
இசைநடனம், ஓவியங்கள் அனைத்தும், கோயில்.
தலைவைத்த இடமெல்லாம் வளர்த்ததால் "கோயிலில்லா
ஊரில் குடி இராதே" யென்றுரைத்தாரன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலென்றால் வருமானம், பொங்கலுண்ணல், மோதகங்கள்
கடலை, அவல், பழவகைகள் மடைபடைக்கும்,
தூய இடம் எனக்கொண்டு, ஒலிபெருக்கி காதுகளின்
செவிப்பறையின் அதிர்வுகளைத் தின்னும் ஓசை
வாய் திறந்தால் நாத்திகனாய் மதிப்பெடுக்கும் மனமனிதர்,
வசைமாரி, மனத்தாக்கம், சோகபாடம்.
தேயாத தர்மகர்த்தா நாமங்கள் கௌரவங்கள்
சேர்ந்துள்ள புனித தலம் ஆலயங்கள்.

பூசைகளின் வேசங்கள் ஆண்டவனை நமதருகு
கொண்டு வரும் என்கின்ற கருத்து மெய்யே!
ஆசைகளின் கோவைகளை நிறைவு செய்ய ஆலயத்தை
அருட்சித்தல் மொத்தமாய் மாறவேணும்.
பாசிகளை மனத்தகற்றி வெற்றி கண்ட ஞானியராய்
நமை நினைத்தால் சமய நெறி தேவையா சொல்?
காசிகளை மையமாய்க் கொண்டியங்கும் மனிதத்தைக்
கொலை செய்ய சமய நெறி முன்னெடுப்போம்.

-சிவகோபுரம் காலாண்டு இதழ்-
(1995- கார்த்திகை - தை 1996)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடல்

*வழமைக்கு மாறாக நேற்றந்த நிழலில்
"யாயதி"யைச் சந்தித்தேன்-; சருகான உடலும்,
காசநோய் இழுப்பும், இருமலும், சளியும்,
பேச்சில் சறுக்கல், மொழியில் வழுக்கல்*

*"யது", துர்வஸ*, திருஹ்யு, அனு, பூரு, என
ஐந்து புதல்வர்கள், இளமை வாளிப்பில்
மக்கள் வாழ்வு சுகித்து; சுகமும் நிறைந்தது
ஒருநாள் சுக்கிரர் எனக்கிட்ட சாபம்,
எனக்கிந் நிலையை உடனே அளித்தது.
சாபத்துக்குள்ளும் விமோசனமொன்று.
என் மக்களில் ஒருவன் விரும்பினால்; அவனது
இளமை நான் பெற்று, என் நோய், முதுமை
இரண்டையும் அவனுக்குக் கொடுக்கலாம்
இரவல் இளமையால் லோகாயதத்தை நான்
விரும்பிச் சுகித்தபின் மீள மாற்றிக்கொள்ளலாம்
சாபமென்றாலும் சந்தோசம் எனக்கு ..........,
"அரசுரிமையைப் பெற்றுக்கொண்டு இளமையைக் கொஞ்ச நாள்
எனக்குத்தா அனுபவித்தபின் திருப்பித் தருகிறேன்."
மூத்த மகனிடம் மன்றாடிக் கேட்டேன்.*

*"எனது இளமையை உனக்குத் தருவதால்
உலக ஒழுக்கம் உணர்விழந்தழியும்.
எனது தாயோடென் இளமை புணரும்
ஒழுக்கங் கெட்டுப் பெறுகிற ராஜ்யம்
எனது எதிரி, தந்தை என்பதால் தப்பினாய்"
நாலு மக்களும் திட்டித் தீய்த்தனர்.
இளையவன் பூரு, தன் இளமையைத் தந்தான்
ஆயிரமாண்டுகள் அனுபவித்திருந்தேன்
திரும்பக்கொடுத்து............., முன்நிலை பெற்றேன்.
இன்று என் தேடல் மறலியின் வருகை.
நியாயங் கூறிய யதுவின் குலத்தில்
கிருஷ்ணன் பிறந்து பாரதம் முடித்தான*

*யயாதிக் கிழவன் எனக்குள் விதைத்த
வாய்மொழி, புதியதோர் உயிர் பிழைப்பித்து
இப்படிச்சாபமென் தந்தைக்கிருந்தால்,
என் இளமையைக்கொடுத்து முதுமையை வாங்கிக்
"கெடுபிடி"க்குள்ளே தப்பிப் பிழைக்கலாம்
ஒழுக்கம், நீதி, நியாயம், சரிகள்
தூக்குக் கயிற்றில் எப்போதோ தொங்கிற்றே
இப்போது என் தேடல் சுக்கிராச்சாரியே.*

கதிர்ப்பு
1996- ஐப்பசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூபாளம் கவிதைப் போட்டி -2

பரிசு பெறும் கவிதை

# நிறைவான சுகம்

ஓதையடியில் ஒளிரும் வலம் புரிகள்
வாதையினை யோட்ட வழங்கிய பண்கேட்டுச்
செம்மை யொழுகுஞ் சினைமாந்தளிரூடே
விம்மு மிசைக் குயிலி விண் தொட்டிருளகற்றப்
பொய்மை யகல் தறியில் பாவோட்டிப் 'பூபாளம்''
பெய்தாள். புவியெழுப்புஞ் சங்கமெனச் சேவலெலாம்;
சிங்காரப் பட்டுத்த செவ்வரத்தம் பூக் கழுத்தை
எங்கு மொலிக்க வென எட்டி வளைத் தொங்கிக்
கூவிச் 'சிவரஞ்சனிப்பண் ணொலிக்கவிடப்
பூவும் புனிதமுற்றாள். பொன் வண்டு மென்சிறையில்
மாடித் தொளையினிலே மண்டி நின்ற 'காம்போதி'
பாடித்தேன் தேடிப் பனிப்பூவில் சேர்க்கை பண்ணப்
பொன்னி எழுந்து புதுத்தயிரும் முப்பழமும்
கன்னி யிலை மீது கவ்வப் படையலிட்டாள் .
'பைரவி'யைப் பாடிப்பறக்கும் பறவையெலாம்
கை நிறைந்த செல்வம் கனக்கவெனச் சொல்வனபோல்
மீட்ட நடைபயின்றான் மின்னாள் படையலுண்ட
வாட்டமிலாப் பொன்னன் வயல் விளைவில் நெஞ்சினிக்க,
நாளும் நடக்க நலத்தின் களமிருந்தே
தோளில் சுமையெடுத்துத் தோதான பாடலுடன்,
காலெடுத்து வைத்தான். கசியும் மணித்துளியில்,
நூலடுத்த நுண்ணிடையின் நுங்குப் படந்தெரிந்து
பாரமிறங்கப் பறந்த கிளிகளெல்லாம்
சோர் வேது மின்றி 'ஹரஹரப்ரியா' வினையே
தம் குரலிலே தளைந்து தந்தன காண்! பொன் மனது
கம்மென்று வாசங் கனக்கக் குடுகுநிறைச்
செந்தேன் மொழியாய்ச் செம்மாங்கனி முகத்தைத்
தந்தேன் எனப் பொன்னி வந்தனத்தை நீட்டி நின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்பொழுது பாய்விரிக்க, வேய்தோளாள் மூலையிலே,
சாய்ந்து நின்ற பொற்பலவின் சாற்றுச் சுளை பிடுங்கிப்,
பொன்னன் தன் கைவைக்கப் பூரித்தோர் வான்பாடி

'ஆதிபைர வீ" யிசைக்க ஆனந்தச் சிட்டிரண்டு
சேதியெலாம் 'சுத்ததன்னி யாசி'யிலே பாடினவே!
நாளாம் மலர் கூம்பி நல்லிரவுக் கோலமதைக்
கோலங்கள் தீட்டிச் செஞ்சந்தனத்தை மேற்கினிலே
ஊற்றி மெழுகியது. ஓலைக் குடிலெல்லாம்,

பாற்குடமாய்த் தாள்விளக்குப் பற்றி இருள்தின்னக்
காளையர்கள் மாலைகண்டு கன்றுகட்டித் தீனாவை
வேளைக்கே மூட்ட, விடிவிளக்காம் வெண்ணிலவும்
மின்மினியும் போட்டியிட்டு வீணாய் எரியுதென்று
மென் குளிர் காய விரைந்தார். அது கண்டு
ஒன்பான் ரசமொலிக்க ஓதினார் காளையர்கள்
மின்னார் மயங்க முல்லைப் பண்ணாகும் மோகனத்தை
பொன்சோடி கேட்டுப் புதுப்படலை நீக்கி வந்து
பன்னாங்குப் பாயினிலே பால்சொரியும் முற்றமதில்
காதற் கனி பிழிந்தார். காய்ந்த நிலா மடந்தை
கூதலால் வெட்கியுடன் கொத்துவானிலே மறைந்தாள்
அல்லி விரிய அதனுடோர் செவ்வண்டு
சொல்லி வைத்தாற் போலச் சுகமாய் 'நீலாம்பரி' யால்
தாலாட்ட, மேலாடை தாவி யிழுத்ததிலே
மாலாகிக் கொண்டார். மயக்கு.

பூபாளம்
1983- சித்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சங்கள் போக்கி கொஞ்ச வந்தாள் புத்தாண்டுப் பெண்

பரிசுக்கவிதை
1982

(5)

சோலைகள் தோறுந் துவண்ட கிளையெலாம்,
'மாலைகள்','காப்புகள்', 'தோடுகள்', 'மூக்குத்தி'
'ஒட்டியானங்கள்', 'சரடுகள்', 'தண்டைகள்',
கட்டியே தொங்கின.; வைரமும் முத்தும்,
பவளமும் பொன்னும் பளிச்சென மின்னித்
தவழ இழைத்துப் பொருத்தினா 'ளன்னை'......
இயற்கை துரிதமா யின்முகமீய
'நயங்கள்' கரங்களில் நட்போ டொளிர்ந்தன.
'தந்தையாஞ்' சூரியன் தன்கதிர் வீச்சினைச்
சுந்தரத் தேரோடுஞ் சோடித்தும் பாய்ச்சினான்
ஞாலத் திருளெலாம் நக்கப் 'படுத்தன!
ஆலையின் சக்கர ஓசையில் உயிர்க்குலம்.
கால மலரது கற்போ டுதிர்த்துங்
கோல விதழ்களாய் 'நாட்களும் பட்டன'.
அன்பு மிரக்கமு மின்பமு மூட்டிய
'பொன்மகள்' தீயின் கொழுந்தாய்த் 'தும்மியே'
பார்வையை வீசினாள்..... பாசம் அறுந்ததோ.......?
வேர்வை ஒழுகி விசிறியின் காம்புகள்
தேய்ந்து முறிந்து சிலும்பிக் கிடந்தன
காய்ந்த சருகுகள் காந்துங் கனலினால்,
தீய்ந்து நொருங்கிச் சிதறிப் பறந்தன.
ஆய்ந்து அழகா யடுக்கிய 'வீரை'யின்
செங்கனித் தட்டமாய்க் கால்கள் வலித்தன
கொங்கைகள் 'வோர்க்குரு'முட்களால் நொந்தன.
'ஏனிது இப்படிச் சுட்டொளி காலுது....?
மானிடமெல்லாம் மயக்கம் பொதிந்ததேன்......?
'துர்மதி' யென்னும் மடமைக் கொழுந்தனின்
துர்மதிப் பிள்ளைகள் பன்னிரண் டானதில்
செத்தவை யிப்போ பதினொன் றிறுதியாம்
புத்திரி பூமியில் வாழ்ந்து வதங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனிப் பெண்ணாள்' பழுத்த தலையுடன்
எங்குநான் போவேனென் றெங்களைக் கேட்டால்,
அணைக்கவா செய்வோம்...........? அதனாற் பொருமி நீ
அணைக்கமுடியுமா எங்கள் விளக்கெலாம்.....?
'தீமதிப்பெண்ணே....!' திறமையின் கோடுகள்
தாமதிக்காமல் வரைந்தே பழகிய
'தோழர்கள் நாங்கள்'......, பரம்பரை சந்தியாப்
பாழிடங் காட்டினீர் பாதை விரசமே....!
பொன்னாய் விளைந்து பொலியும் வயலெலாம்
பன்னாள் மழையொறுத் தெம்விவ சாயிகள்
மென்மனம் மண்ணோடு வெம்பவைத் தீரடீ!
இன்னமும் 'மின்னோர்' பிடிக்க எழ விலை..!
பாடையி லுன்னையும் பயண மனுப்பிய
வாடையி லேதான் 'வடிவுகள் தென்படும்,
மாய்க்கு மமிலத்துச் சிந்தை யுமக்கடீ......!
காய வயிறுகள் கண்டீர் நடந்தவை....! - உன்னப்பன்
நாமத்துக் கேற்ற நடிப்புக ளும்மிடம்
சாமத்துக் கொன்றாய் வளர்ந்ததுங் கண்டுளோம்
விண்ணில் வலம்வருங் கோள்களா 'மொன்பதை',
'மண்ணினைத்' 'தொலைக்க' மடக்கியே 'யோர்வழிக்
கோட்டிற் கொணந்தீர்' கொடுமையும் வாழுமா.....?
நாட்டிற் பலபிணி நாட்டிய நங்கையீர்......!
எத்தனை பெண்களுமைப் போற் பிறப்பினும்
இத்தகு செய்கைக ளெண்ணவு மஞ்சுவர்
என்ன மனுஷி நீ...........! இன்னமு முன்மனை
தண்ணென வெண்ணித் தகிக்கவா சொல்கிறாய்..........?
மேலுந் தரிக்க விநாடி எமக்கில.
"பாலருந்தி வில்லேந்திப் பாதகங்கள் சாடவென
வேழந் தனிலூர்ந்து வீறு விரிவடைந்து
"நாளம் முறுக்கேறி' நன்மைப் பயிர் செழிக்க
ஆய்க்கினை தந்த 'இலையுதிர்' மாய்வோடே
தீய்ந்து 'அமாவாசை' தோசையாய் வீச
வசந்தமாந் தோகைகள் வாய்ப்பை விரிக்கத்
திசையெலாஞ் செந்நெற் குவைமலிந் தோங்கிட
துந்துபிகள் நாதந்............, தெருவெலாஞ் சோடித்துத்
'துந்துபி'யும் வந்தான் துலங்கி எமை வாழ்த்தி
'செந்தாமரைக்கன்னி' சீர்வழங்கப் பெற்றவனாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தாரை முல்லை மணக்க வருகின்றான்.
'கும்பமென்ற ராசியிலே குருவு மிடமொன்பான்
லக்கினத்தை நோக்க' நடை பயின்று வாறதனால்
சிக்க லகலுஞ் சமாதானஞ் செஞ்செழிக்கும்
துந்துபியின் 'செல்வி சித்திரையாள்' வான் மகளாய்ச்
சிந்தை மகிழ்வோடுஞ் சிரித்த முகத்தோடும்
எங்களைக் கண்டே 'எளிமை' யகற்ற வெனுஞ்
சங்கையினைப் பூண்டாளாய்ச் 'சாதிக்கதை' யொழிக்க
மங்கையரின் வானுதல்கள் 'குங்குமத்தை' யேந்தவைக்க
சிங்களவர் முஸ்லிம் தமிழரின மொன்றென்ற
சிந்தனைகள் வேரூன்றிச் சிக்கலில்லா வாழ்வளிக்க
பந்துகளாய்த் தன்னேர் இளையார் 'பதினொருபெண்'
கூட்டி வருகின்றாள் கோலம் வரைந்து வைப்போம்.
பாட்டிசைத்துப் பண்ணொழுக்கிற் பால் மனங்கள் தேன் சுவைக்க
வாழ்வு மமைப்பாள் 'வழக்கிலிருந்து வந்த'
தாழ்வு மனங்கள் தறிகெட்ட டறிவுமிழும்,
சீதனங்கள், ஆதனங்கள், பாதகங்கள், சூதுகளும்
வாதம் பிடித்து வலது செயலிழந்தே
சாகும்.... இனிமலருஞ் சந்ததிகள் சித்திரையா
ளாகி வசந்தத்தின் வாசனைகள் மொட்டவிழ்ந்தே
மேகத்துச் செய்கை மிளிர்ந்து வளங்கொழித்துத்
தாக மனைத்து மடங்கித் தளிரோடே
வெண்பட்டுப் போர்த்துள்ள *மாவிலங்கை இலைகளின்றிப் பூத்துச்
சித்திரையை வரவேற்கும். மாவிலங்கை வாழ்வு பெற்றுப்
பண்பட்டு வாலிபங்கள் பச்சைப் புரட்சியிலே
பஞ்சம் பறக்கவைத்துப் பல்சுவையும் தந்தெம்மைக்
கொஞ்ச வந்தாள் புத்தாண்டுப்பெண்.

'வகவம்' சிறப்புமலர் - பூபாளம்
(1983 தை)

* மாவிலங்கை : *இலைகளின்றிப் பூத்துச் சித்திரையை வரவேற்கும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டங்கள்

இவ்வுலக உருண்டையிலே மானிடர்கள் தனித்தனியே மைமொன்றைக்
கௌவிப் பிடித்துள்ளார். நுணுகுகையில் செவ்வையற்று விளிம்பிலுள்ளார்
எவ்வளவோ பொதுக்கியுள்ள இக்கோளம் அனைத்துமே சுமந்தவாறு
எவ்வள வென்றளவற்ற முடிவிலியாம் அண்டத்தில் தரியாது ஓட்டம்.

பகற் பொழுது இரவினையும் இராப் பொழுது பகலினையும் துருத்திச் செல்லும்
அகம் புறத்தை, புறம் அகத்தை அணைப்பதற்காய் அலைச்சலுற்று அதற்குள் மாயும்,
'சக' 'சய'வை 'சய' 'சக'வை நெருங்கிவர, தலைநிமிர்த்திப் 'பெருக்கல்' மொத்த
அகம்பாவ அருட்டலொடு 'பகுத்தல்' என்ற மென்னுணர்வும் சேர்ந்தோர் ஓட்டம்,

"நாட்டங்கள்" அடைவதிலோர் மனமகிழ்ச்சி, 'நெரிசலிலும்' நயந்தான் எல்லாம்,
'தேட்டங்கள்' சேர்ப்பதற்குத் தேரோட்டம், நாளாந்தம் சுமையின் வாட்டம்
ஆட்டமெல்லாம் ஞானிக்குப் பொய் மாயாஜாலம் இந்த ஓட்டம், நீட்டம்
கூட்டமாய் வெறுமைதரும் இழிவூட்டம் பெற்றுள்ள "ஓட்டம் வேட்டை"

ராமர்களை வெல்லுகிற ராவணரும், துகில் வழங்கும் 'துச்சர்' தாமும்
பாமகளைப் பசிக்கவைத்துப் பாலர்படிப்பினை காட்டும் ஆசான்மாரும்.
நாகமகளைப் பொருள் கேட்கும் உலுத்தர்களும் நாயோட்டம் 'நாநீரோட்டம்'
தாமதமே யில்லாத ஓட்டங்கள் விளையாட்டின் ஓட்டம் போலும்.

1979 ஆனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகங்காட்டும் புலவர் மணி

ஓங்காரத்தின் உட்பொருளைத் தந்தைக் குரைத்த தமிழ்த் தெய்வ
ரீங்காரத்தில் முகங்கழுவித் தாங்குங் கதிர்கள் மணி சொரிய
வீங்குங் குறிஞ்சி முல்லையினை மருதங் கைகோர்த் தணைத்து மெச்ச
மூங்கில் நதியின் முலைசுரக்க முழுமைப்பேற்றில் குளித்த மணடூர்.

மண்டூர் மண்ணின் விளைச்சல்பல, மனிதம், புனிதம், ஆன்மீகம்,
பண்டைப் பனுவல், பண்பாடு, பசிக்கும் வயிறு கொள்ளளவு
முண்டு கொடுத்து நிமிர்த்தி மன முறிவுமகற்றிச் சுகச்சாந்து
மண்ணின் வாழ்வு மாட்சியுற விடியும் விளக்காய் ஒளிருமிடம்.

இடத்தின் நடைக்குள் ஊர்ப்பெருமை உலகுக் குணர்த்தும் ஒரு உடுவாய்
அடக்கத்தோடு மறிவோடும் ஆட்சி நடத்தும் பிறப்புகளின்
தடத்தே பிறந்த புலவர்மணி தமிழை உழுது விளைத்தமணி
அடைவுப்பேற்றில் அணைகடக்க அருளும் 'முருகன் அணிபதிகம்'

பதிகம் இளைஞன் பெரியதம்பிப் பிள்ளை பாடிப் பதிப்பித்த
விதிதான் 'விபுல முனி' சொன்ன அமுதக் கலச அருமை மணி
சுதியுந் தாள லய மொன்றிச் சுவைக்கு மொலியி லூற்றெடுத்த
நிதியாய்ப் பாயும் நதி நீராய் நிலையாய், மலையாய் நிமிர்ந்த தமிழ்.

தமிழ் மாப்பிசைந்து மரபுத்தேன் பண்பாட்டுத் தேங்காய்த்துருவல்
நமது கலாசரப் பயறு அடப்பம் வைத்த மோதகங்கள்
சமயத்துக்குப் படையலிட்ட தம்பி பெரியோன் பிள்ளை, அன்றே
தமிழையுயர்த்தித் தானுயர இறையோன் கடாட்சம் கிட்டிற்றே

கிட்டக் கிட்டச் சுமை யேறப் "பணிவே பெருமை"எனுமாட்சி
தொட்டுவளர்க்க, "நான்யாப்பில் மெய்" யென்றிங்கே மெய் யெடுத்தோன்
தட்டுப்பட்டும் புகழ் வேண்டேன் பட்டம் பலதும் பாரமிங்கே!
மெட்டாய் புலவர் மணிச்சுமையை மட்டும் ஏற்பேன் என வாழ்ந்தோன்.

வாழ்வில் "பண்டிதமணிப்பட்டம்" "இலக்கிய வித்தகன்" எனும் மகுடம்
ஆழப் புலமைக்களித்தவர்கள் அடக்கங்கண்டு பிரமித்தார்
சூழ வாழ்ந்தோர் தமிழ்ச்சுனையில் தொட்டும், குளித்தும் பல்தே ய்த்தும்
நீள அகலம் சிறிதெடுத்து நெஞ்சால் மெழுகிச் சுவைக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு இலக்கியத்தின் பாரம் பரியப் பிரதிநிதி
கட்டுப்பாடாம் சாதீய வெறிக்கே வேட்டு; தொலை நோக்கு
பட்டம் பதவி பறித்தெடுக்கும் பசையே பறந்த சமூகத்தின்
கிட்டிப் புள்ளு விளையாட்டைக் கீழாய் வெறித்த நெறி முகமே,

பிரபஞ்சத்தின் விசாலத்தை, வெறுமை வழங்கும் நிறைவுகளை
உரசிப்பார்த்து "வளைவும் நேர்" தர்மம், கர்மம், ஞான வழி
உரத்தில், ஆன்ம வெளிச்சத்தில் மெய்ம்மை நெறிக்குள் தளைபட்டு
நிரந்தரத் துள்ளே தனை நுழைத்த நிமிர்ந்த சிந்தைப் பூரிப்பே!

"பலனைநோக்கேல் கடமையைச் செய்" நான் சொல்லுகின்றேன் நிறைவேற்று"
"அலையா மனத்தனாய் வீரத்துணிவோடிங்கே பொருதி வெல்க"
" நிலையா வாழ்வில் அதர்மத்தை வீழ்த்தத் தானுன்புத்தி தந்தேன் "
"கலையே யுனக்குக் கைவிளக்கு" கண்ணன் சொன்னான் கீதையிலே

சொல்லும் பொருளும் மந்திரமாய் ஒலிக்குள் ளடங்கும் வேதத்தால்
வெல்லும் வினையை வேரோடு வீட்டுப்பேற்றைத் தருஞ்சாரம்,
புல்லும் விளங்கக் கீதையினைப் புதுக்கி வெண்பாக் குழையலிட்ட
நல்லோன், வெள்ளைத் தேசீய உடைபோல் மனத்தின் நிறை வாழி!

மட்டக்களப்புச் சமுதாயப் பாரம் பரியந்துலங்கவென
ஒட்டுப்போட்டு முள்பிடிங்கி அமாவாசைக்குள் நிலவாகி
வெட்டுக்காட்டுப் பயிராகத் தொட்டுத் தமிழ்த் தேன் சுரைகளிலே
மெட்டுப் பாட்டும் தத்துவமும் விளங்க வளர்த்த மேலாளன்

குமுறுங்கடலுங் கரைக்கடக்கம் கொதிக்கும் பால் அப்படியல்ல,
தமிழுக் கென்றோர் தனித்துவத்தைத் தளைவதிலக்கண மரபு
சிமிழுக்குள்ளே அகலத்தைத் திணித்துக் கவிதைத் தேரேற்றி
நம்மை அதிலே உட்கார்த்தி அடைவுப் பலத்தைப் பாய்ச்சியவன்

இலங்கை மணித்திரு நாடெங்கள் நாடென்றன்று மாணவரின்
துலங்கு மனங்கள் தூணாகச் சாந்து கொடுத்த ஒற்றுமையை
கலங்குஞ் சிந்தைக் கயவர்பலர் கறையான்போல அரிப்பதற்கு
விலைபோய்ப் பதவிப் பட்டுடுத்தல் காணாய். சபிப்பாய், சரித்திடுவாய்!

நிரந்தரமானோர் பட்டியலில் உனக்கும் பேறு 'புகழேந்தி!
கரங்கள் தழுவுமுன் சிந்தை எமையும் பக்கத் திணைத்துயர்த்த
வரங்கள் எமக்கும் விதிப் பென்றால் வடிவம் மாறி வரக்கூடும்!
சுரங்கள் மாறாக் கவிதைகளைச் சுரண்டுந் தகுதி எதற்குண்டாம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்கை தணிந்த வெற்றிதய உணர்ச்சிப்படிமம், விழுமியங்கள்
கூட்டிச் செந்நெறி இலக்கியங்கள் கொழுக்க நிறைத்ததேசீயன்
ஊட்டுந்தாயின் உவப்பெண்ணம் ஓர்மம் மாட்சி முத்திரையில்
தீட்டப்பட்ட ஈட்டத்தால் திண்மைத்தித்திப் போடுதிங்கே!

உலகை ஒருமைப்பார்வையிலே "உள்ளதெடுத்து நல்லது"கள்
உலவவிடுத்து நாமகட்கு இலம்பக ஆரமணி வித்து
தலமும் குருக்கள் மடமுமென்றும் சாகாவரத்தை அறைவித்து
நிலையா அரச இயல் சுழியை "விளத்தி" வரலாறானவனே",

வெறுமைப்பட்ட வாழ்வியலில் அறிஞர் கூட்டம் முளைத்தெழும்ப
பொறுமைத் தமிழால் நீரூற்றி நாளும் வளர்த்து முன்னெடுத்து
இறவா நட்பால் இணைப்புகளை இயக்கியென்றும் தாய்மொழிக்குள்
நிறைந்தாய், நிலைத்தாய் புலவர்மணி, நின்றே மணக்குஞ் சிந்தைமலர்.

பிறப்பால் வாழ்வால் இந்நாட்டில் வாழுமுரிமை பொதுமையெனுஞ்
சுரப்பால் சுதந்திரங் கிடைத்த அன்று கீதமிசைத்த இளங்குயிலே,
'பறப்பால்' குறித்த ஓரினத்தின் சொந்தமிதென்று "மனத்தாலே
கறுத்தார்" கூறி இம்சிக்கும் செயலுக்கு அறமா நாம்பாட?

பாரதப் போரில் கீதை சொன்ன கண்ணன் உனது தோழன்தான்!
கூரை பறந்த வீடுகளாய், குடிக்கும் கஞ்சி சுகதிகளாய்
நாரிலறுந்த மலர் விசிற நாலாதிக்கும் நம்சனங்கள்
சீரேயழிந்தார் புலவர்மணி செப்பாய் இதற்கோர் தேற்றத்தை

உனக்குள் இதற்குப் பரிகாரம் இருக்கும் தேடின் விடிவுவரும்
மனத்தர் பொருத்தராய்த் தேவை, மாசு படிந்தோர் ஏராளம்.
"எனக்குந்தேவை முன்னுரிமை" யென்றால் நிலமை எவ்வாறு?
கனத்துக் கனத்து மனம் வெடித்துச் சிதற, நேயம் தொடுவானம்.

வாழ்வைத் தமிழால் தின்றமணி, நீழ்வைத்தமிழால் இழுத்தமணி
பாழ்வை மொழியால் உரசிவெட்டிப் பரிவுக்கடலில் மிதந்த மணி
ஏழ்மை தமிழால் இடறுண்ண இன்னுந் தொடரும் எழுச்சி மணி,
நாளைப் பொழுது சுகம் விரய நடக்கும், உருளும் புலவர் மணி

ஐப்பசி 1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வாவின் சொல்வழி நடந்தோமா?

உடல்தளர்ந்தும் இளம் உளத்தர், உத்தமரெம்
தமிழர் தந்தை உன்னிப்பாய்ப் பரிவு பாசத்
தடத்தூடே அரசியலை வழி நடத்தித்
தமிழினத்தின் மனங்களிலே வீடாய் வாழ்ந்தும்,
அடக்கத்தால் உடல் களைத்துப் பாதிவழிப்
பயணத்தில் அனைவருமே தலைமையின்றி
விடப்பட்டோம், என்றாலும் தந்தை நீ
கூறி வைத்த மந்திரங்கள் ஏற்றுள்ளோமா?

தனிமனிதப் புகழ்தேடா இனவிளக்கெம்
மனங்களிலே ஒளியாகிச் சுடருஞ் சோதி,
இனவுணர்வைப் பாய்ச்சி அதில் தமிழ்ச்சாதி
உரிமைக்கு வேலியாய் வாழ்ந்த நீதி
சனத்துக்குள் சரித்திரத்தால், மொழி, சமய
கலாசார தனித்துவத்தின் மரபால், பண்பால்
தனித்த இனம் நாம் என்று 'ஆள்பவர்க்கு'
உறைக்க வைத்த அஞ்சாத தருமவாதி.

'நாகரிக அரசொன்று பெரும்பான்மை
இனநலனைச் சிரமேற்றுப் பணிவதல்ல'
'நோகடித்துச் சிறுபான்மை மக்கள்மன
விருப்புகளைக் கொலை செய்தல் நீதியல்ல'
'நாகமாய் எமைத்தாக்கும் அநியாயம்
விபரித்தால் அது வகுப்பு வாதமல்ல'
'பாக மெமக் கில்லையெனும் ஆட்சியினர்
மனம் விழிக்க ஏற்ற சக்தி சாத்வீகம்தான்'.

'தியாகமின்றி எவ்வினமும் விடுதலை பெற்
றின்புற்ற வரலாறு உலகிலில்லை'
'தியாகத்தோ டொற்றுமையாய்ப் போராடி
உரிமை பெறல் நம்மினத்தின் கடமையாச்சு
அயலிடத்துத் திருடருக்குள் 'பாரிஜாதம்'
பறித் தெடுக்க ஓய்வின்றி நீண்டகாலம்
சுயவழியாப் போராட்டம் நடத்த நாம்
தயாரானால் நிலையான வெற்றியாள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழருக்குச் சுய ஆட்சி வழங்காமல்
சுதந்திரத்தின் பெறுமதியை எவருமிங்கே
உமியளவும் அனுபவிக்க முடியாது
அமைதி நிலை நாட்டுக்குள் இருக்க மாட்டா!
தமிழர், மொழி கலாசாரத்துடன் வாழச்
சமஷ்டி அரசாட்சிமுறை வழங்கப்பட்டால்
நமது மனம் வேகாது, மாயாது,
மற்றவரும் சுகராகம் பாடி வாழ்வார்"

" இங்கு நாம் அரசியலால் பொருளாதார,
மொழிபேசும் உரிமைகளை இழந்து நாளும்
மங்கி, சிறைக் கைதிகளாய், சிறைநிரப்பும்
கேவலத்தை நிதம் நினைத்து வெதும்பிச் சாகோம்!
எங்களுக்குஞ் சேர்த்துத்தான் வெள்ளையன் இச்
சுதந்திரத்தை சுதந்திரமாய் விட்டுப்போனான்
எங்களின மீட்சிக்கும், விடுதலைக்கும்
கருத்துகட்கும் விலை தெரியார் - பணிதல் வாழ்வா?

"வகுப்புவாத அரசாங்கம் மாறிமாறி
இன ஒழிப்பைச் சன்னதமாய் முன்னெடுத்து
யுகக்கணக்காய் அடித்துறுக்கி அதட்டி, அடி
பணியவைத்து, ஒடுக்கி, மேய்த்து ஓரங்கட்டித்
தகுதிகளைக் கணிக்காத கணணிகொண்டு
தான்தோன்றித் தனத்தாலே கொச்சையாக்கி
நுகமிழுக்கும் எருதுகளாய் எமை நடாத்தும்
மேய்ப்பர்களாய் "தொடர்நாவல்" எழுதுகின்றார்"

"எமது நிலம் பறிபோயின் இனமும் வீழ்ந்து
மொழியோடு நடத்தைகளும் கலையும் மாயும்
நமக்கென்றோர் பிரதேசம் தனித்துவமும்
வாய்ந்ததாய் வடகிழக்குத் தாயகத்தில்
அமைக்கையிலே, பலவீனம் காணுமெனில்
அடிமைநிலை, தலையசைத்தல் தொடரச்செய்யும்,
சமஉரிமை மொழிக்களித்தோம் என்றாலும்
வாழ்வமையா தாயகத்தைக் காக்கவேணும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஐம்பத்து எட்டு' கண்ட கலவரத்தில்
எரியுண்டோர், கொலைப்பட்டோர் போக மீதம்
வம்பரால் விரட்டுண்ட தமிழ்ச்சாதி
வந்துதஞ்ச மடைந்தநிலம் வடகிழக்கே!
கம்பனும் வள்ளுவனும் சொன்ன நெறி
கற்றநமக் கிவர்களென்ன புதிதாய்ச் சொல்வார்?
நம்ப நட நம்பிநடவாதேயுன்
வழி நடத்தல் உன்னிப்பாய்ச் சிந்தித்தாயா?

"பலத்காரத் தாலெம்மைப் பணியவைக்க
அந்தரங்கத் திட்டங்கள் அரசு தீட்ட
விலாப்பக்கம் பௌத்தமத வேதங்கள்
வழிகாட்டும். விலையில்லா மனிதம் சாகும்,
"சலுகையென்பதுரிமையல்ல" பொறுமையொடு
சாதுரியம் விடாப் பிடியா துழைப்புத் தேவை,
அலுமினியம் வெள்ளியல்ல அற்ப நலன்
இனமளிக்கும், அறிவு கொண்டு தீர் வெடுப்போம்"

"தொண்டர்களைப் பலியிட்டு நானொதுங்க
முடியாது உங்களுடன் நானும் நிற்பேன்
உண்டுடுத்தல் வாழ்வல்ல முன்னேற
விழுமியமுந் தன்னடக்கம் நேர்மையேற்றுத்
தீண்டாமை, சமூகத்தில் கொடும் நஞ்சு
கொன்றதனைப் புதைத்துவிடு. என்றோ ஓர் நாள்
மாண்டுவிடும் அரசபுகழ். நிலையல்ல
அற நெறியில், பொதுநலத்தில் வாழ்வைப்பேணு

"நம்மவரை நாங்களே ஒடுக்கியாண்டால்
பெரும்பான்மை, சிறுபான்மை பேசல் ஞாயம்?
தம்பி, தங்கை, மக்காள் நீர் சாதி பேசி
வரட்சியினை வாழ்வுக்குள் இழுத்தால் துன்பம்.
தமிழர் புத்திக் கூர்மை அரசியலிற் காட்டிச்
சரித்திரத்தைப் புதுப்பிக்குந் துணிவு கொள்க!
பிரிவினையைக் கேட்பவர்கள் நாங்களல்ல
எமதுரிமை மறுப்பவரே அதைச் செய்கின்றார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரும்பான்மை மக்கள் கொண்ட நடத்தையாலே
பிரிவினைதான் சரிபோலத் தோணுதிங்கே!
கரும்பென்று நாணற்புல் காட்டுவோரை
நம்பிநாம் இணைவதிலே பலன்வராது!
"கடவுள்தான் இந்நாட்டில் தமிழைப் பேசும்
மக்களைக் காப்பாற்றியருள் காட்டவேணும்"
மத, சாதி, பிரதேச வேறுபாடு
இல்லாத தாயகக்கோட் பாடே கொள்கை"

"இளைஞர்களைச் சிறையிலிட்டு அடக்கிவிட்டால் ?
நீருள்ளே பந்துபோல் உதைத் தெழுந்தார்
களைப்பின்றி எனை இறைவன் தரிக்கவைத்தல்
தமிழர் தனித்தன்மை பிறப்புரிமை மாட்சி
விளைவிக்க (என்) றெண்ணுகிறேன் பலந்தருவான்
உங்கள் வாழ்த்து எனை என்றும் வாழச் செய்யும்,
இளைஞர் உயிர் எதுவும் வீண் இழப்புக்குள்
மாயாது இருப்பதனை நிதானித்தேகு.

"நமது குல நடவடிக்கை இளைஞர்கையில்
இருக்கிறது. இதையெந்தன் சீவியத்துள்
தமிழினத்தின் விடுதலை கைகூடு மென
எண்ணுகிறேன் இல்லை என்றால் "வாலிபர்கள்
போராடிப் பெறுவீர்கள்" என நம்பிக்
கண்மூடி இயற்கை தரும் பரிசை ஏற்பேன்
நாராகக் கிழியாமல் ஒன்றியுங்கள்"
எனச் சொன்னமந்திரங்கள் ஏற்றுள்ளோமா?

**தந்தை செல்வா நூற்றாண்டு கவிதைப்போட்டி**
**அம்பாரைமாவட்டம் முதலாம் பரிசுக்கவிதை 28.03.1998**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்புக் கோளம்

நக்கீர விமரிசன நாயக வீ. ஆனந்தா,
சக்கை இலக்கியத்தின் சள்ளையில் குத்தினாய்,
வாசிப்பின் போஷகனே, நேசிப்பின் நேசனே,
பட்டமோ, பதவியோ அணுகாத வித்தகனே,
கட்டை உடல், மீசை, பெருத்த தலையுடன்
காலையில் என் வீட்டுக் கதவிலே தட்டி
உசுப்பி, கனத்த சிந்தனை நிறுவல்களால்
என் பேனா எழுந்து எழுதத் தூண்டிய
சின்ன வயதுக்காரன். புத்தகக் கை விழுமியன்,
வாசகர் வட்டத்தால் இலக்கியச் சோதனைகள்
விழுது விட்டு வலம்வர உழுத சாதனைகாரன்
அன்றையக் கிராமியப் பண்புகளை
இன்றைய இளசுகளுக்கு இனிக்கும் வார்ப்பில்
இசையூட்டிக் காட்டிய பிரசுர வீணை,
மதங்களைச் சமயங்களாய் விளங்கிய கலைஞன்
மலையாளத்தையும், தமிழையும் மோகிக்காமல் காதலித்தவன்
இலக்கிய உரசல்களே வாழ்வாக்கிய இனியவன்
சலனங்களில்லாத சாட்டை வசனங்களால்
தமிழை அர்ச்சித்த தமிழின் தம்பி ஆனந்தா,
புதுக்குடியிருப்பில் மனிதவுருப் பேய்கள்
காய்ச்சிய மானிடச் சடலக் கூழ்ப்பானையில்
நீயும் விழுத்தப்பட்டாய் என்ற செய்தீ
எமது செவிப்பறையை நொறுக்கி
மனங்களைச் சுட்டு அமிலத்தில் போட்டதே!
காரைதீவு கண்ணகையம்மன் கோயிலடி
அரசுமரமும் உன் விமர்சனம் கேட்டுத் தளித்ததால்
இலையசைக்கக்கூட மறந்து, விறைத்து நிற்குதே!
நீ.... சிவப்புக் கோளமாய் ஒளிர்ந்தவன்
நலியாத சிந்தனைக்கு மூச்சுக் கொடுத்தவன்
என்றும் எம் உள்ளேயும் வெளியேயும்
நிலைத்துள்ளாய்........!
சுட்டவன் பட்டுப் போக,
விமர்சனம் உள்ள வரை நீ வாழ்வாய், வாழ்க!
உமக்கு எம் இதய இழைகளால் சொரியும்
அஞ்சலிகளை ஏற்றுக் கொள்.

வீ. ஆனந்தனுக்கஞ்சலி

(காரைதீவு கம்பன் கலைக் கழகம் 07 - 01 - 1996 ல் நடாத்திய
அஞ்சலிக் கூட்டத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாப் புலமை

உலகமே, நான் உன் ஓட்டில் நின்றொதுங்கி
ஓர் வினாக்குறி "அடிப்புள்ளி
நிலமை"யில் நின்று என் மனம் அணிந்துள்ள
நிலையிலா உடைகளைந் துன்னின்
விலையுனக்கேதும் இருக்குதா? உன் மேல்
உலாச் செய்யும் மானிடப் புழுக்கள்
பலமழித்துன்னைப் பழமெனத் துளைத்துப்
பவித்திரம் தேடுது பார் நீ.

என்மனக் கண்ணில் நிறுத்தியேயுன்னை
நீள்யுகக் கணக்கிலே கணித்தேன்
உன்பெரு உருவால் வேதனையணுவை
ஒரு நொடி நிறுத்தவும் ஏலா
என்னுள்ளேயுன்னை இழுத்தெடுத்தமர்த்தி
எழும்பினேன் உன் நிறை ஏனேன்?
சின்னதாய்ப், பஞ்சுப் பொதியெனச் சுமக்கச்
சுகக்களைப் பளிக்கின்ற சொர்க்கம்.

துலாவிலே நீரை அள்ளினால் துலா ஏன்
துணைக்கிங்கு குனிந்தெழவருதோ?
வீலா எலும்புடைய இழுக்குது "ஆஸ்மா"
விளக்கமாய் இசையெனப் படுமோ?
உலாவந்த நிலவில் உன் நிழல் படிந்தால்
உண்மையின் மறைப்பெனுந் தெளிவோ?
பலமிலான் வீமன், தலையிலான் இராவணன்
எனப் புதுப்பித்தல் சரியோ?

பசியெனக் கெழுந்தால் பார்க்கிறேனுன்னைப்
பரிதாபம் வருமொரு கணமே,
"உசி" என நாயை எழுப்பி ஓர் "பிச்சை"
ஓட்டிப் பின் அனுதாப நிணமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசிவிலாக் கண்ணீர் பொசிகிற உன்னால்
கவலையேன் நான்பட வேணும்?
நசிகிற தன்மை என்னிடம் கிடையா
நானுன்னால் சாவதா?..... சேச்சே..!

ஒளி ஒரு கீறும் உன்னிலே கிடையா
"ஓர் வெறும் உருண்டை நீ" "சிலபேர்"
அளிக்கிற மதிப்பால் இளிக்கிறாய் என்னை
கொழிப்பனுன் கீழ்மையைக் கவியால்
சளிப்பிடிப்பாலே சத்திதான் வருது
சாட்டென்ன உரசினால் அமிலம்
ஒழுகுது..., அதிலே வளம் பல காட்டி
வாழ்க்கையைத் தீட்டினாய் விறைப்பில்,

ஏசலென்றிதனை எண்ணினால் அதற்கென்
இரங்கல்கள் என்றென்றும் ஏற்க!
வாசமென்றிங்கே பூசுதல் பாச
வேசத்தின் கோசமே தவிரப்
பூசனையல்ல, புதுமனைபுகுந்தேன்
புதிதுடுத் தென்மனைவருக,
வீசினேன் "வலையால்" விளத்துதல் ஏலா
விண் துகிலுரிந்திடில் விளங்கும்

"சா" எனுங் கத்தி காட்டி நீவெருட்டி
ஓய்விலா உழைப்பினை உறிஞ்சி
வாயினை நிரப்பிச் சிரிக்கிறாய், உணரார்
"வாய்விலே" அழுதலுக் கழுதேன்
சாய்விலா என்னைத் தென்றலாமுறிக்கும்
சச்சச்ச "சள்"ளொன்றும் வேணாம்
போ உனக் கிசைந்தோர் புனைந்துனைப் பணிவார்
புலவன் நான் கதிரொளி புரி நீ !

1986-10-04 இரவு 2.30 மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1991 உலக ஆசிரியர் தினப் போட்டியில் கல்முனை மாவட்ட முதலாம் பரிசுக் கவிதை)

# சின்னஞ் சிறு விதையிற் பென்னம் பெரு விருட்சம்

ஓங்கி உயர்ந்தெழுந்து ஓர் பேரூர் விசாலத்தில்
தாங்கும் விழுதுகளால் தன்னை நிதானித்துச்
சின்னஞ் சிறு விதையிற் பென்னம் பெருவிருட்சம்
சின்னப் பவளப் பழக்குலைகள் போர்வை செய்யத்
தின்னும் பறவையினம் திக்கெல்லாம் எச்சத்தால்
இன்னும் பல விருட்சம் எங்கும் விலாசமிடும்
கல்விப்பொரு விருட்சம் கால்பதித்த மண்பரப்பை
எல்லையிட்டு நிற்கும் அறுபத்து நாலுகலை
ஆசிரிய வித்துகளாலான விருட்சங்கள்.
காசுக்குக் கல்விவிற்போர் அறிவுப் பரத்தையென்று
"சோக்கிரட்டீஸ்"சொன்ன சுளைச் சொல்லின் பெறுமானம்
"காக்குமினம் ஆசிரியர்" காசுமதிப் பேதிதற்கு?
வாழ்க்கைப் படகசைக்க வாதாடும் சம்பளத்தில்
கீழ்ப்படியாய் நின்றுயர்த்தும் சின்னஞ் சிறுவித்தாம்.
வானப் பெருவெளியைத் தீண்டும் விருட்சங்கள்
நாமம் நிலை நிறுத்த நல்லுரமாய்க் கீழுரமாய்த்
தாழ்ந்தும், அறிவொளியாய் மேல் நின்றொளித் தொகுப்பால்
வாழ்வுக்குப் பச்சையத்தை வாயிலைகள் போஷிக்க
ஆவிகொடுத்தும் அரவணைக்கும் ஆசிரியன்
கூவுங் குயிலைத் தன்குஞ்சோடு சேர்த்தூட்டும்
காகம் பிரதியுபகாரம் பெறாதது போல்
மேகம் தன் மின்முலையால் பூமிக்குப் பாலூட்டிக்
காலமெலாம் கைகொடுக்குங் கண்ணியத்தின் புண்ணியமாய்
மூல மெழுகுவர்த்தி மூச்சடக்கி அக்கினியில்
தன்னை உருக்கித் தியாகஞ் செய்தாளுதல் போல்
தண்மையின் தாற்பரியம் சந்தனக் கட்டை, தனைத்
தேயவிட்டு, நெற்றித் திலக மென மாறுதல்போல்
தோய்க்கும் உடைக்குச் சவர்க்காரம் தேற்வுற்று
அழுக்ககற்றி மென்சுகந்தம் ஊட்டுஞ் செயலாய்
வெளுத்த "உடுப்புள்" விசையான ஆசிரியம்
சின்னஞ்சிறு விதையிற் பென்னம் பெருவிருட்சம்
எந்நாளும் வாழுமினிது.

19-09-1991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பச்சை"

கூறிவைத்தோர் இலக்கணத்தை ஒழுங்காக மாறாது பார்த்தால் சொற்கள்
"ஈறுகெடல் இடைநின்ற உகரம் "இ" என ஒலித்தல் ஆதி நீளல்
அடி அகரம் "ஐ" ஆதல் தன் ஒற்று இரட்டித்தல் முன்னின்ற மெய்திரிதல்,
இனம் மிகுதல் இவை போன்ற விகாரங்கள் பண்பியல்பாம் உடை, உறுப்பு

பசுமை சக ஐ என்றால் பச்சை எனப் பேசுகிறோம். ஈறு கெட்டு
பசு சக ஐ என்று முன்னின்ற மெய்திரிந்து பச் ஐ ஆகி
தன் ஒற்று இரட்டித்து பச் ச் ஐ என வந்து படிமமாகி
உடல் மேலே உயிர்வந்து ஒன்றுமியல்பால் "பச்சை" ஒலிக்குதிங்கே!

பச்சை என்ற சொல் எமது பாவனையில் பலகருத்தை ஊட்டக் காண்போம்.
பச்சை நிறப்பண்புக்குப் பலங்கூட்ட இணைந்ததிந்தப் புணர்ச்சிக் கோலம்.
"பச்சையாய்க் கூறுகிறான்" எனில் உண்மை தொனித்தாலும பகைமை கூடும்.
"பச்சைப் பொய்" என்றாலும் பொய்க்குமொரு உயர்ச்சியினை விளங்கியுள்ளோம்.

அவியாத தின்பண்டம் "பச்சை" யென்ற பெயர்தாங்கிப் பசுமைபூண,
அவித்தநெல் "புழுங்கல" என அவியா நெல் "பச்சைகுத்தல்" என்று பேண,
தவிப்புக்குக் குடிநீரும் பச்சையாய் நிறங்காணாத் தாகந்தீர்க்க
செவிக்குள்ளே நுழைந்த பச்சை சீரணிப்பில் புகட்டுவதோ நிறைகருத்து.

கள்வரிலும் பச்சையுண்டு இலைவகைகள் சமைப்பதிலும் பச்சை தேவை
சிவப்பு நிறச் சீலையையும் "பச்சைவடம்" என அழைத்தகாலம் வேறு
உள்ளமெல்லாம் "புழுகாக" ஓயாது சளசளப்போர் "பச்சைவாயர்"
வெள்ளமென நிறைந்தொலிக்கும் தமிழொலிகள் விசையுறுங் கருத்தின் சொத்தே'

21-07-1986.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(14-05-1984 ஒலிபரப்பான கவியரங்கு)

## முதுமையில் இளமை முளைக்கும் போது......

மடைதிறந்த வெள்ளமென மொழிவந்து சேவகஞ் செய்து அம்பாய், அன்புப் படையாலே அயர்வோட்டக் கலைமேவ விசையூட்டிக் களங்கள் வெல்வார். "அடேய்தம்பி நீ எழுதநேரமொன்று ஒதுக்குவதா? "என்றே பாட்டில்"
தடையறுத்து வெட்டுகிற" பாண்டியூரன் தலைமைக்குத் தலை பணிந்தேன்.

"ஏதேதோ" காரணத்தால் நீள் நாளாய் தரித்திருந்த கவியரங்கை
வாதாடிக் கொணர்ந்தாற் போல் இன்று வான் வழி மூலம் ஒலிக்கவைத்த
சீதேவி வானொலிக்கும், இவ்வரங்கைச் சிறை செய்யுங் கவிஞருக்கும்
காதுகளைத் தீட்டி வானொலிப் பெட்டி அருகிருப்போர் பேறும் வாழ்க!.

"முதுமையிலே இளமைவந்து முளைக்கும் போது...."
முதுகெலும்பு நிமிர்கிறது தலைப்பைக் கேட்க,
எதிலிங்கு எது முளைக்கும்? எங்குமின்று
இளமையிலே முதுமை வந்து முளைத்துப் பூத்து
பிதுக்கங்கள் பிஞ்சுகளில் பிசிறடிக்கப்
பிசுபிசுத்த பிசின் வழிந்து ஈக்கள் மொய்க்கச்
சதைப் பிடிப்பாய்க் காட்சி, விழல் வேட்கையாகச்
சாரமில்லாத் தோலான செயலுங் கண்டோம்.

சமூகத்துக் குதவாத செயலோ, சொல்லோ,
சபையிலே மூப்படைந்தோன் இயற்றினால், ஏன்
"உமக்கிங்கே இளமைக்கா முதுமைக்கா ஓய்
உனது தலைநரைத்த"தென வினாவினாலோர்
நவமான பழமொழியை முகத்தில் வீசி
நரைப்பதென்றால் முதுமைக்கே என்பதோடு
அவமானப் படாதளவு புத்திக் கூர்மை
அவர்மனத்தோடு அரண் செய்தல் இளமைப் போக்கே!

இயன்றளவு இம்மண்ணில் இன்பமென்று
இளைப்பூட்டுஞ் செயல்களால் நிரம்பாச் சிந்தை
யயாதிக்கு, அதனால் தன் மக்கள் கூட்டி
அன்புமக்காள், இப்பிறப்பில் இன்னும், மேலும்
அயர்வின்றி அனுபவிக் ஆசையுண்டு
என் விருப்பை நிறைவேற்ற ஒருவர் உங்கள,
தயவாலே இளமைதந்தால் மாயைக்குள்ளே
மூழ்குகிறேன் எனப்பெற்ற இளமை வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றநாள் கல்லறைக்குள். சோர்ந்தபூவில்
தேனேது? தரித்த புது மொட்டே புஷ்பம்
ஊற்றொன்றை அறிவுநெஞ்சு கல்லிக்காணும்
ஒவ்வொன்றும் தொடர்கதையாய் இளமை பூணும்.
தாற்பரியம் நுண்மதி. இங்கடைவு கண்டோர்,
தள்ளாத வயதெனினும் இளமைத் தானம்
வீற்றிருப்பார், இயற்கை நிருவாணத் தோடும்
விறைப் போடே, நிறைவோடே இளமைதானே!

அறுபதில் நம் வானொலியும் இளமையான
அரிய பல அழகியலின் நடன இன்பப்
பெறுமதியில் உயர்ந்த கதை கேட்டோமிந்தப்
பெல மெங்கள் உரமான சொகுசுதானே!
உறுக்கல் கேட்ட நாய்போலச் சோர்ந்து போகா
துண்மையன்பில் ஒட்டவைத்த இதயம் துள்ளும்.
அறுவைகளும் அலக்களிப்பும் அரிப்பும் நம்மை
அழுத்திவிடும் முதுமைச் சேற்றழுக்கினுள்ளே

தேன்பிலிற்றி மகரந்தப் பூச்சும் அப்பித்
திசைதவறாத் தேனீக்கு மினுக்கங்காட்டிப்
பானத்தை நக்குதற்குப் பரிசாய் நீட்டிப்
பகலொன்றுள் வாழ்ந்தழியும் பனிக்குளிப்பூ
ஏனிதற்கு நாள் முழுது மிளமைதந்தான்
இறைவன்? இதைப்படைத்த தெமை நாணவைத்தே
"தான் தோன்றித் தனமழித்துத் 'தவஞ்' செய் தென்றும்
தக்கபடிவாழ்" என்று கற்பதற்கா?

பயில்வானும் சாவுக்குள் அடங்கிப் போனான்
பால் நிலவும் குமரிட்டும் ஓர் விசும்பில்
அயலவனின் அவதியினைச் சாட்டுக் காட்டி
அவரவரின் கூடைகளை நிரப்ப எண்ணுந்
தயவாளர் செயல்வீரம் காய்ச்சும் "ஆணம்"
கறி, சோறு பொதுமைக்கு வயிற்றுப் போக்கே!
முயல்தவிக்க அதையடிக்கும் முயற்சி கொண்டோர்
முகம் வரண்டு இளமையிலே முதுமை கேட்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மண்ணில் வாழ்வதற்குப் பணமேதேவை
மறுப்பில்லை, அதையீட்டும் போதே துன்பம்
கவ்வாதபடி, மற்றோர் நோகத் தேடேல்!
"கட்டுவது" பொருளையா? பெண்ணைத்தானே!
எவ்வாறு நம் வீடு நிரப்பலா மெனற்
அவதியிலே மனம் பதைத்தால் உடலுந் தொய்ந்து
சவ்வாகி, எலும்பு, தோல் உரசிக் கொள்ளச்
சடாரென்று முதுமை பச்சைக் கொடியைக் காட்டும்.

மனநிலத்தில் முருகியலின் பயிர்கள் வேணும்
மாசற்ற சிந்திப்பே உரமாய் ஏறும்,
தினமிளமை நினைவுகளோடு இரக்கம் நேர்மை
திண்மை, களி, ரசஞானம் ஓங்கல் சீர்மை
கனமற்ற வார்ப்புகளா லான "பீடை
நாசினிகள்" தெளித்தென்றும் வளர்க்கும் ஓடை
மனமென்றால் முதுமையிலும் இளமை நன்றாய்
முளையரும்பும், உடலிலல்ல, உளத்தின் மேட்டில்.

உளம் நீண்ட வாழ்க்கைக்குத் திறவுகோலாம்,
ஊறுகின்ற சிந்தனைகள் நடத்தைக் கோலம்
தெளிவற்ற நிறைவேறா எண்ண மெல்லாம்
அடிமனதில் அழுத்துவதால் நெறிபிறழ்வே!
தளமான மனதுக்குத் தென்புதேவை
தார்ப்பாதைப் பூவாக நினைவு சேர்த்தால்,
"குளம்வற்றக் கொதிக்கின்ற பொட்டியானாய்"க்
கூழ்ச் சேற்றில் அழிய, வயதேறித் தொய்யும்.

சொக்கிரட்டீஸ் முதுமைவய தெல்லை கண்டோன்,
சூழ்ந்த சிஷ்யர் இளமை வழிக்கனவு காண்போர்
வாக்கின் இதம் இளசுகளை இழுத்தெடுக்க
இசைந்தவள எண்ணமவர் 'இளமைப்பிள்ளை'
தீக்குளித்தால் இளமைபிரியாது ஒட்டும்
சிற்றெறும்பும் வாசிக்க நூலைத்தேடும்
தாக்கமிங்கு 'ஆண்டல்ல' மனசேவேந்தன்.
தளைக்கு மிளஞ் சிட்டுகளைக் காலம் வெல்லா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமைத் தொகுதிகளின் செறிவுக்குள் நாம்
அமிழ்ந்தழுந்தி அரண்டுன்னி எழுந்து, மாயாத்
'தெறிபுழுவாய்த்'' துடித்திறந்த நாட்களின்று
தேய்நத பிழைக் குழைந்தைக்காய்ப் பால்சுரந்து
வறிதான உறியிலே, அடி வெடித்த
'மிடா'வைத்து அதற்குள்ளே மேலும்மேலும்
எறிகின்றோம் எந்நாளும் சுயநலத்தின்
கருங்கல்லை. எதிர் நோக்கோ கிழிந்த சீலம்.

முதுமையிலே இளமைவிதை தூவிவைக்க
முயன்றுள்ளேன் இதற்குள்ளேமுளைத்தபாக்கள்
பொதுவாக முதுமையிலே இளமை வாழப்
பொதுவான சேதியிவை என்ப தெண்ணம்
எது சரியோ, பிழை, குறையோ தேடவந்தால்
இவை கூட எதிர்மறையாய்ச் சிலர் எடுப்பார்.
இதமான வணக்கங்கள். இளமையாக
இனிக்கட்டும், வாழ்வென்றும் ஈட்டங்கொள்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணங்கள் அமைக்கும் கோடுகள்

நாள் மலர் பூக்க முன் வாழ்வை மலர்த்தி ஓர்
வேள்வியைத் தேடி விரிந்த மலரொன்று
தெய்வத் திருவடிமுன் கல்லில் இருக்கிறது.
உய்விப்பாய் என்றோர் தபசி உயிர்ப்பித்தார்.
காலைப் பனிப்பளிங்கும், கல்லின் குளுமையும்
பாலின் நுரைவடிவும், வாளிப்பும், மென்மையும்,
தேன்துமியும், மஞ்சள் மகரந்தப் பாரமும்
மூன்றாம் பிறைக் காம்பும் மூச்சுக் கிதமான
வாசனையும் வாசல்களாய் வாய்க்க மதர்ப்போடு
வாசகங்களற்று, வலுக்கூட்டிப், பூசனைப்
போஷிப்பில் தன்னை அடக்கிச் சிரிக்கிறது
தென்றல் வருடுஞ் சுகத்தீபா ராதனைகள்
'குன்றிமணி' விளக்கில் கூர்மை தெளித்தது
கன்றுக்குப் பால் விடா துள்ளளவும் செம்பிலள்ளி
முன்றிலுக்குக் கொண்டுவர மூச்சுவிட நேரமின்றி
தம்மை முயல்வித்துத் தம்தம் சமய நெறி
பின்னிப் பிணைய எழ, பெய்தான் பகல்லொளியை
காலைச்சடங்குகளில் கைகழுவிக் காதலுடன்
ஆலை இரும்பாய் இளகி இறுகிவர
"நாளோட்டப் பொல்லெடுத்தார்" நட்டநடுவானில்
வேலோட்டி நின்றான் வெறிகதிரோன். இங்கந்தக்
கல்லில் கனலெழுந்து காய........,

மலருக்குள்
சில்லிட்ட சூழ்நிலைகள் மாய, உயிர்ப்படங்கி
காய்ந்து கறுத்த கதலிப் பழத்தோலாய்
தீய்ந்து உருவழிந்து ஓய்வில் கிடக்கிறது.
ஆனாலும்
நாளைக்கும் பூ மலரும், ஞானியும் இன்றேபோல்,
வேளைக்கே வந்து விரும்பும் மலர் எடுத்துப்
பூசனையைப் புஷ்பிப்பார். பூங்கா பெருமை பெறும்.
மூளைக்குள் மூப்பின்றி மூலவிசை நாணொலிக்கும்.
உய்விக்கும் மந்திரங்கள் ஓர்மையுடன் வெற்றி பெறும்,
பெய்விக்கு மெந்நாளும் பக்திப் பெருமழையை

ஆதலினால்
இன்றிந்த புஷ்பங்கள் தம்பங்கை
வேத ஒலிகூட்டி விளக்கின நாளாந்தம்
கோடுகள் கோணங்களாகா அமைப்புக்குப்
'பாடுகள்' நேர்த்தியாய்ப் வீழின் பலனுண்டா?
சாதனைகள் வாழ்விக்கும் . சொந்த நலனுக்கு
ஓதவில்லை ஞானிமலர்.

1987-08-10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிந்தவூர் பிரதேச சபை ஐந்து நாட்கள் நடாத்திய "நூலகவாரமும் புத்தகக் கண்காட்டிசியும்" விழாவில் நிகழ்ந்த கவியரங்கில் 1997-06-27 பாடியது.

## "இணைந்து வாழ்வதே எங்கள் இலட்சியம்"

முத்தான முற்றத்தில் பசுமை குளித்துள்ள
வயல் வெளி அரித்தனுப்பிய தென்றலில்
கவிதைமீது பயணிக்கிறோம்.
அரங்குக்கு வந்து நிமிர்ந்தால்,
என்மனசு தூசுதட்டப்பட்டு, சுத்தமாகிறது
இன்றைய ஆனந்தம் மனங்களின்
கறள்துலக்கும் தேசிக் காயாகட்டும்

இணைந்து வாழதே எங்கள் இலட்சியம்
இந்த மகுடத்தில் கவிதைச் சிந்தனை - சிந்தனைக்கவிதை
இணைதல் என்பதில் ஒன்றுக்கு மேற்பட்ட
மனிதனோ, மொழியோ, பொருளோ சேரலாம்
இணைப்பில் "ஒத்தபால்" "எதிர்ப் பால்"
குடும்பங்களும் விளங்கலாம்.
ஒன்றித்த உலகில் சுருங்கிய பூமியில் நமதுவாழ்வு....,
என்னோடுள்ள என்னுடன்
நான் இணைந்து வாழ்கிறேனா என்பதில்
என் உடன்பாடு எப்படி?
எனக்குள் இருப்பவன் ஒன்றைச் சொல்ல
நான் வேறொன்றைச் செயல்படுத்தினால்
இணைதலென்பது பொருந்துமா?

மனசு துண்டானது போல
இந்த மண்ணிலும் துண்டுகள்தான்
வடக்கும் கிழக்கும் இணைந்தாலும் பிரிவுதான்.
அதற்குள் தனிமாகாண அலகும் பிரிவுதான்.
அதெல்லாம் மில்லை ........, ஒரு இலங்கைக்குள்
நீங்களும் சீவியம் நடத்தலாம்
என்ற குரலின் இணைப்புத் தெளிவாகத் தொனிக்குதா?
தின்பதை மாத்திரம் சீவியம் மென்பதா - சிந்திப்போம்.
நமக்கெல்லாம் பாஷை, தாய்மொழி தமிழ்தான்,
நம்மை ஒன்றாய் இணைத்துள்ள ஊடகம் .....? அதுதான்.
அமர்க்களமாய் வாழ்வியலை அடவு வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்தை மறந்து விட்டு,
மனதாலே உறவுகளை வளர்த்தோம்.
சுமைகுறைக்கும் தத்துவத்தை மதமாக்கி
சூரியன் சிறிதென்றும் பூமி பெரிதென்றும்
சமாதானம் என்ற பதத்தை
உதட்டளவில் கொண்டிருந்தோம்
இனி நெஞ்சில் வைப்போம்.

அரசியல்தான் எமக்குள்ளே பிரிவினையூட்டி
உரசல்களால் உறுத்தியது. ஆனாலும் அந்த
ரகசியத்தை உணராத இப்றாஹீம் கிழவர்
ராமக்குட்டிக் கிழவருடன் இணைந்துதான் உள்ளார்
பரவலாய் இளசுகளின் உள்ளத்தில் பாய்ந்த
பாழ்பட்ட அரசியலின் பரிணாமம் எமக்குள்
இணைப்புகளைத் தின்று மன வேதனையைக் கூட்டி
சந்தோசப் 'பட்டறை"க்குப் பதர் கொட்டி மூடிற்று

உரிமையைக் கேட்கப்போய், உயிர்மாயும் செயலால்
உயிரைவிட உரிமையே உயர்ந்த தெனக் கொண்டோம்
பெருமையாய் மனிதனெனப் பேச்சுக்கு உதடு
பறவைக்கும் விலங்குக்கும் கீழாக உள்ளோம்.
அரசியலும் மகத்துவமும் விலங்குகளுக்கில்லை
அதனாலே வில்லங்கம் அவை தேடவில்லை
"சுய நலத் தந்திரமே சுதந்திரம்" என்றால்
சுற்றியுள்ளோர் எனைச் சாடமாட்டீர்கள் உண்மை.

மனிதனை இறைவன் படைக்கும் போது
குனிவுகள், ஏற்ற இறக்கங்கள் வைத்தானா?
எப்போது சிந்திக்கத் தொடங்கினோமோ
அன்றிலிருந்தே துன்பங்களையும் அள்ளத் தொடங்கினோம்.
சிந்தனைக் "கீச்சான்" ஆடி "ஆடி
வேற்றுமைப் புழுக்களைப் பொறுக்க
மனிதத்தை நேசிக்காமல்
மதத்தை நேசிக்கத் தொடங்கினோம்
அராபியர், இந்தியர், யாழ்பாணத்தார்
கொழும்பார், மட்டக்களப்பார்
தனித்தனிப்பண்பாடு, கலாசாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தைகளில் மட்டும் வேறுபாடு.
நாம் அம்பாரையார்,
ஒரே பண்பாட்டின் ஊற்றில்
குடித்து, குளித்து மகிழ்கிறோம் எப்படிப்பிரிக்கலாம்?

அண்ணல் நபி சொன்னார்
"அண்டை வீட்டானுக்குத் தீங்கிழைக்காதே"
தீங்கிழைக்கச் சொன்னது அரசியல்தான்.
வேறொருவரின் நலனுக்காக, சுகவாழ்வுக்காக
நம்மை நாம் தொலைத்துள்ளோம்.
பூமிக்குள் புதைக்கப்பட்ட சஹாப்தீனும்,
கமலனும் சமரத்துடன் இணைந்தனர்,
உயிரில்லாத உடல்கள் ஒற்றுமைப்படலாம்,
உயிர்சுமக்கும் உடல்கள் இணைவது பொருந்தாதோ?

"புட்டுந் தேங்காய்ப் பூவும்" போல
தமிழரும் முஸ்லிம்களும்
கொட்டுண்டு போகாமல் இணைந்து வாழ்கிறார்கள்
இது பிரித்துக் காட்டி துண்டாடி
ஒற்றுமை பேசும் அலுத்த உதாரணம்

குழைக்கிற மாவுக்கு உப்புப்போல....,
ஆத்து மீன்" கறிக்கு, பால் நாறாத
புளிமாங்காய் போல....,
ஒன்றுக்குள் ஒன்றாய் ருசிக்க வாழ்கிறோம்
இதுதான் பொருத்தமான உதாரணம்.

இதயம் இடப்பக்கம் மிருப்பதால் இனவாதம் பேசுதோ?
மருந்ததற் கென்ன? "நடுவுக்கு நகர்த்துவோம்"
பக்கஞ்சாராது நீதியை, மானிடத்தை மெச்சட்டும்
திருமறை அனைத்தும் ஒலி வடிவங்களே,
ஓரொலி மந்திரம் மற்றொலி குந்தகம்.....,
என்று நாம் மனதுக்குத் தீனி போடுவதால்
சிந்தனைக் கோவை சிதறிப்போனது.

நெல் அவிக்கும் சட்டி வெயிலிற் கிடப்பதை
எம்மிடம் காட்டி நிழலில் வையென்று
இரக்கப்படுவோரின் ஓநாய்த்தனத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்கிவைத்து விலா எலும்புகளை ஓய்வாக்குவோம்
"அசோக வனமென்றால் சீதைதான் வருவாள்"
அழகியலுணர்வு அறுந்து நலிந்தது
பிரிவினைச் சுறாவின் வயிற்றுக்குள் வாழ்ந்ததால்
சுய நலத் தீனியை விரும்பிச்சுவைத்து
சாவை வாழ்வின் உடையாயணிந்த நாம்
சாட்டின்றிக் காசுக்கு விலைப்பட்டுப் போனோம்.

என்றும் நம்மை நாம் காதலிப்போம்
அதை என்றும் எங்கும் விற்போம்
சுதந்திரத்தின் மறு பெயர் அத்துமீறல்தான்
இன்று...
வேற்றுமைக் குழந்தையைக் கொன்று புதைத்து,
அதற்குத் தண்டனையாக
ஒற்றுமைச் சிறையில் ஒன்றித்து
இணைந்து வாழ்வதே எங்கள் இலட்சியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு

சுருக்கிட்ட பச்சை ஈர்க்குடன்
ஓணான் தேடினேன்.
இற்றுப்போன வேலிக்கட்டையில்
ஒரு இளம் ஓணான்........,
முந்நாள் பிடித்து வைத்து நான்
துன்பப்படுத்திய கிழட்டு ஓணானின்
மகன்போல இது....,
தலையை மேலுங்கீழும் ஆட்டி,
அடிக்கடி நிறம் மாறியபடி.......
கறையானரித்து உக்கிப் போன
அந்தக் கட்டைக்குப் பலமான சாட்சியாய்
அது இருக்கிறதாக நினைப்பு.....,
என்னைக்கண்டதும்..
முதுகு முள் நிமிர்த்தி
ஒரு சண்டித்தனப் பார்வையுடன்
பின்னங்கால்களால் ஒரு உதைப்பு.
கட்டையின் 'கறையான் மண்'
கழன்று விழ....... நிதானித்து,
"என்னிடம் எறிகணை இருக்கிறது
'குத்தினால் உடன் பாடு....? சிந்தி...
அன்றைய டைனோஸர் என் சந்ததி
அங்கே பார் அந்த உமிக்கும்பத்தை
நேற்று அது நெருப்பைத் தின்றதால்
நிறம் மட்டும் மாறி.....,
என்னைப் போல .... உருவம் மாறாமல்....
நீ உயர்திணை யென்றும்
நான் அஃறிணை யென்றும்
மனிதர் பிரித்தால்....? நான் கீழா?
எத்தனை வேலி, சுவர், மதில்,
அத்தனையும் எனக்குண்டு"
என்பது போல
மீண்டும் ஒரு தலை உசுப்புதல்
சுருக்கை மெல்ல ஓணானின் தலைக்கு நீட்ட
வட்டக்கண்கள் குங்கும மாய்ச்சிவந்தன
வினாடிக்குள் ஓணான் சுருக்கில்.
துள்ளல், துடிப்பு, சண்டித்தனம், பாய்ச்சல் ....
தடியால் அமர்த்தி, வாயை விரித்து
புகையிலைச் சாற்றைப் பருக்கிவிட
வெறியில்.... முன்னைய செயல்களில்
மாறுபாடு, புரட்சி, தளர்ச்சி,மயக்கம்.
வயிறுமட்டும் மேல்., கீழ் அசைவு.
எனக்கு விளையாட்டு
சண்டியன் ஓணானுக்கோ......?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(25-05-1995 காரைதீவு சண்முக வித்தியாலயம் நடாத்திய பாரதி நினைவு தின விழாவில் முதலாம் பரிசு பெற்ற கவிதை)

# மக்கள் போற்றும் மகாகவி

தமிழ்க்குமரி தனக்கென்று மந்திரித்து உயிர்கொடுத்த சுப்பையாவால்
உமிகூட முளைத் தெழுந்த புதுமைகளை உரசுதற்குக் கற்களில்லை
சமூகத்தே புரையோடி நாறி நின்ற அழுக்குகளைக் கழுவித் தேய்த்துக்
கமகமத்த வாசனையைத் துளிரவிட்ட புலமைபுவி மெச்சி ஆயும்.

தோல்கிழித்துச் சுதந்திரத்தின் மெட்டெடுத்து மக்கள் மனச்சலனம் நீக்கி,
ஆல்விழுதின் ஊட்டமெழ அரண்டதழல் ஆண்டோரை உசுப்பி ஆட்ட
வேலின் கூர்க்கவித் தெறிப்பால் விண்சாடிச் சுகக் காற்று இலக்குக் காட்ட
கால் கொள்ளக் காலானபுயற் கவிஞன் மக்கள் மனத்தேரில் நின்றான்.

இலக்கியத்தின் எளிய நடைபுடைபெயர்ந்து அனைத்துறவுந் துலங்கிப்பாய
உலராத உவமைகளால் உடையுடுத்திச் சாரதியஞ் செய்த பாக்கள்
பலர் நாவும் புனிதமுறச் சிந்து மெட்டும் இசைச் சொட்டும் பூட்டுடைக்கப்
பலஞ் சேர்த்தான் தமிழினியாள் பூரித்தாள் புலமை கண்டு வறுமைகொண்டான்

கட்டுரையும், சிறுகதையும் செல்வாக்கும் சுருதி மெச்சும் சொற்கள் வேய்ந்த
பட்டாடை பல நெய்தான், பாத்தறியில் பசிய பசைபடியச் செய்தான்
எட்டயத்தின் இளைத்த தெரு ஈன்றளித்த பாரதிக்கு மக்கள் கூடிப்
பட்டங்கள் தருதற்கும், பசியோட்ட உணவுக்கும் பஞ்சம் சொன்னார்.

சொல்லோடு செயலொன்றி மானத்தின் அடிநாத வடிவவாழ்வு
கல்லான இதயத்தர் இடருக்கும் இருளுக்கும் பரிதியானான்.
வெல்ல நின்ற பிரபஞ்ச விழுமியங்கள் தெளிந்து நிறை வெற்றிகண்டு
அள்ளியெங்கள் வாழ்வுக்கும் அத்தாட்சிப் பத்திரங்கள் ஒப்பமிட்டான்

உயர்திணையோ டஃறிணையு மொருமித்துக் கண்டவற்றிலுறவு காட்டி
அயர்வின்றிச் சிறார் மனத்தும் தத்துவமும், நடைமுறையும், பணிவும் சொன்னான்
துயர்கொண்ட பாஞ்சாலி உருவகத்தால் கோடிக்கண்கள் விழிக்க மருந்து செய்தான்,
குயிலுக்கு மெருதுக்குங் குரங்குக்குங் காதல் முடிச்சவிழ்த்த கோமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமைக்கு அடையாளம் அனைவருக்கும் அன்புடைமையான நெஞ்சத்
தோழமையோ டஞ்சாமைச் சுடரொளியில் சமூக மனக் குளிர் பறக்க
வாழ்நாளைக் குறைத்தாலும் வருகடமை நிறை குடமாய் வழுக்கலின்றி
சூழுக்கும் வழியின்றிக் கொடுமைக்குள் மிடி கொளுத்தி அடிமை வென்றான்.

பட்டுகளின் பல்லவியில் சனத்தை யேற்றித் தன்தலையிற் பாச்சுமந்து
நாட்டிலுள்ள பாதையெலாம் புழுதிபாய நடந்தானே! அகலிகைகள் பிறக்க வைத்தான்
வாட்டமுற்று மனிதமனம் வெழுத்தெடுக்க இரசாயனங் கேட்டு அலைந்த கால்கள்
ஆட்சிக்குள் பதினெட்டு மொழியறிந்த குளுமை நதி வளங்குன்றிப் போமா என்ன?

பழமைக்கும் புதுமைக்கும் பாலங்கட்டி படி செதுக்கி ஏற்றி வைத்துக்
களமாடி நூற்றாண்டை விஞ்சி நின்று மக்கள் மனமேடை தோறும்,
நிழலானான்; நர்த்தகியாய். இன்றிருந்தால் நமைப்பார்த்து என்ன சொல்வான்?
மலமரைக்கும் எந்திரமாய் மனிதம் மாறி மாசுபடல் பணப்பேயால் அழிந்தோம் என்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இந்து சமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் பிரதேச சாகித்திய விழா கல்முனை 04-04-1993 கவியரங்கு)

# பரிணாமம்

உடலமைப்பு, சிந்தனை, நுட்பம், ஒழுக்கு
நடையுடை பாவனை நாட்டம்.... 'எல்லாம்'
சிறத்தல் பரிணாமம். சிந்திப்பின் வீச்சல்
பறக்கும் மனிதன் பரிணாமம் மேலோங்கி
அண்ட வெளிக் கப்பால் இருப்புகளை வென்றெடுத்து
அங்கும் குடியேறும் அங்கலாய்ப் போடுள்ளான்.
எங்கும் எதிலும் புதுமை புரிந்தாலும்
மங்கும் பரிணாமம் மனதில் புரிந்துள்ளான்.

ஆசிரியனில்லை என் அப்பா.. எழுத்தறிவார்
பாசம் பகிர்ந்தளிக்கும் பண்பில் வளர்ந்தவர்
காட்டுக் கடாத்தொடுவை கொண்டு வயல்மிதித்துப்
பாட்டால் இதமாக்கிப் பண்பட்ட சேற்றுக்குள்
முத்து விளைவித்த நுட்பங்கள் எங்களுக்குள்
சொத்தாய் ஒளிரும் சுகராகம் நித்தியம்.
ஏடுபடித்து இசைக்கலையும் கூத்துக்களும்
கூடி வாழ்கின்ற குல விருதின் "நாணயத்தில்
அண்ணாவி" யாகி அணிவசந்தன் மெட்டுகளை
வெண்ணிலாப் பாலில் வெளுத்தெடுத்த "கொம்புத்தேர்"
அன்பிதயம், நட்பு, அரவணைப்பு, காருண்யம்
என் சொத்தாய் வந்ததற்கு எப்போதும் பூசித்தேன்.
பொற்சிலைக்குப் பூணாரம் பூட்டுவதில் அர்த்தமில்லை
அற்பன் நான் கற்புக்குக் காவலாய் நிற்பேனா?
ஊர்மிளைக்குக் காவலில்லை, சீதைக்குக் காவலுண்டு
ஊரெல்லாம் ராவணர்தான் ஆசைகளின" ஒன்றிப்பாய்
பத்தா? பலநூறு தலைகொண் டலைகின்றார்
செத்தாலும் காசுக்குச் சாகத் தயார்மனிதன்
கூர்ப்படைந்த காரணமோ வேறேதோ நாமறியோம்
சில ஆண்டின் முன்பு நான் "பட்டினத்தில்" வாழவந்தேன்
நல்ல நாள் வந்தால், நம் ஊருக்குப் போய்ச்சேனை
'வாடி' வளவுகளில் வாய்க்குருசி யானபண்டம்
கூடியுண்டு வாறதுண்டு தீரா உறவு கண்டு
பின்நாளில் என்உறவைப் பார்த்துவரப் போவதென்றால்
என்உள் அதிரும் படியான கேள்விவரும்
அன்றொருநாள் உண்டான அறிவுப் பரிணாமம்
இன்றெந்தன் ஊராரை எங்கோ இடம்பெயர்த்த
ஊர்ச்சனங்கள் வேறூரில் ஓடிக் களைப்புற்று
தேரையாய்த் தேய்ந்த தென்று கேள்வியுற்றேன், செல்வங்கள்
வாழ்விடங்கள் முட்புதராய் வீடழிந்து காய்நது நெடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாழ்வெளியாய், காடாய், பரிணாமம் பூண்டுளது
கோயிலுக்குப் போனமகள் கற்பூர மானதுவும்
பூவின் மணத்தைப் புயல் கொண்ட நீள்கதையும்
போன கதைகள் புதுக்கதைகள் ஏன் நமக்கு?
சொந்த இரத்த உறவுகளைச் சுந்திக்கப்
பந்தத் தோடோடிப் பதிகண்டேன், கண் இருள
நாடிதளர்ந்து , என்கூட்டை நான்தானென்று
மூடிய கண்திறந்து பார்த்தேன்...... பலகுடிசை
மண்ணின் அடிதொட்டுத் தெண்டனிட்ட கூரைகள்
'அண்ணே, வா' என்று அசைந்து வரவேற்க,
மூங்கில் எலும்புகள் மூச்சடைத்துத் தோல்கிழிந்து
தொங்கித் துவள, விலா வெலும்பு தள்ளாட
தாங்கமுடியாச் சுமையில், குடைசாயும்
'சாங்கத்தில்' கால்கள் வழங்காத சப்பாணிப்
"பாரிச வாதப் பயணி" போல், வாயொழுகும்
தீராநோய் மாட்டின் உருவில் திருவாகிச்
செப்பணிட்டுச் சாணி மெழுக்கில் "தரை பொருக்கு"
இப்டித்தான் வாழ்வென்று இளசுகள் தள்ளாட,
சூரியச் சான்றோன் சுகமாய் ஒளிக்கற்றைத்
தூரிகையால் கோலமிட்டான். தூள்துளியாய் எங்கும்
ஒளித்தீந்தை, வெற்றுருவ வார்ப்புகள் அங்கே
பழிபாவம் பாராப் பணிவிடையோர். தேடுகிறேன்
"இஞ்சதான் நானிருக்கன் மச்சான்" தனிக்குரலில்
பொங்கிவந்த வேதனையை வெட்டி அடக்கினேன்.
என்னடா கோலமிது? ஆரிவனென் மச்சானா?
பொன்னான தேகம் பொசுங்கி நிறம்மாறிக்
திண்ணை நிறவுடலில்...., தீக்கனவு கண்டவனாய்...,
"நாகமணி மச்சான்" எனநான் இனங்காண
வேகமாய்ச் சிந்தித்துக் கண்ட விடைசரிதான்.....
எத்தனை ஆண்டாச்சி இந்தக் குடிலுக்குள்
'சத்தியமும்' பிள்ளைகளும், நானும் உடுத்த உடை
யோடி குடிபுகுந்தோம், எம்முயிர்தான் மிச்சமுண்டு
நாடு சீர் காணுமட்டும் நாமிங்கே இப்படித்தான்
வா; இருப்போம், கொட்டிலுக்குள் என்றான் போய் உள்ளமர்ந்தேன்.
ஆயிரந்தா னென்றாலும் சொந்தவூர் மாதிரியா?
மூங்கில் உளுத்ததூள் மூச்சைத் தடைசெய்யத்
தாங்காது அண்ணாந்தேன். 'கோப்பத்தை' பொலித்தீன்தாள்
நீரொழுக்கைத் தாங்கும் கவசச் செருகல்கள்
மார்பணைப்பு..., எம் ஊரை நாங்கள் அடைந்து
குடியேறி முன்போல்த் தொழிற் துறைகள் செய்ய
முடியுமெனில் வாழ்வென்றான்" மச்சான், அது சரிதான்,
நாடும் மனிதனும் நன்றாக வாழத்தான்
பாடும் பரிணாமம். இங்கே அதன் நாமம்
ஆடும்பேய் சொல்லுமொரு "கட்டு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பிடிமண்

மண்ணளையும் வயதிலள்ளி மண்ணையுண்டான்
மனைகட்டிப் பொன் பொருள்கள் மண்ணில் தேடிப்
பெண்சுகத்தாற் பெற்ற பல பிள்ளை கண்டான்
பேர் பெற்றான் பணக்காரப் போடியென்று
கண்மூடிக் கட்டிலிலே படுக்கையானான்
களித்தன ஐம்பூதங்கள். அவனையின்று
தண்ணீராற் சுற்ற மெல்லாம் கால் தொட்டார்கள்
கண்ணீரில் உறவு முறை கரையுதங்கே-

கனத்த சனம் கூடி நின்றார் "சவமெடுக்க"
களைப்புக்கும் "குரங்கடித்தார்" படமெடுத்தார்
இனத்தோரு முறவுகளுமிரைந்த ஓலம்
இடையிடையே இறந்தவனின் செயல்கள் மீட்க,
தனத்தோடு தான் பெற்ற அனைத்தும் நிற்க
தனித்தசடம், தோளேறிச் சவக்காலைக்கு
அனைபேரும் போகின்றார் அவனுக்கான
தம்கடமை நிறைவு செய்ய; இறுதிச் செய்கை!

அவன் தின்ற மண் இன்று அவனைத்தின்னக்
கேட்கிறது. அது வளர்த்த உடலந்தானே!
எவனிங்கு தப்பித்து நிலை கொண்டாண்டான்
இதுதானே எல்லோர்க்கும். "சுடலை ஞானம்"
கவனமாய் மடுவுக்குள் இறக்கிவைத்தார்
காத்துநின்ற அனைவருமோர் பிடிமண் போட்டார்
சவ மென்ற பேர் அழிய மூத்தமைந்தன்
"கொள்ளிகுடம்" எடுத்து நிற்கத் திரையும் வீழும்

எத்தனை பேர் 'சா'வுக்கு வந்திருந்தார்?
எத்தனை பேர் பிடிமண்ணைக் கிள்ளிப் போட்டார்?
அத்தனையும் இறந்தவனா கணக் கெடுத்தான்?
அல்ல.. அவை இனசனத்தின் 'துதி'யாம் செய்கை
சத்தற்ற உடலுக்குப் பிடிமண் போடல்
சமூதாய ஒற்றுமையைத் துலக்கினாலும்
இத்தரையில் வாழ்ந்ததற்கு "ஏராளம் கை"
அளிக்கின்ற பிடிமண்தான் "சாந்திச் சாரம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலை தப்பியது தம்பிரான் ....

"ஓ.எல்" எழுதப் பரீட்சார்த்தி வருகிறார்
தேய்பிறை போலாவார் தீய்ந்த அறிவு
வருகையில் பையிலே 'கல்'லும் கொணர்ந்து
"திருவிளையாடலைத்" தீரமாய்ச் செய்கிறார்,
பாடம் எழுதப் பகிர்ந்த தாளிலே
வினாவைப் பொட்டாய்ப் பதிந்து
கல்லைத் தாளிலே பொதிந்து
அதற் கெனப் பாதையில் திரியும்
சிறுமைகளை நோக்கி வீச.....,
'குறளி'யின் வித்தை போல்
பல்வேறு பாம்புப்படையாய் 'விடைச்சுருள்'
கல்லுடன் வந்து உள் விழுந்து ஆடுது.
எல்லாப் பரீட்சார்த்தி மனங்களும் ஆடுது
எல்லையை மீறி ஏதும் கதைத்தால்
"பல்லுடன், மானமும், உயிரும் பறக்கும்"
நிதிக்கு விலையான கடமையை நகர்த்த
விலாங்காய், நாணலாய், விட்டிலாய்
மாறி, அவலம் ஜனிக்க ...... விலைமாதாகி
"மயக்கங்கள் வார்த்த சிலைகளின் தோற்றம்
இயல்பாய் என் முன் முலைவளங்காட்டுது.
அருகேயிருந்து வெற்றுக் கதிரையில்
"டக்..... டணார்...., என்ற மணி யொலி போல....
திரும்பிப் பார்த்தால்....., விடை பெற்ற தாளில்
பொதிந்த கருங்கல் என்னைச் சிரித்தது
"பளபளக்கின்ற உன் தலை தப்பியது .... நீ
முன்பு செய்த புண்ணியம்" என்றது.
என்ன விளைவுகள் என் வழி மறைப்பினும்
அண்ணே! பரீட்சை நோக்குநர்" வேலை
உயிருள்ளளவும் இனியிங்கு வேணாம்.
'மயிராச்சு' மண்டை மட்டும் போதும்

16-01-1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக்களம்

அறிமுக அட்டை
தன் சட்டையைக்
களற்றி
நிர்வாணமாகி
தன் தலை
அறுத்துப்
பிறர்தலை
மாட்டி
வெள்ளைப்
புரவியாய்த்
துள்ளும்
இடமிது.

குதிரையில்
வலம்வந்த
கொச்சைத்தராதரம்
"சுப்பர்விசர்களாய்"
பரீட்சை நடத்தும்
விடியலும் புலருது.

சண்டிக் கத்தியை
இடுப்பில் சொருகி
கட்டிய காரணாய்
பரீட்சார்த்திவரவு.

பரந்த "சத்தியம்"
எங்கோ புள்ளியாய்
"பிரமாணமெடுத்து
மறைந்து செத்தது

இலவசப் புத்தகப்
பூக்களால்
இதழ்களால்
பரீட்சை மண்டபம்
அபிஷேகமானது.
"இஸ்ஸும்"
துணிக்கை
இரவலைத் தேடிய
அவஸ்தைத்
தொனியும்
தொய்ந்து அடங்குது

மாரிக்குளிரால்
சூரியன் வியர்த்தது
"இறக்கும் வரைக்கும்
ஓ.எல். எழுதி"
அறஞ் செய்ய விரும்பும்
அசுரரின் களமிது

கழுத்தை நெரிக்கக்
கண்கள் பிதுங்கிய
பரீட்சைக் குழந்தை
அரக்கு மாளிகைத்
தீயினால் வெந்து
வைத்திய மின்றி
வதங்கிக் கருகுது

10.04.1994
வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டூரில் வான்மதியம்

மண்டூரில் வான்மதியம் வாசலெலாம் எறித்த
மாண்பான கவிதைநிலா, முறை சொல்லிப் பேசி
பண்போடும் படைப்போம் பல்சுவையும் கூட்டிப்
பாலையையும் பசுமை செய்த பாடல் நிறை மேகம்
குண்டு மல்லி பூம்பந்தல் கோடைமழை என்றும்
கூவி நின்ற பூங்குயில் பாச்சுனை மரபு மாறாக்
கொண்டல், இந்த மண்ணில் இன்று இருத்தையினைச் சேர்த்துக்
கொடுமை செய்த வகையறியா தேங்குகிறோம் சோர்ந்தே

ஊருக்கு திருச்சேர்த்து முருகபதி மீதோர்
உவப்பான மாலை காட்டிச் சூட்டிவைத்த பக்தன்
தேருக்குச் சீர்செய்த செம்மை மொழிப்புலவன்
தேசமெல்லாம் புகழ்மணத்தைப் பூசிவைத்த திலகம்
வேருக்கு நீர் போலிவ் வூருக்கோர் புலமை
வேதாந்தச் சொட்டுகளைத் தெளித்து நின்ற ஞானி
ஆருக்கும் கவிதைகளால் அர்ச்சித்த முனிவன்
அடங்கியிங்கே நீள் துயிலில் ஆன மனமழிந்தோம்

அம்பாரை வினாயகர்க்கு நான் மணியில் மாலை
அழகு கொஞ்சுஞ் சொற்சரத்தால் ஆடையிட்ட புனிதன்
செம்மாந்த செருக்கற்ற செந்தமிழின் புலவன்
சீதனமாய் மானிடத்தின் உறவுகளை வென்றோன்
தம்மழகு மணிக்குரலால் அரங்குகளை இசையாய்த்
தரிசித்த ஜனரஞ்சப் பேழை இங்கே
'கும்'மென்றும் பேசாமற் குடம்பையென உடம்பைக்
கோலமிட விட்டுளதாற் குமைகின்றோம் ஏங்கி......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூங்கில் நதிவார்த்த பொன் மெத்தையிலே நின்று
மூல மொழி பாய்ச்சி அதிற் பூம்புகார் கண்டோன்
தேங்கு மட்டு வாவியிலே தாமரையுங் கொக்கும்
தாராவும் புள்ளினமும் பாடிய தாலாட்டை
ஓங்கு தமிழ் கவி வளத்தில் ஊட்டமுடன் பூட்டி
உலாக்காணச் சாரதியாம் செய்த மொழி வாணன்
வீங்கி மண்டூர் இயற்கையழ விண்ணுலகம் சேர்ந்தான்
வாங்கு மனம் மறுக்கிறதே மாயமீது ஐயோ!

கடத்துகளின் அண்ணாவி குழப்பமிலா நெஞ்சன்
கூர்மதியின் உணர்வலையைக் கொப்பழித்த மொழியோன்
பாத்திரமாய் மாறிநின்று படிப்பித்த ஆசான்
பாலகர்க்கு ஆச்சட்யா பார்போற்றும் பாவோன்
காத்திரமாய் வாழ்வியலைப் போற்றாத கண்ணன்
களமிதிலே கூத்தாட வந்தவர் நாம் என்போர்
சூத்திரமாய் இன்றணையக் காலனிட்ட சேதி
சீரணிக்க எம்மணங்கள் ஒப்புதில்லை ஐயா!

தமிழைத்தன் மூச்சாக்கி வாழ்ந்திருந்த மு.சோ
தளைந்தவைகள் வாழுமிந்த மண் மகனின் கையில்
அமிழ்குளைய கவிச்சோம சுந்தரம் பிள்ளைக்கு
அரவணைத்த இலக்கியங்கள் அழுவதையும் கண்டோம்
எமதூரில் உறைமுருகனாலயத்தின் நோன்பின்
எடுத்துரைத்த "பயன்கேட்டுப்" புராணம் வாய்புலம்ப
தமதருமை நேயனுக்காய் வான் சோகமுற்றே
யாகத்தில் இருக்க (இ) ரவி பாசத்தால் நொந்தான்

(மண்டூர்க் கவிஞர் புலவர் திலகம் மு.சோமசுந்தரம் பிள்ளையவர்கள் இறைபாதமெய்திய போது அன்னாரது இல்லத்தில் 12-02-1993அன்று நடைந்த இரங்கற் கூட்டத்தில் படிக்கப்பட்ட இரங்கற் பாக்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் நூலாவது.........!

இசைநுட்பத்துள் நுட்பம் தேடி வென்ற
காலகட்டத்தோர் நாள் தன் பிறந்த மண்ணுக்கு
விபுலமுனி வந்திருந்தார். வழக்கம் போல்
இவ்வூரின் ஆசிரியர் கூட்டம் சேர்ந்து
பசையான இலக்குள்ள சம்பாஷணைக்குள்ளே
ஊர்ப்புதினக் கதைகள் பேச,
திசைமாற்றி ஓர் ஆசான்" சாமி நீங்க
ஊரிலொரு பிரசங்கம் யாழ் நூல்பற்றி....,

..... செய்யுங்கள், இது எங்கள் வேண்டுகோள்"
எனக் கேட்டு விடைவரவுக்காக நின்றார்
மெய் சொல்லி விரோதியாய் ஆவதினால்
பயங்கொள்ளா ஞானமுனி விடை யளித்தார்
துயரோடு...., "காரைதீவாவது யாழ்நூலாவது"
என்று சொல்லச் செயலிழந்து.
'செய்' என்ற ஆசிரியர் பரமித்து
மீண்டுமவர் "ஏன்சாமி மறுப்புச் சொன்னீர்"?

எனவினவ, முத்தமிழுங் கைவந்த
வேதாந்தி மறுதலிப்பின் விளக்கம் வைத்தார்
"அனைவருமே கற்றவர்தான், அறிவுமுண்டு
ஆனாலும், இது விடயம் உள்ளெடுக்க
தினையளவு எறும்புக்கு ஆலமர
வேராளம் விசாலங்கள் விபரங்காட்ட
மினக்கெட்டுப் பயன்வருமா இசை முழுமைச்
சுவைக்குள்ளே சுவைதேடும் தொகுப்பு யாழ்நூல்,

இசைமூன்றும், பண்ஏழும், பதினோர் கூத்தும்
ஆடல்வகை பதினெட்டும் மனதுள் வாங்கி
அசைவுகளில் முத்திரைகள் பல நூறு
அவிழவிட்டு அரங்கை வென்ற மாதவிக்கு
விசை கொடுத்த யாழ் வகையை நெறிப்படுத்தி
நரம்புகளை ஒலியூட்டி நுட்பம் தாண்டித்
திசை முகந்த நம்மவரின் கலை நுகர்வுக்கு
ஆவணமாய் ஆராய்ச்சி மேற் கொண்டுள்ளேன்.

பெளதீக இயலுள் ஓர் பிரிவான ஒலியியலை
மையமாய்க் கொண்ட ஆய்வு.
காதோடும் காற்றோடும் தொடர்பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தைச் சுகமூட்டும் சுரங்களாலே
ஆதியில் நம் இசைத்தமிழன் தொட்டறிந்து
நயந்தவைகள் விபரமிட இச்சந்தர்ப்பம்
பௌதீகம் கற்றவர்கள் நம்மூரில்
எவருமில்லை, என்மீது குறையெண்ணாதீர்.

"மில்லிமீற்றர்" அலகு கொண்ட கணிப்பாலே
யாழ் நரம்பின் இடைவெளியை விளக்கிச்சொல்லச்
சொல்லுகிறீர் எவருக்கும். இது இருளே
இங்கிருப்போர் விளங்காத குறியீடொன்றை
அல்லாடி உருக்காட்டல் வீண்முயற்சி
விஞ்ஞானச் சிந்திப்பும், கணிதத் தேற்றம்
இல்லாத வேளையிது, விடைபொருத்தம்
எதிர்காலச் சந்ததிக்கு விளங்கக் கூடும்

எனைத் தொட்ட வாரிசுகள் எதிர்காலம்
நம்மூரில் எழும்புமென நம்பவில்லை,
மினக்கெட்டுப் படிப்பார்கள், பொருளாதார
மனத்தோடு பிடிப்பார்கள், மலினப்பட்ட
மனிதத்தில் கலைகொணருஞ் சாதனங்கள்
தத்தெடுத்த கலாசாரம் வீடு தோறும்
மனம் வாங்க நடத்தைகளும் சிந்தனையும்
அவற்றுள்ளே அடமானப் பட்டுப்போகும்.

"நூற்றாண்டைக் கொண்டவனாய் நானிருப்பேன்"
அதுகண்ட உறவுகளாய் நிமிர்ந்து நிற்பீர்!
தோற்காத சிந்தனைக்குள் சுருதிவரத்
தோதாக இளங்கோவும் சிலம்பு செய்தார்
வேர்க்காத மனத்தள் "கண்ணகிவழக்கு
உரை" தான் என் யாழ்நூலின் ஆணிவேர். நெல்
ஆர்குற்றிப் புடைத்தாலும் அரிசானால்
போதுமெனில் எவர்வருவார் குற்ற இங்கே?

என்னைச் சொல்லி பெரெடுத்து எளிய செயல்
கையாண்டு ஈனமுறல் இணக்கமல்ல,
"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர்
அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு" என்ற
வள்ளுவத்தின் அடையாள முளையானால்
வாழ்வென்றும் நீட்சியுறும், நேயம் சேரும்
வினைத்திறத்தால் வெல்லுங்கள். நதிக்குள்ளே
சிறுநீரைக் கழித்து விட்டால் உப்பாறாகா!

1980 06-12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| உரிமை | + | உணர்வு | = | எழுச்சி |
|---|---|---|---|---|

மானிடப்புழுக்களால் பூமிப்பழச்சாறு நினைத்த
வடிவங்களில் உறிஞ்சப்படுவதால்
கூனிய சிந்தனை கொழுத்துக் கொழுந்து விட்டு
எரிந்து ஓசோனைத் துளைத்தது
ஞானம் விஞ்ஞானமாய் மாறி மனங்களில் அறிவை
விதைத்து அர்ச்சனை செய்து
மானம் மரியாதை பகைப்புலம் கலாசாரம் அனைத்தும்
ஆசைக்குள் அடங்கிப் போனது.

இராவணப் படைகளும் கௌரவ சேனையும் இன்னமும்
உலாவித்திரிய, மேடையில்
'வரவுக்கும் பாண்டவர், இராமலக்குமணர்கள் திரைக்குப்
பின்னாலும் காட்சிக்கு இல்லை
நரபலியெடுக்கும் மனங்களின் ஆட்சி, கரங்களில்
கொலை செய்யும் கருவிக் கையாட்சி
உருவேறியாடும் மந்திவாதியாய் ஒவ்வொரு
நாட்டிலும் உச்சாடனங்கள்

சுதந்திரக் காற்றைச் சுவாசிக்குமுரிமை சிலருக்கு
மட்டுப்படுத்தப்பட்டதால்
உதிரமும், உயிரும் கொடுத்ததைப் பெற்ற பரம்பரை
ஒதுங்கி அடிமையாய் வாழ்தல்
விதிக்குப் பொருத்தமா? அரசியல் வேடங்கள்
அழுத்தி நசிப்பதால்
உதிக்கும் பரிதியும் என் சொந்த மென்ற சதித்
தந்திரங்கள் பலிப்பது எப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமொழி சமய கலாசார விழுமியம் பேணும்
மக்களைக் கொண்ட நாடொன்றில்
பலமுள்ள பெரும்பான்மை இனமே முக்கியம் என்ற
கோட்பாடு எழுச்சிக்குத் தடைதான்
இலைக்குள் ஒழிக்கும் பூச்சியாய் மற்றவர் ஒதுங்கிக்
கிடப்பதும் அறிவியல் மடமை
நிலவும் ஒரு நாள் சோரம் போகலாம், கிரகண மூட்டமும்
நீள் பொழுதில்லையே!

அலியைப் பெண்ணாகச் சோடித்துக் காட்டி அவளையே
விவாகம் செய்யென அழுத்தல்
'பொலி'யென்று பதரைப் போற்றுதல் போல, புத்திக்குள்
மிதந்து வடிக்கப்படும் அது
கிலியுடன் பொருத்தி இணக்கத்தைத் தைத்தல் பலத்தைப்
பறிக்கும் பயித்தியச் சிந்தனை
மூலிகை வெயிலிற் கிடப்பினும் பலம் பெறும் நூலிழை
பலதும் சேர்ந்தால் துணி (வு) வரும்

யாருக்குக் கீதையின் போதனை தேவை? நீதியை நிறுத்தவே
கிருஷ்ணன் சொன்னான்
ஊரும் வீடும் மறுக்கப்பட்டதால் உண்டான
போர்தான் பாரதமென்பது
வேரிங்கு வேகுது, "மாலைக்கு மலர்தா", கேட்பவர் கூடையில்
விழுவது சருகுதான்
ஆரிந்தத் தூரிகை பிடித்திந்தப் படம் கீறத் தக்கவர்
என்பதில் இழுபறி தொடருது

இடறி விழுந்தவன் ஓட்டத்தில் முதலிடம் இரக்கம்
இல்லாதவன் ஞானத்தவிசில்
கடனைக் கொடுத்தவன் கவலையில் மடிய,
காவாலித் தம்பி கடவுளவதாரம்
கடமை செய்யாதவன் பதவியில் உயர்தல்
காசில்லாதவன் கோடீசுவரன்
அடைவுகள் தகுதியின் அரவணைப்பின்றி
அர்த்தத்தைத்தின்று ஆட்சிபுரியுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டி, பொறாமை, வஞ்சகம், சூது புன்னகைக்கு
உள்ளே அடங்கிக் கிடப்பதை
பாட்டியின் கதைகள் வழியே யறிந்தும் ஏமாற்றப்
படுவதும் தொடர்வதும் அவலம்
நாட்டுப் பற்றிங்கு எவருக்குப் புரியுது? பெருமை
பேசுவதிலே நாடெலாம் பொசுங்குது
பாட்டுக்குத் தாளமும் இசையும் போல பல இனம்
இணைவதில் களிப்புறும் தேசம்

இனங்களுக்கிடையே விரிசலைக் கூட்டினால் எமது
தேசத்தின் எழுச்சியை எங்கோ
கனவிலே கற்பனை பண்ணலாம் பேச்சில் கூவுதல்
மட்டும் சுகராகமல்லவே?
மனங்களில் சனங்களுள் மலிந்ததாய் உரிமை
வழங்குதல் அரசியற் பண்பாடு பேணும்
இனப் பாகுபாடுகள் விதைக்கும் கரிசனை எந்தமண்
ஒற்றுமை விளைச்சலைக் கண்டது?

வில்லாய் முறியும் இராமனாய் எழாமல், வித்தையைப்
புரியாப் பார்த்தனாய்ப் இராமல்,
சொல்லொடு பொருந்தும் சிந்தனை செயல்களால்
சோர்ந்து போகாத உரிமைகள் வழங்கி
தள்ளாடும் நாட்டை அழிவிலே மீட்டு
அகதிகள் என்கிற வரலாறு கழுவி
எல்லா ஊர்ப்பெயர்களும் மாற்றமில்லாமல்
இதய சுத்தியினை எய்துதல் எழுச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேறாத ஆசைகள்

உணர்வுகளை வெளிக்கொணரும் ஊடகமாய்
உலாவருதல் மொழியின் சேவை
எனச் சொல்வார் மொழியியலார், இது உளத்தில்
இணங்கியெழும் அருட்டல், வாழ்வு
கணணிகளும், விலங்குகளும், பறவைச்சாதிக்
கணிப்புகளும் இதனுள் சேரும்
கனவினிலும் "வாய் பிதற்றல" மொழியூடே
கிளர்ந் தெழுமோர் ஏக்கம் பாரு

நிருவாணச் சிந்தனையுள் வெளிக் கொணர
முடியாத வாறெம்முள்ளே
கருவாகும் கோலங்கள் சொல்ல வொண்ணா
கனகட்டுப் பாடு முண்டே....!
பெருவாரி எண்ணங்கள் பொதுக்கி மனப்
பேழையுள்ளே போட்டமர்த்தி
நிறைவேறாது இருப்பன ஓர் உள்ளடுக்கில்
நிமிர்பாரம் நிலைத்து உருக்கும்.

ஆசைகளாம் நீசங்கள் போஷணையாய்
அமைந்தினிய பாடம் சொல்ல
வேசிகளாய் "பத்தனி"யாம் மனப்பெண்ணை
விளையாட நினைப்போமாயின்
மாசுபடிந் தெம்கடைசி காலத்தே
"மயக்கநிலை" தொட்டவேளை
பாசை எதென்று உணரமுடியாத பல
வார்த்தை சொல்லிப் பரிதவிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குமொரு நிறைவேறா ஆசையுண்டு
அது சொல்லல் முக்கியந்தான்
மினக் கெட்டுச் சிந்தித்து எழுதுகோல்
தொட்டு மன ஓட்டம் கக்கி
புனைகின்ற ஆக்கங்கள் யாருக்காய்
புறப்படுத்தி வெளியிட்டேனோ?
முனைப்பாக அது அவரைச் சேர்வதில்லை
முள்வேலித் தடைகளட ஏனோ?

சுரண்டல்களை நடத்துகிற "சுழியர்"களைச்
சாடுகிறேன் சும்மா இல்லை
வரண்டமனப் பேயர்களை இனங்காட்ட
வருந்துகிறேன் ஈரமில்லை.
கரம் உரிய உழைப்போனை உயரவைக்க
கவிசெய்தேன் பணிவே மீதம்
குரங்கின்கைப் பூமாலை போல் இவைகள்
குழிக்குள்ளே விழுமா? இல்லை

முன்சொன்ன பேர்வழிகள் இலக்கியத்தை
முகத்தின் முன் எடுப்பதில்லை.
தன்வயிற்றுப் பாட்டுக்கு நாள் முழுவதும்
உழைப்பவர்கள் படிக்கவில்லை.
முன்தொந்தி, விலாத்தொங்கி மின்விசிறி
சுற்றலின்கீழ் மூச்செடுப்போர்
'இந்நாட்டுச் செய்தி" மட்டும் படிப்பார்கள்
தவிப்பெனக்குத் தாங்க ஏலா!

1986-03-21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடை வெயில்

புவிக்கோளம் தன் பாதைச் சமாந்தரத்தைப்
புதுக்கி ஒரு கோணவழி கண்டாற்போல
"அவிச்சல்" இங்கே அவதிக்குட்படுத்தி நம்மை
அசுப்பின்றி அடுப்பில் வைத்த ஓட்டுக்குள்ளே
கவிகின்ற புகையாக மேக மூட்டம்
கண்மருட்டி வெண்ணிலவின் காட்சி தேய்க்க,
சவி அறுத்து, தள்ளாட்டிச் சாய்ந்து வீழ்த்தி
சருகுகளாய் உருமாற்றல் பெருக்குது இங்கே!

வியர்வை யொளிக் கண்ணாடிக்குள்ளே, நீண்ட
விறைத்தமயிர்ச் சடைப்பூதம் பல்லைக்காட்டிப்
பயமுறுத்தப் பேதலித்து ஓர் நிழலில் குந்தப்
பழங்கள் அதில் பூசணிக்காயாகி, வீழும்
பயிர்களுக்கு நீர் வார்க்கத் 'துரவு' தேடில்
படர் கொடியாய் "அட்டை" "புழு" நெளியுதங்கே!
'நயல்' போக்க நஞ்சுமருந்தைத் தெளித்தால்
நலிவதெல்லாம் தெளிப்போனே! நோய்பரம்பும்.

சூரியனைக் கொழுத்தவல்ல வெப்பம் இங்கோர்
சூளையிலே கனன்று அவதி வீச நீண்ட
மாரியினால் வயல் மூடும் "ஆத்துவாழை"
மிதந்து பயிர் அனைத்தையுமே அமுக்கிக்கொல்ல,
போரிட்டு வென்றுளது பெரியவெற்றி
போல் காட்டி, நீர்வடிய அதன் இறப்பும்
ஆரிங்கு நிலைத்திடுவார் எனும் வினாவால்
அடி அழுகி மனவேகத் தளிர் பொசுக்கும்.

'சுள்' என்று தொடுங்காற்று தென்றலாம், அச்
சுகத்துக்கும் துகில் களற்றி மகிழ்வாருண்டாம்.
வெள்ளத்தில் கிண்ணியிலே "கிள்ளி" வந்த
விஷநீரில் தெறிபுழுக்கள் விண்ணாணங்கள்.
தள்ளிப் போய்க்கிண றொன்றைக் கிண்டினால் அத்
தாழ்வுக்குள் உப்புநீர் நாவெரிக்கும்
"வெள்ளிவெச்சான் துள்ளிப்பாய்" என, யார் கைக்குள்
வெள்ளி? இங்கு கையெல்லாம் விறைச்சுப்போச்சே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளிக் காட்டுக்குள்ளே அனிச்சைப் பூக்கள்
முடிச்சுக்குள் தாள்க்காக, தேங்காய் "ஒல்லி"
கொள்ளியில்லா அடுப்பிலுள்ள ஆணைத்துக்குக்
குளவிக் கூட்டுத்தேனில் வைத்தியங்கள்
"வெள்ளணை"யில் பசு முலையில் உதிரத் 'துள்ளி'
விசர்பிடித்த மன நிலையில் கன்றுக்குட்டி,
பள்ளிக்குள் குறிப்பெழுத "அரத்தாள்"க்கட்டு
பார்த்ததிசை எங்குமொரு மாற்றுக் "கோரம்"

'ஆமை'களும் துள்ளுதிந்த எறிப்புக் கண்டு
அடிமனத்தின் விடாய் நீண்டு, விசாலித்து, ஆழ்ந்து
"தூமைச்சீலை" கழுவுங் கேணி யொன்றைத்
தேடியெனும் நீரருந்தச் செல்...! என்கின்ற
"சேமணயன்" சொல்லாகச் சீண்ட ...., என்ன?
சீ..... செத்துப்போனாலும் பறவாயில்லை
ஆமணக்கின் பால் கறந்து 'நா' நனைதது
அடுத்தவெள்ளம் வருமட்டும் காத்திருப்பேன்

1986-02-02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னையும் நினைமச்சான்

காய்நிறை மரந்தான் மச்சான் கல்லெறி படுகும், நல்ல
வாய்ப்புக்கள் சிலருக்கிந்த மண்ணிலே காசுகாய்க்கும்.
காய்ந்ததாய் மனதைவாட்டக் காய்க்குதா பொருளுனக்கு?
ஆய்வதற்காரும் வந்தால் ஏன் மச்சான் தாங்க மாட்டாய்?

நாய்படாப் பாடுபட்ட நாட்களை மறந்து போனாய்!
தாய் பெற்ற போது நீயும் என்னைப் போலான் பிறந்தாய்
ஓய்வுகள் இல்லா தென்றும் உழைக்கிறேன் மிச்சமில்லை
ஏய்ப்புண்டோர் நிலையைக் கொஞ்சம் எண்ணி நீ பாருமச்சான்

மாவிக்கப் போனே னென்றால் மறிக்குது கச்சான் மாறி
காவிலே உப்பு விற்றால் கொட்டுது வான்கிழிந்து
சாவுக்கும் வாழ்வுக்குள்ளும் சம்பவம் அதிம் ஆளே!
பூவிலே புழுத்தகாய்க்குள் வண்டுதான், மரமென்செய்யும்?

மயக்கங்கள் உனக்குள் வந்தால் மாய்வது உன்மனமா நானா?
உயர்ந்தது யாராலென்று ஒருகணம் நினைப்பாய் புள்ளே!
வயக் கெட்டுப்போன நாளில் அயர்வுகள் வருந்தான். வந்த
உயர்வுகள் உனக்கா சொந்தம்? உறவுகள் காயுது அத்தான்!

நாமெல்லாம் சேர்ந்துதானே நாட்டினோம் "கொடியை"என்றால்
ஓமென்றாய் மறுக்கவில்லை. ஏன்டாப்பா காய், பிஞ்செல்லாம்
நீ மட்டும் பறித்தெடுத்தாய்? நீதியும் பேசுகின்றாய்!
ஊமத்தம் பூப்பிடுங்கி உன்தேவை நிறை" என்கின்றாய்!

கோவணத்தோடு மண்ணைக்கொத்திப் புல்லரித்த நாளில்
ஆவணம் எதுவுமில்லை, ஆராரோ ஆண்டபூமி
"காவணம் புழு" சாப்பிட்ட கருவாடாய் என்னை வீச
"ஏவல்கள்" சொன்னாரென்றால் உன்சுயம் அழிஞ்சா போச்சு?

"உறுதி"யும் எழுதிப்போட்டாய் உச்சத்தில் வியாழன் இப்போ,
அறிவையும் தொலைத்தாய் அத்தான் ஆசைக்குள் அடங்கிப்போனாய்!
பொறுதியோ டிருந்தகாலம் போயிற்று, இனியென்பங்கைப்
பெறத்தக்க நடவடிக்கை எடுக்கிறேன். இருந்துபார் நீ!

1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரும் சீதனம் எனும் நோய்

ஊர்கூடி ஆண் பெண்
இருவரைச் சோடித்து
மணமகன் மணமகளாய்
கட்டிலுக்கு விட்டது
வாழ்க்கை மணத்தது,
வருடமொன்று சாய,
பெண்குழந்தை ஜனித்தது
அன்றிலிருந்து, பெற்றாராய்
தாய் தந்தையாய் மாற்றம்.
தொட்டில் துவண்டாடத்
துள்ளிக் குதித்தது குழந்தை
பெண் பிறந்ததல்ல வா.....?
பெருத்து நிமிர்வதற்குள்
சீதனம் கொடுப்பதற்கான
தேட்டத்தில் பெற்றார்நாட்டம்
இந்த வீட்டை மாளிகையாக்கலாம்
ஒரு ஏக்கர் நெற்காணி
மூணுலெட்சம் ரூபாயாம்
நாலு ஏக்கர் வாங்க
காசு சேகரிக்க வேணும்
எங்கெங்கோ ஓடி
எதிலெதிலோ வாடி
பெண் பெற்றவர்களாய்....!
உறவினர், சொந்தங்கள்
பிள்ளைக்குத் தெரியாது
தாய் தந்தை காண்பிக்கவில்லை
வீட்டுக்கும், ஊருக்கும்
நாட்டுக்கும் உதவத்தக்க
செல்வமாய் வளர்ப்பதை
மறந்தே போனார்.
ஏ.எல். வகுப்புவரை
பிள்ளை படித்தாள்
பெரிய மனிதர்களாய்
இவர்கள் நினைத்தவர்களை
உறவுகளாக்கி,
ஆப்பிழுத்த குரங்காய்
நெரிபட்டு மனமலைய
துவண்டு பணந்தேடினார்.
மேனகை என்பார்களே!
அப்படியொரு அழகழயாய்
பிள்ளை மதாளித்தாள்
மாப்பிள்ளைச் சந்தையில்
பேரம் பேசி வென்றார்கள்.
காதல், கூடுதல் காசிக்குவிலை போனது
மாதவி விலை போனதிற்கும்
இதற்கும் மாறுபட்ட கருத்து.
"கொழுத்த நெற்காணி
நாலு எக்கர்கள்,
வீடு வளவும்,வெற்றுவளவும்
உறுதிகளால் மாறின.
சீதனக்காசு பத்துலெட்சம் ரூபா
மாப்பிள்ளையின் தந்தைக்கு.
பெண் பூணப்பட்ட நகைகள்
பதினைந்து பவுண் தங்கம்
தாலி, கூறை, கலியாணச் செலவு, வீடியோ
படப்பிடிப்பு,
வேண்டிய உபசரிப்புக்கள்"
சொல்லி வேலையில்லை
"பெற்றார்" "மாமன் மாமி"யாய்....,
தேடித்தந்தவர்கள்
கடனோடுமட்டும் வெறுமையாய்...,
இதனால்தான் போல
சிவபெருமான்
சுடலையில் ஆடி
மண்டையோட்டில்
பிச்சையெடுத்து
தலை மாலையணிந்ததுடன்
தனக்கு பெண்பெற
தவஞ்செய்யவில்லை
அவருடைய மக்களுக்கும்
பிள்ளைப் பேறில்லை
அங்கு தொடராததை
மனிதன் நீட்டுகிறான்.

1980



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையின் உதாரணங்கள்

பசியாலே அழுத தன் குழந்தைகையில்
பாதிரொட்டி தாய்கொடுத்து அரவணைத்து
புசிக்க, முற்றத்திருத்தி விட்டுத் தனது வீட்டுக்
கடமைகளில் மூழ்கிவிட்டாள். பிள்ளைகையில்
கசிந்திருந்த ரொட்டியினை வாயில் வைத்து
கடிக்கையிலே கண்ட ஒரு காகம் வந்து
அசுப்பின்றி இறாஞ்சுகையில், வாயில் காயம்
வீரிட்டுக் கத்தியது குழந்தை. ரொட்டி...?

காகம் அதைக்கொண்டு தென்னை ஓலை மேலே
தனித்திருந்து கொத்தியுண்ணும் வேளை, வேறோர்
காகத்தின் கண்காணப் பங்குகேட்டுக்
கரைந்துவர, இரண்டுக்கும் சமர் எழுந்த
வேகத்தால், ரொட்டி விழ பூனையொன்று
வெடுக்கென்று கவ்விக்கொண்டு ஓடிப்போச்சு
தாகத்தால் காகம் இட்ட சத்தங்கேட்டுக்
கூடிவிட்ட கூட்டத்தால் அமளியாச்சு.

ஓடிவந்த தாய், குழந்தை உதட்டைப்பார்த்தாள்.
"நசமத்த காக்காயக் கொல்ல வேணும்
வாடா கண்ணா" என்று வழப்படுத்தி
வாய்துடைத்துக் கீறலுக்குச் சீனி பூசி
கூடிவிளையாட ஒரு குழந்தை தேட
அயல்வீடுபோனாள் தன்பிள்ளையோடு
தேடிவந்து " ஒற்றுமையின் சின்னம்" போட்ட
திருகுதாளத் கத்தலிலே காதடைக்கும்

அடுத்த வீட்டு அம்மா தன் சோற்றுப் பானை
அலசுதற்கு எடுத்துவந்து, பழையசோற்றை
மடுவினிலே கொட்டிவிட்டாள். கண்டு ஓர் காகம்
மடுவோர மரக்கிழையில் வந்தமர்ந்து
தொடுத்ததொரு "மாய்மாலம்" கா...கா.... என்று
தொட்டு அந்தச் சோறுண்ண கூட்டம் சேர்க்க
தடுப்பேதும் இல்லாத உணவைத் "தின்னத்
தான்" தனது இனமழைக்க கரையுதிங்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியிதை தனித்துண்ண மனம்கொள்ளாமல்,
நம்மோடு இனம் சேர்த்தால் இணக்கமென்றும்,
நம் செய்கைக்கு "இந்த அம்மா" சோற்றில் நஞ்சைக்
கலந்திங்கு எறிந்திருந்தால் நான்தனித்துச்
சும்மா ஏன் சாகவேணும்....? பலரைச் சேர்த்துச்
சாவோமே என்தான் அழைப்புபோல.....
அம்மாடி "நான்பெற்ற துன்பமெல்லாம்
பெறட்டுமிந்த உலகமெலாம்" என்ற நோக்கோ!

"நம்ப நட நம்பி நடவாதே" என்ற
நல்ல பழமொழி இப்போ எங்களுக்குள்
தும்பியாய்ச் சுழல்கிறது. சுற்றத்துக்கும்
துக்க சுகம் வெளியில் விட விருப்பமில்லை
தம்பாட்டில் தனித்தனியே இன்பம் சேர்க்கத்
தாக்கமுற்ற மனங்களுடன் பொறாமையான
தும்மலையும் இன்பமாய் ஏற்குங்காலம்
இசைவாக்கம் பறவைகளுக் கில்லையா ஏன்?

1974-05-02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமைக்குள் மலருங்காதல்

அவன் : முதிர்ந்த கதிர் முழுமை வளையுதடி - உன்வாய்
உதிர்ந்த மணியரிசில் சிரிக்குதடி
பதிந்த அடியிற் பனி ஒழுகுதடி - உன்னால்
அதிர்ந்தென் மனச்சுரங்கம் விரியுதடி

அவள் : வயலில் வரம்புக்களி சறுக்குதுகாண் - மச்சான்
பயிரின் சுணை நமைச்சல் சொறியுதிங்கே
கயலின் சுழிப்பை அங்கே பாருமச்சான் - எங்கள்
உயர்வின் விளைச்சலிங்கே பொலிகிறதே

அவன் : கயலின் சுழிப்பு என்னைச் சுண்டுதடி - பெண்ணே
பயிரின் பசுமையுந்தன் சிந்தையடி
வெயிலுன் வரவுகண்டே குளிருதடி - மேனி
தயிரின் தளதளப்பில் ஒழுகுதடி-

அவள் : பஞ்சுப் பொதி அடிகள் நோவெடுக்க - மச்சான்
நஞ்சுமரங்கள் கடந் தோடிவந்தேன்
மிஞ்சுக் கிடக்குதிங்கே வேலையெல்லாம் - சும்மா
கொஞ்சிக் கவிபடிக்க நேரமுண்டோ...?

அவன் : அரிவை அறுக்கையிலுன் அழகுருவம் - நெஞ்சில்
உரித்தென் உணர்வுகளை நெருடுதடி
உரிமை எனக்குனது மனசு ஒன்றே - மிஞ்சிப்
புரியும் உடல் வியர்வை நெளியுதடி

அவள் : போகமிதில் விளைச்சல் வீடுவர - எங்கள்
யோகந்திரண் டிணங்கிக் கூட்டிவரும்
தாகம் தணிக்கும் வரை நாம் தரிப்போம் - உங்கள்
வேகம் இவ் வயல் முழுதும் வெட்டுதற்கே-

13-02-1976



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடும்பு வேட்டை

"எங்களைப் பாதுகாப்பதாய் எங்கும் வாசித்து,
தங்களைப் பேணும் நல்லவர்" செயலால்,
மனிதன் குடியெழும்பி புலம் பெயர்ந்து
அகதிகளாய், அனாதைகளாய் "ஒத்துண்ண",
ஊரின் விளிம்பும், வயல் "அலவரை"யும்
இணையுமிடத்துப் புரன் வளவுகள் விளையாடுதிடலாய்
மாற்றம் பெற... இளசுகள் அம்மாச்சி, குஞ்சப்பா
மச்சான்மார், அண்ணன், தம்பி, மாமா.... சங்கிலிபோல்
வார், எல்லை, பாட்டம், கிளித்தட்டு,
விளையாட்டுக்களுக்கு அந்த நிலப்பரப்பு சம்மதம்
பொழுது சாய, நாளாந்தம், கலகலப்பு, துள்ளல்கள்,

அன்று....., இவர்களின் வரவுக்கு முன்னர்,
சட்டவரம்புகளால் அமைந்து,
அமுத சுரபியாய், ஊருக்கு உயிர் கொடுக்கும் உரிமையை
நிரந்தரமாய் ஏற்றிருந்து,
நீதி வேளாண்மைப் போர்வை மூடியிருந்த
"இசா"ப்பருவ வயலிலிருந்து
அந்த உடும்பு

திடலில் உலாவந்தது. உடலை நெளித்து நெளித்து
கால்களை நிதானமாகத் தூக்கி அழுத்தி வைத்து
வால் நிலத்தில் இழுபட்டுக் கோடு கீறிவர
இரட்டை நாக்கை இடையிடையே வெளியே நீட்டி
சுணக்கமான, சுதந்திரமான, தனிமைக்குள்
தன்னை மறந்து..... எதையோ தேடுகிற
இனிய, மென்மையான, தீட்சண்யம் இணைந்த
அகலப் பார்வையுடன் ஊர்ப்பக்கப் பயணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடுங் கூட்டமும் அதே வேளை அங்கு....
ஒருத்தனின் கவனத்தால் உடும்பு கண்ணுக்குள்விழ;
"அங்க பாரு உடும்பு.....
ஒவ்வொரு கால் சந்தும் அரைக்கிலோதேறும்"
"முழுசா நாலு கிலோ இருக்கும்"
உரித்து நிறுக்காமலே நிறைகள் "கொட்டுண்ண"

"டேய்...., வாய்க்கால்ப் பக்கமாப் போய்
இஞ்சால மறிச்சாப் புடிக்கலாம், நல்லகறி"
"எவளவு நாளாப் போச்சி உடும்பிறச்சிதிண்டு
இண்டைக்கு நமக்கு வாசிதாண்டா....."
மனவிருப்பத்தை நா ஒலியாக்கி
அவரவர் சிந்தித்த இன்ப மூட்டமாய் வெளிவிட,
சொன்னமாதிரிப் பதுங்கி, மறைப்புவழியே
உடும்பு காணாதவாறு வயல்பக்கமாகப் போய்
ஒரு கனைப்பும், செருமலும் போட.....,
திரும்பிப் பார்த்த உடும்பு வெருண்டு
கால்களில் வேகமேற்றி உதைப்போடு எதிர்த்திசைநோக்கி
மருட்சியுடன் ஓட...., எதிரேயும் எதிரிகளின்படை.
சமதளத்தில் சலனமற்ற தரிப்பு ஒரு விநாடி.
பக்கப் பார்வைகளால் அடையாள அளவை
எதிரிகள் நெருங்கிவருகிறார்கள்
வலது பக்கமாய் நாற்பத்தைந்தடி உயர்ந்து நின்ற
தென்னை வரவேற்று அழைத்தது.
அழுத்தமான பிடியுடன் தொண்ணூறு பாகை ஏற்றம்,
முப்பதடி ஏறியபின் வேகம் குறைந்த ஏறுமுகம்
இவர்கள் அதிர்ச்சியிலிருந்து மீளுகையில்
உடும்பு வட்டுக்குள் நுழைந்தது. சில நிமிட ஆலோசனை.
"டேய் மச்சான் நீ கம்போட மரத்தில ஏறு;
கீழ வருமெண்டா நாங்க அடிக்கிறம்"

மச்சான் தடித்த தடியுடன் ஏறத் தொடங்க;
புறவெட்டு, பொல்லு, கல், தடிகளுடன் மற்றவர்கள்
மரத்தைச் சுற்றி வேட்டைக்கு ஆயத்தம்
ஆரவாரமற்ற கவனம் அமைதி காத்தது.
வட்டுக்குள் மட்டை இடைவெளிகளால் புகுந்து
ஏறியவனை, உடும்பு கண்டதும்.......,
ஓலைவழியே போக..., ஓலை வளைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த கணம்....., நிலத்தை நோக்கி
உடும்பு வருகிறது. நாலுகால்களையும் விரித்து
பயம், பதைப்பு, பரபரப்பு, கோபிப்பு,
அதிர்ச்சி, நடுக்கம் எதுவும் அதனைத் தீண்டாத
மரக்குற்றி போல வந்து கொண்டிருந்தது.
உடும்புக்குள் வராத உணர்வலைகள் சில
கீழே நின்றவர்களை அந்த வேளைக்குள் உறுத்தின

"உடும்பு விழுந்து சுக்கு நூறானால்
நோக்கம் நிறைவேறாதே" என்கிற
கோழி முட்டை அங்கலாய்ப்பும் பிரமிப்பும்
அதே கணம், நின்றவர்களின் காலிடைவெளியால்
உடும்பு வேக ஓட்டம், சிதறாத உடம்புடன்,

பிரமிப்புகள் வேட்டையின் தோல்வியால்
வியர்வை ஒழுக, கூடியளவு எறிகள் பாய்ந்தன.
உடும்பை எதுவும் தீண்டவேயில்லை.
மரத்தில் ஏறிய மச்சான்..., சம்பவம்
கண்டதும், அண்மையால் இழுக்கப்பட்டிருந்த
11000V மின்வலுக்கம்பியில் விழுந்ததுபோல
அதிர்வுக்குள்.... ஓலை மட்டையைப் பிடித்தபடி
மௌனத்துடன், கண் இருள நிதானமாய்!

ஓட்டம், துரத்தல்களின் முடிவு வயல்
உள்ளேபோன உடும்பை இனி எப்படி எங்கே
தேடவும், பிடிக்கவும் உரித்துச்சமைத்து
தின்னவும், ருசிக்கவும், பல மெடுக்கவும் முடியும்?
வரம்பில் தடிகளைப் போட்டுக் குந்தி
மௌனிப்பவர்கள் நீளச் சிந்திக்கிறார்கள். இனி,
உடும்பு சந்திக்கவரும் சந்தர்ப்பம்....?
அதுமட்டும் நிம்மதிப் பெருமூச்சுவிட்டு
மூச்சடக்கியபடி நீருக்கடியில்
மணமேடையில் மணமகள்களால்
தாலி கட்டப்பட்ட மாப்பிளைமாராய்
ஈனவும், நக்கவும் முடியாமல்.....,
மரத்திலிருப்பவனும், விளையாட்டுகளும் கூட
அவர்களின் சிந்திப்பிலிருந்து வெகுதொலைவில்

*1991-01-04.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சுவாமி விவேகானந்த ஞானபானு"

லோகாயதப்பேய் தலையுயர்த்தி, "உலகிற் சமயப் புரிந்துணர்வு
சாகும் வேளை" "ஆயிரத்து எண்ணூற்றறுபத்து மூன்று" தையில்
தேகமெடுத்த இளம்பரிதி கல்கத்தாவின் மடிக்குள்ளே
ஏகாந்தப் பேரொளி யூட்ட இயைந்தகாதை உலகறியும்.

இளமைப் பெயராய் நரேந்திரனென்றீன்றோர் வாழ்த்தும் நமத்துள்
தெளிவாம் சிந்தை, மரியாதை, நேயம், துடுக்கு, அஞ்சாமை,
களிப்போடாராய்வூக்கம் பண் பாட்டினீரம், மனவுறுதி,
விளக்கம் கண்ட யோகதுயில், வீரச்சுவடு விளைய நின்றான்.

'எதற்கு மஞ்சாப் பிசாசென'த் தன் தோழர் அழைத்தார் என்றாலும்
அதற்காய் வருந்தா துவந்துமன உற்சாகத்தால் தெளிவு கண்டு
பதமாய் மரணதேவன் தோள் மீதேயமர்ந்து உலகவலம்
இதமாய் ஊர்ந்த மேதாவி "இயக்கமூல வேரறிந்தோன்."

வேதாகமத்தின் உட்பொருளும், உபநிடதங்கள் தெளி கருத்தும்
கீதைச்சாறும், இதிகாசம் இயம்பும் பொதிவும், உறுஞ்சியற
வாதச்சிறப்பும், வளமான உலகம் போற்றும் இலக்கியமும்,
சாதஞ் செய்துண சௌக்கியத்தால் தளைநதான் உலகோர்
மனமேடை

கல்லங் கனியும் பேச்சாற்றல், காட்சியடக்கும் மொழித்தேர்ச்சி,
வெல்லங் கசியும் முகத்தோற்றம், மூடம் களையும் மனத்தேறல்
உள்ளம் வெளுத்த மெய்ஞ்ஞானம், உறங்கா ஆய்வுதினத்தூறல்
"வெல்லுங் கடவுள் கண்டீரோ" என்றே யுன்னும் இளம் வீரன்.

ஞானி பலரைச் சந்தித்தும் ஞானக் கேள்வி விடை காணார்
"ஆனால் நீயோர் மேதாவி" என்றார். ஆசி பல சொரிந்தார்.
தானாய்த் தேடி ஞான ஒளி ராமக்கிருஷ்ண சூரியனை
மீனாய்ச் சேர்ந்தான். விடை கண்டான். மிளிர்ந்தான் பிஞ்சுச் சூரியனாய்

தட்ஷிணா கைலாயம் போய் நற்தவிப்பு அடங்க ஞானத்தேன்
கொட்டிக் கொடுத்தார்; கல்லூரிப் படிப்பே காணாப் பரமகம்ஸர்
பட்டப் படிப்புத் தேய்ந்தங்கே, புலக்காட்சியிலே இறை கண்டான்.
மெட்டுக் கிசைந்த பாவான விவேகாநந்தன் வியப்பம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் இறையை, மெய்யியலை, நிஷ்காமியத்தின் மையத்தை,
தாழ்ந்து குருவுக்குணர்வித்துத், தர்மப்பாலால் மண் கழுவ,
ஆழ்ந்த தவத்தை அர்ப்பணித்து, மெய்ம்மைச் சந்யாசம் பூண்டு,
நீண்ணாள் உலவுஞ் சூரியனாய் நிமிர்ந்தே உலகம் சுற்றி வந்தான்.

விக்கிரகத்தை வணங்குவது 'விழலர்' செய்யும் சுணக்கமெனப்
பக்குவமில்லார் பரிகசிப்பைப் பண்பாய் விளக்கஞ் செய்து மனச்
சிக்கல் விலக்கிச், சமயமெலாம் சிறப்பாய் இறையொன்றைச் சேரும்
பக்கஞ் சாராப் புனிதத்தைப் பகர்வோமென்ற பதஞானி.

விவேகாநந்த இளம்பானு உதயங்கண்ட பரஹம்ஸர்
தவத்தோடிருந்து சமாதியெய்த தழலில் மெழுகாயுருகிய பின்
அவதிக்குள்ளே பதமாகி, அவரின் பெயரால் இயக்கம் ஒன்றை
விவேகாநந்தப் பேரொளியான் வீச்சாய் உழுது விதையிட்டான்.

"இராமகிருஷ்ண பரமஹம்ஸர் துலக்கி வாழ்ந்த வேதாந்தத்
தரத்தை இங்கே நிலை நாட்டத் துறவுப் பயிற்சிச் சாதனைகள்"
பரப்பி,ச் "சாந்தி, இன, பேதமின்றி ஆண் பெண் குழந்தைகட்கும்
உரமாம் சமூகத் தொண்டாற்றும் இரு நோக்கு" இந்த இயக்கமென்றார்

குருநாதர் செய்யருளுரைகள், வேதவிளக்கம் போல் நுகர்ந்து,
பெரிதாய் அவரின் இலட்சியத்தில் வேதங்கற்றல், மிஷன் வழியே
கருவாய் ஞானம், பக்தி, கன்மம், யோகம் இணைந்து ஆன்ம நெறி
உருவாய் ஓங்க, உழைக்கவெனத் திருவாய் மலர்ந்த குருபக்தன்

சமூக வாழ்வின் அடித்தளத்தில் சலணப் படுவோர் உயர்ந்தெழவே
அமுதாம் கல்வி, ஆன்மீகம், அவர்க்கு வழங்கும் பெரும் பணியும்,
சுமையாய் வாழ்வை இயந்திரம் போல் சூடாய் ஓட்டும் இழி நிலையைக்
கமழும் மலரின் தோட்டமென மதிக்கச் செய்தல் கடனென்றார்.

ஏழைகளுக்குத் தொண்டாற்றல், பசித்த வயிற்றுக்குணவிடுதல்,
வாழ முடியா அநாதைகளுக்கு உதவியளித்தல், நோயாளர்
பீழைகண்டு தோள் கொடுத்தல், "பெருமான் தொண்டும் தரிசனமும்
வீழாப்பேறு" எனப்புகட்டி விளக்கம் கொடுத்த மேலாளன்

'சிறப்புப் பிறப்பால்' உயர்சாதி என்றே மகுடி கொண்டூதும்,
வரட்டுத் தனமும் இறுமாப்பும், வசையும் வெற்றுக் கற்பனையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுத்தும் செய்கை பாரதத்தை உலர்த்தி மனித நேயத்தைக்
கருக்கல் காண மனவருத்தம் என்ற மொழியால் இதம் செய்தோன்

சிக்காக்கோவின் சர்வமத மாநாடன்று கூட்டுகையில்
தக்க சமய அறிஞர் குழாம் தனித்தனியாகத் தனது மதம்
முக்காலும் பேருண்மை என்ற மூடத்தனத்தில் மெய்ம்மக்கப்
புக்கான் விவேகாநந்தப் பேர், புகழும் செம்மைச் சூரியனே!

பத்தாயிரம் பேர் குழுமி நின்ற 'கொலம்பஸ்' மண்டபத்துள்ளே
சத்தாம் வாலைத் துறவி வந்து "அமெரிக்காவின் சோதரரே!"
முத்தாய்ப்பாக விளித்த முதல் மொழியால் எல்லார் உணர்வுகளும்
பித்தாய்ச் செய்த தென்றல் குளிர் ஒளியைத் தெறிக்கும் கதிர்முகமே!

கடவுள், சமயம், நம்பிக்கை, பக்தி எல்லார் உளத்துமுண்டு
திடமாய் நம்பும் மானிடத்தைத் திருத்தும் சமயம், தளிர் விட்டு
முடமாய் நம்மை நடத்துவதா? மோசச் செயல்கள் போற்றுவதா?
அடமானங்கள் மனிதர்க்கேன்? எனுஞ் சொல் வரவேற்புப் பதிலாம்.

கிணற்றுத் தவளைக் கதைமூலம் கிளர்ந்த சமய விலாசத்தின்
இணக்கந் தீட்டி இறை பணியை இதுதானென்றே இனங்காட்டி,
மணக்குந் தெய்வத்தூய்மையெனில், "கருணை, சிநேகம்" உதவிசெய்து
பிணக்கை ஒழிக்கும் வழி சமைப்போம். பெரும் பேரிறைவன் எவர்க்குமொன்றே

சமய வேறுபாடுகளும், சண்டை, கொடிய பிடிவாதம்
இமயம் போல உயர்ந்திம்மண் இடருற்றழிய வழியுண்டு
அமையாச் செயலால் இரத்தாறு மீண்டும் மீண்டும் ஓடுவதால்,
குமைத்து நாகரீகத்தைக் கொலை செய்துலையில் இட்டவிக்கும்.

சமய மதங்கள் பேயுருவில் தோன்றாதிருந்தால் மக்களெலாம்,
சமமாய், இன்றை நிலையை விடமேலாம் நிலையிலிருந்திருப்பார்.
நமக்குள் மலிந்த இப்பேய்கள் மடியுங்காலம் கிட்டவுண்டு.
குமுதம் மலரும் இக்காலை.... நாமிங்கொன்றாய்க் கூடுகையில்....,

ஒலித்த மணியின் மங்கலத்தால் உறவிற்கலத்தல் உயரட்டும்
வாளால், எழுதுகோலாலே மனுவை மனுவே பகைக்கின்ற
மலிவுச் செயல்கள் அகலட்டும், மக்கள் எல்லாம் ஒன்றினையே
தெளிவாய்க்காண அன்பென்றும் எழுக! நிறைவு பெறுக தொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதுப் பொதிவும் தத்துவத்தின் கிரணம் பாய்ந்த மொழி வீச்சும்
வாதைப்பட்டோர் மனக்கருமை வடுவை மாற்றி இதம் சுரக்கப்
பாதம் பதித்த தடமெல்லாம் பணியும் திருவும் இருள் மாய்க்க
வேதப் பொருளின் மாற்றுருவாய் விவேகாநந்தர் பரிணமித்தார்.

"நீயும் வாழு, வாழவிடு" நீயா உலகை ஆளுகிறாய்,
மாயைத் தோற்ற மயக்குகளை மலினப்படுத்தாதிரு" என்று
பேயாம் உலோகாயதம் உடைத்த பெருமைப்பானு விவேகாநந்
தாயாம் உன்றன் பேரொளியிற் தரித்தோம், தெளிந்தோம், வாழ்கின்றோம்.

நூறாண்டுன்றன் பிரசங்கச் சுடரின் விழவை நாம் கொண்டோம்.
நூறாண்டென்ன ஆயிரமாண்டருளும் ஒளியை நீ கொண்டாய்
பேறாய் இந்து மதம் பெற்ற பேறே ஞான பானு நெறி
ஊறிச் சுடரும் ஆன்மீகம், இணக்கம் பெறுக வையகமே

சுவாமி விவேகாநந்தர் சிக்காக்கோப் பிரசங்க நூற்றாண்டு விழாவுக்காக
கொழும்பு தமிழ்ச் சங்கம் நடாத்திய, நாடளாவிய கவிதைப் போட்டியில்
திறமைச் சான்றிதழ் பெற்ற கவிதை - 15-03-1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகங்கள்


சூரியனின் முகம் ஒளிமூல மெனில்....;
இரவின் முகம் அமாவாசைதானோ?
நிலத்தின் முகம் நிலைத்த இமயம்.
கடலின் முகம் அகங்கார அலைகள்
அலைகளின் முகங்களில் நுரையின் புன்னகை
வளி அதை உருவி மூக்கைத் துடைக்கும்
மரங்களின் முகங்கள் செழித்த இலைகள்
எங்கும் எதிலும் முகங்களின் ஆட்சி.
மனித முகங்களில் சுவை முகமொன்பது.
இதய முகங்கள் விரிந்து, சுருங்க
மனங்களின் முகங்கள் மாறுபாடாகுது
உதடுகள் பெரிதாய் அமைந்து நெளிய
நிறை வேற்றாததைச் செய்ததாய்ச் சொல்லி,
படைக்க ஏலாததைப் பாசாங்கு காட்டி
குமணனாய் நடித்தல் நாவின் முகம்.
கடலிலே தாமரை முளைத்துப் பூக்கும்
பூவிலே பிரமன் போல அமரலாம் என
நிறக் கனவு காண்பது ஏமாற்றத்தின் முகம்.
" உன் முதுகில் ஏறுகிறேன் சுமந்து போய்
சொல்லுமிடத்தில் இறக்கு" என்று ஏறுவது
கையிலுள்ள ஆயுத, ஆவேச, அதிகாரமுகம்
கூட்டிலிருந்த குருவியின் குஞ்சை
மரமேறிக் கூடு பிரித்துப் பிடித்து
மயிர்களைப் பிடுங்கி, கழுத்தறுத்து
பொசுக்கி வீசுதல் வன்செயலின் முகம்
சோதனைச் சாவடி தந்த வேதனையை
ஏற்று உள் வெதும்புதல் விதியின் முகமா?
சுற்றி வளைப்பில் பிடிபட்ட அப்பாவியின்
கண்கட்டப்பட்டதும் காண்பது கொலைமுகம்
"பல்லியைக் கொல்வது பாபமில்லை" எனல்
இனத்தை அழிக்கும் "புண்ணிய முகம்"
எல்லாம் கண்டும் அசையாமல் நிற்கிற
ஒற்றைப்பனைக்கு இருப்பான முகம்
தூக்கணாங் குருவியின் கூட்டைத் தாங்கிய
ஓலையின் முகமும் உணர்வின் ஊஞ்சல்
எங்கும் முகங்கள் விநாடிக்கு விநாடி
தங்கள் சுயங்களைப் போர்க்கும் முகங்கள்
அனைத்தும் இறைவன் விரிக்கும் முகங்கள்
1995-04-05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்



தில்லை மண்டூர்ப் பதியிற் பிறந்தவரும் விபுலபுரியான காரைதீவில் புகுந்தவரும், காரைதீவு கம்பன் கலைக்கழகப் போஷகரும், ஒய்வு பெற்ற அதிபருமாகிய கவிஞர் பொன். சிவானந்தன் கவிஞராக மட்டுமன்றி, சிறந்த கட்டுரையாளராகவும், பேச்சாளராகவும் இனங்காணப்பட்டவர்.

மரபுக் கவிதையிலிருந்து புதுக் கவிதை வரை புகும் வல்லமை பெற்ற இவர் மண்வளச் சொற்களையும், உவமை, உருவக அணிகளையும் கையாள்வதில் திறமையுடையவர். நாடளாவிய மட்டத்தில் பல கவிதைப் போட்டிகளில் கலந்து பல பரிசுகள், பாராட்டுகள் பெற்றதோடு, வானொலிக் கவியரங்குகள், பிரதேசத்தின் கவியரங்குகளிலெல்லாம் பங்குபற்றிய சிறப்பைக் கொண்டவர். காரைதீவின் பல கழகங்களின் கவிஞனாகச் செயற்படுபவர். பல தரப்பட்ட பாட்டுகள் பாடிப் பாராட்டுப் பெற்றவர்.

குறிப்பாக 1993ம் ஆண்டு கவிஞரின் சமய, சமூக, கலாசார சேவையினைப் பாராட்டி அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம் இவருக்குக் 'கவிச் செல்வர்' என்ற பட்டத்தினை முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவால் வழங்கச் செய்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். தென்கிழக்கு கலாசாரப் பேரவை நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவுமுள்ளார்.

இரா - கிருஷ்ணபிள்ளை

ILAMPIRAI OFFSET - MARUTHAMUNAI *Cover Printed by UNIE ARTS(PVT) LTD.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org